
# பண் கோப் மலர்

## 2015



பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ. சங்கம்

பண்டத்தரிப்பு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண் கோப் மலர்
# 2015

**பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கம்**
**பண்டத்தரிப்பு**

7769(P)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்

இதழின் பெயர் - பண்கோப் மலர்

வகை - கூட்டுறவு

மலர்க்குழு - 1. திரு. வி. சுப்பிரமணியம் (தலைவர்)

2. திரு. க. ரவிச்சந்திரன் (பொதுமுகாமையாளர்)

3. திரு. பொ. தெய்வேந்திரம்

4. திருமதி. சோ. கருணாகரன்

5. திருமதி. ல. மரியநேசன்

6. செல்வி. ச. சுபோதினி

பதிப்பு - 2015

பக்கங்கள் - xi + 70

பிரதிகள் - 300

அச்சுப்பதிப்பு - றூபன் பிறிண்டேர்ஸ்,

ஆனைக்கோட்டை.

அளவு - B5

தாளின் நிறை - 70g

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | முகவுரை | i |
| 2. | ஆசிச்செய்தி | |
| | 1. ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் | ii |
| | 2. அருட்பணி. யஸ்ரின் ஞானப்பிரகாசம் | iii |
| 3. | வாழ்த்துச் செய்திகள் | |
| | 1. அமைச்சர் - பொ. ஐங்கரநேசன் | iv |
| | 2. அரசாங்க அதிபர் - நா. வேதநாயகன் | v |
| | 3. கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் - திருமதி. மதுமதி வசந்தகுமார் | vi |
| | 4. பிரதேச செயலர் - உ. யசோதா | vii |
| | 5. கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுச் செயலாளர் - பொ. வாகீசன் | viii |
| | 6. கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் - சு. கணேசு | ix |
| | 7. கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் - வி.கே. அருந்தவநாதன் | x |
| | 8. மக்கள் வங்கி முகாமையாளர் - மா. கலிஸ்ரஸ் | xi |
| 4. | தலைவரின் உள்ளத்திலிருந்து | 1 |
| 5. | தலைமைத்துவம் | 7 |
| 6. | வரலாற்றுப் பாதையில் எமது சங்கம் | 10 |
| 7. | கூட்டுறவின் முக்கியத்துவம் | 16 |
| 8. | எம் கூட்டு உறவு | 18 |
| 9. | எனது உள்ளக்கிடக்கையில் பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கம் | 19 |
| 10. | கூட்டுறவு பற்றிய பொதுவான கண்ணோட்டம் | 23 |
| 11. | பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கத்தின் உற்பத்திப் பகுதி | 25 |
| 12. | மக்களுக்கு அதியுயர் சேவை வழங்கக் கூடிய நிறுவனம் கூட்டுறவுச் சங்க அமைப்பே ஆகும் | 29 |
| 13. | எம்மோடு ஒன்றிணைந்த கூட்டுறவு | 31 |
| 14. | எமது ப.நே.கூ.சங்கம் நுகர்ச்சி வியாபாரத்தில் எதிர்நோக்கும் சவால்கள் | 34 |
| 15. | பண் நகரில் கூட்டுறவு | 38 |
| 16. | கூட்டுறவுக் கொள்கைகளில் கல்வி பயிற்சித் தகவல் | 40 |
| 17. | சமூக வளர்ச்சிக்கு கிராமிய வங்கியின் பங்கு | 43 |
| 18. | நேபாள சுற்றுப்பயணம் எமது பார்வையில்..... | 46 |
| 19. | கூட்டுறவின் குமுறல் | 49 |
| 20. | கூட்டுறவு வளர்ச்சியில் சமபங்காளிகள் அதன் பணியாளர்கள் | 50 |
| 21. | பிரதேசத்தின் முன்னோடி கூட்டுறவாளர் S. கந்தையா J.P அவர்கள் | 53 |
| 22. | அணையாத சமூக ஜோதி அமரர் நீ. யேம்ஸ் | 58 |
| 23. | கூட்டுறவின் தலைவர்கள் (1971 தொடக்கம் இன்றுவரை) | 60 |
| 24. | சங்கத் தொழிற்பாடுகள் | 64 |
| 25. | கடந்த கால தலைவர், பொதுமுகாமையாளர், கணக்காளர் விபரம் | 65 |
| 26. | எமது சங்கப் பணியாளர் விபரம் | 66 |
| 27. | மலர் வெளியீட்டுக்கான அனுசரணையாளர்கள் | 69 |
| 28. | பண் கோப்பின் இதயம் கனிந்த நன்றிகள் | 70 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

பண் பரிஷ் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கமானது தனது இரண்டாவது நூலை வெளியிடுவதில் மனமகிழ்வடைகிறது.

தமது பொருளாதார, சமூக, கலாசார தேவைகளையும் எதிர் பார்ப்புக்களையும் பூர்த்தி செய்து கொள்வதற்காகச் சொந்த விருப்பின் பெயரில் ஒன்றுசேர்ந்தவர்களால் சுயேட்சையாக உருவாக்கப்படும் அமைப்பே கூட்டுறவு. அந்த அமைப்பின் கொள்கைகளுக்கு ஏற்ப எமது சங்கம் சார்ந்த விடயங்களை சேர்த்து முழுமையான ஒரு முயற்சியாக இந்நூல் அமைகிறது.

அந்த வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொருளியல்துறைத் தலைவர் அவர்களினால் கூட்டுறவின் முக்கியத்தும் பற்றி அதாவது கைத்தறியில் ஆரம்பித்த கைத்தொழில் யுகம் கணணியை வலம் வரும் இக்காலத்திலே மனிதனுடைய எல்லாச் செயற்பாடுகளுக்கும் காரண கர்த்தாவாக அமைந்திருப்பது கூட்டுறவே என்ற கருத்துடன் தொடர்கிறது.

அடுத்து எமது பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் நுகர்ச்சி வியாபாரத்தில் எதிர்நோக்கும் சவால்கள் பற்றியும் மனிதன் உயிர்வாழ்வதற்கு நீர் எவ்வளவு அத்தியாவசியமானதோ அதே போன்று நிலைநாட்டிச் செல்கின்றது.

கிராமிய வங்கிப் பகுதியினால் அதன் செயற்பாடுகள் பற்றிய விடயங்களின் தொகுப்பாய் இன்றைய சமூக வளர்ச்சிக்கு கிராமிய வங்கிகள் மக்களுக்கு எவ்வாறான சேவைகளை வழங்குகிறது என்பதனை எடுத்துச் சொல்கிறது,

எம் பண் கோப் பற்றிய தகவல்களான நுகர்ச்சிப் பகுதி, உற்பத்திப்பகுதி, வங்கிப்பகுதி சார்ந்த விடயங்களும் அதன் செயற்பாடுகளுடன் பணியாளர்களின் கூட்டுறவின் குமுறல், பண் நகரில் கூட்டுறவு அவ்வாறு சில கவிதைகளையும் தாங்கி ப.நோ.கூ.ச. வரலாற்றுப் பொக்கிஷங்களைப் பேணுவதற்கான ஆவணமாக இந்நூல் வெளியிடப்படுகின்றது.

மலர்க் குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அருளாசிச் செய்தி

அன்புள்ளவர்கட்கு!

பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ. சங்கம் தனது பணியாளர்கள் 7 பேர் சேவையில் 25வது ஆண்டு அகவை அடைந்ததையிட்டு பெருமன மகிழ்ச்சியடைகின்றோம். மக்களின் சேவைகளில் ஈடுபடும் சங்கம் மக்களின் தேவைகளை எந்தெந்த தேவைகளில் பூர்த்தி செய்ய வேண்டும் என்பதனை காலத்தின் தேவையை உணர்ந்து பண்டத்தரிப்பு மக்களின் குறைகளைத் தீர்க்கும் சங்கமாக நிமிர்ந்து நிற்பது எல்லோருக்கும் மன மகிழ்ச்சியைத் தருகின்றது. இதனது சேவை சிறப்பு செய்வோரைக் கௌரவித்து சிறப்புச் செய்வது, பணியாற்றவரும் அன்பர்களை ஊக்குவிப்பதாகவும், சேவையைச் செய்வோரை நன்றிக்குரியவர்களாக ஆக்குவதும் சிந்தனைக்கு உரிய செயலாகும். இப்பணி தொடர்ந்து நடைபெற அனைவரும் ஒத்துழைப்பு வழங்க சங்கத்தின் பணி தொடர்ந்து நடைபெறவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு".

இரண்டாவது குருமஹாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிச்செய்தி

பண்டத்தரிப்பு பரிஷ் ப. நோ. கூ. சங்கம் இலங்கைத் தீவில் குறிப்பாக யாழ் மண்ணில் தனக்கென ஓர் இடத்தைப் பிடித்த ஓர் சங்கம். இந்த சங்கம் இந்நிலைக்கு வருவதற்கு காரண கர்த்தாக்களாக இருந்தவர்கள் சங்கத்தின் பணியாளர்கள். ஆகவே இந்தத் தருணத்தில் கூட்டுறவு மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதையிட்டுப் பெரும் மகிழ்வடைகின்றேன்.

ஊதியத்திற்காக ஊழியம் செய்யாத ஊழியர்கள் தான் இந்த சங்கப் பணியாளர்கள். இன்று இந்தச் சங்கம் சிறப்புடன் முதல் தரமான சேவையை நோக்கமாகக் கொண்டு வெற்றிநடை போடுகிறது என்றால் சங்கப் பணியாளர்களின் அயராத உழைப்பும் அர்ப்பணிப்புள்ள பணியுமாகும். இவர்கள் எல்லோரையும் மனமார வாழ்த்தி இறையாசீர் வேண்டிநிற்கின்றேன்.

இந்த மகத்தான நேரத்தில், கடந்த காலத்தின் இந்த சங்கத்தினுடைய செயற்பாடுகளை நினைக்கின்ற போது இன்றும் என் நெஞ்சை வருடிச் செல்கின்றது. **1976** முதல் **2002** வரை நான் இளவாலைப் பகுதியில் பணிசெய்த காலமதில் சங்கத்தின் செயற்பாடுகளை நான் கண்கூடாகப் பார்த்தவன் என்ற வகையில், அதன் மக்கள் நலசேவைக்கு சான்றுபகர்ந்து வாழ்த்துகின்றேன். இந்த சங்கம் மக்களுடைய பொருளாதார வாழ்விற்கு பெரும் பங்காற்றியதுடன், சமூகப் பொருளாதார வளர்ச்சியிலும் குறிப்பிடத்தக்க தாக்கத்தை உண்டு பண்ணியது. அதிலும் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய ஒரு விடயம், இத்தீவின் பல பாகங்களிலும் இருந்து மக்கள் வந்து பயன்பெற்றுச் சென்றதை யாவரும் அறிவர்.

அந்த வகையில் மக்கள் நலனை முதல் நோக்கமாகக் கொண்டு செயற்படுகின்ற இந்தச் சங்கத்தின் செயற்பாடுகளையும், அதன் பணியாளர் களுடைய அயராத கடின உழைப்பையும் நெஞ்சார வாழ்த்தி இறையாசீர் வேண்டிநிற்கின்றேன். இறைவன் உங்கள் எல்லோரையும், உங்களுடைய கடின உழைப்பையும் ஆசீர்வதிப்பாராக.

நன்றி.

என்றும் அன்புடன்,

அருட்பணி கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டத்தரிப்பு பரிஷ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மேன்மேலும் வளர்ச்சி அடைய இறைஞ்சுகிறேன்



பண்டத்தரிப்பு பரிஷ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மூன்று தசாப்த காலத்துக்கும் மேலான சிறப்பான வரலாற்றைக் கொண்டது.

கிராமத்துக்குக் கிராமம் 1950ஆம் ஆண்டுமுதல் பண்டகசாலைகளாக இயங்கிவந்த அனைத்தும் இணைக்கப் பட்டு 1971இல் பண்டத்தரிப்பு பரிஷ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமாகப் பரிணாமம் பெற்றபோதிருந்து இச்சங்கம் பல சிறப்பான சேவைகளை வழங்கி வருகிறது.

நான் பாடசாலையில் உயர்தரம் பயின்ற காலப்பகுதியில் பரிஷ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் உற்பத்தி செய்யப்பட்ட காற்சட்டை மற்றும் சட்டைத் துணிகளை மாணவர்கள் வாங்குவதில் கொண்டிருந்த ஆர்வம் இன்றும் என்மனதில் பதிந்திருக்கிறது. பரிஷ் துணிகளினாலான ஆடைகளை அணிவதைப் பெரும் கௌரவமாகவே கருதினார்கள். அந்த அளவுக்கு பரிஷ் துணி உற்பத்திகள் தரமானதாக இருந்தன. துணிகள் மாத்திரம் அல்லாமல் சவர்க்காரம், தீப்பெட்டி, வெதுப்பக உற்பத்திகள் என்பன "பண் கோப்" என்ற வர்த்தக நாமத்துடன் விற்பனை செய்யப்பட்டது நினைவில் உள்ளது.

வளர்ச்சிப் பாதையில் வீறு நடைபோட்ட பண்டத்தரிப்பு பரிஷ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், போர்ச்சூழல் காரணமாகப் பல்வேறு தடைகளையும் பின்னடைவுகளையும் சந்தித்தபோதும், இப்போது மீண்டும் வளர்ச்சி காண ஆரம்பித்துள்ளது.

பண்டத்தரிப்பு பரிஷ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் அதன் உறுப்பினர்களுக்கும் போரினால் நலிவடைந்திருக்கும் எமது சமூகத்துக்கும் அளப்பரிய சேவை ஆற்றுவதற்கு மேன்மேலும் வளர்ச்சி அடைய நான் வணங்கும் இயற்கை என்னும் இறைவனை இறைஞ்சுகிறேன்.

பொ.ஐங்கரநேசன்

அமைச்சர்

விவசாய, கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி,

கூட்டுறவு அபிவிருத்தி, உணவு வழங்கல், நீர் வழங்கல்,

நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சு,

வடமாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி

பண்டத்தரிப்பு பரிஷ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் தனது பணியாளர்கள் 25ம் வருட சேவையினைப் பூர்த்தி செய்தமையினை முன்னிட்டு பிரதேச மூத்த கூட்டுறவாளர் களையும் கௌரவிக்கும் வகையில் நடைபெறும் நிகழ்வில் வெளியீடு செய்யப்படும் கூட்டுறவு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

1950களில் பண்டகசாலை சங்கங்கள் என ஆரம்பிக்கப்பட்டாலும் 1971ஆம் ஆண்டு பண்டத்தரிப்பு பரிஷ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் என ஸ்தாபிக்கப்பட்டதாக அறியப்படுகிறது. இதன் ஆரம்பக்கட்டப் பணியாக பொருட் பங்கீடு, விநியோகம் என்பன காணப்பட்டாலும் பின்னர் புடவைகள், தைத்த ஆடைகள், அரிசிமா, தூள் போன்ற பலசரக்கு, நல்லெண்ணை உற்பத்தி போன்றவற்றிற்கான ஊக்குவிப்பும் சந்தைப்படுத்தலுக்குமான மத்திய நிலையமாக விளங்கியிருக்கின்றது.

தற்பொழுது 17 கிளைகளையும் கோப்சிற்றி, எரிபொருள் நிரப்பு நிலையம், புடவை நிலையம், கிராமிய வங்கிகள் எனத் தனது பொதுமக்கள் சேவையினை விஸ்தரித்து நிறைவாக வழங்கி வருவதும் பாராட்டப்பட வேண்டியதொன்றாகும். குறிப்பாக நெல் கொள்வனவு செய்யப்பட்டு அரிசி மற்றும் அரிசிமா என்பவற்றையும் தரமான பாண் உற்பத்தியினையும் மேற்கொள்ளும் அதேவேளை சுத்தமான நல்லெண்ணை உற்பத்தியிலும் சிறந்து விளங்கியமை போன்ற செயற்பாட்டினை முன்னிட்டு 2012ம், 2013ம் ஆண்டுகளில் மாவட்டத்தில் இதற்கு முதலிடம் வழங்கி வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் கௌரவித்தமையினையும் நினைவுகூற முடியும். அத்தோடு மாகாணமட்டத்திலும் 2012ம் ஆண்டு 2ம் இடம் கிடைத்தமையும் இதன் சேவைத் திறமையினை மேலும் வெளிப்படுத்துவதாகவே அமைகின்றது.

அர்ப்பணிப்பான சேவையினை வழங்கிய மூத்த கூட்டுறவாளரைக் கௌரவிக்கும் இவ் வேளையில் இதன் பணிகளையும் பாராட்டுவதில் தவறில்லை. மென்மேலும் இதன் பணி சிறக்க எல்லாம் வல்ல பரம்பொருளை வேண்டி வாழ்த்துகின்றேன்.

நன்றி

N. V...

நா. வேதநாயகன்
அரசாங்க அதிபர்
யாழ் மாவட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

பண்டத்தரிப்பு பரிஷ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 25 வது வருட சேவையைப் பூர்த்தி செய்த பணியாளர் கௌரவிப்பும், பிரதேச மூத்த கூட்டுறவாளர் கௌரவிப்பும் சங்கத்தால் நடாத்தப்பட உள்ளதையிட்டு மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். இச்சங்கம் தனது அங்கத்தவர்களுக்கும், அப்பிரதேச மக்களுக்கும் வழங்கி வருகின்ற சேவையின் மூலம் சிறப்புப் பெற்று விளங்குகின்றது. இன்றைய காலத் தேவைகளுக்கு ஏற்ப சங்கச் செயற்பாடுகளை நவீனமயப்படுத்தி சங்கம் வளர்ச்சி அடைய எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஒரு சங்கத்தின் வளர்ச்சியில் தூண்களாக நின்று செயற்படும் பணியாளர்கள் மற்றும் கூட்டுறவாளர்கள் கௌரவிக்கப்படுவது மிகவும் இன்றியமையாத விடயமாகும். அவர்களின் செயற்பாடே சங்க வளர்ச்சிக்கு உறுதுணையாக உள்ளது. பணியாளர் நலன்களை சிறப்புறப்பேணி கூட்டுறவு அங்கத்தவர்களின் தேவைகளைச் சிறப்பாக நிறைவேற்றி பண்டத்தரிப்பு பரிஷ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் சகல சிறப்புக்களுடனும் செயற்பட எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திருமதி. மதுமதி வசந்தகுமார்
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்,
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும்
வடக்கு மாகாணம்,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

இலங்கைத் தீவின் வடக்கே அமைந்துள்ள யாழ் குடாநாட்டின் வலிகாமம் தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள பண்டத்தரிப்பு பரிஷ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் யாழ் குடாநாட்டில் வெற்றிகரமாக இயங்கிவரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் ஒன்றாகும். இச் சங்கமானது கடந்த காலங்களில் மக்களுக்குச் சிறந்த முறையில் சேவையினை வழங்கி தனக்கென ஓர் இடத்தினை மக்கள் மனங்களில் பெற்றுள்ளமை யாவரும் அறிந்ததே. குறிப்பாகக் கடந்த காலங்களில் நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலைகளின்போது இச்சங்கத்தின் செயற்பாடுகள் மக்களால் பெரிதும் போற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இச்சங்கத்தின் வளர்ச்சிக்காக கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாகப் பணியாற்றிய பணியாளர்களும் பிரதேச கூட்டுறவாளர்களும் கௌரவிக்கப்படும் இவ்வேளையில் கூட்டுறவு மலர் ஒன்றும் வெளியிடப்படுகின்றமை சிறப்பம்சமாகும். இக்கூட்டுறவு மலரானது கூட்டுறவுத்துறை சார்ந்த உத்தியோகத்தர்களது ஆக்கங்களான சங்கவரலாறு, சங்கத்தின் செயற்பாடுகள் போன்ற பல ஆக்கங்களை தாங்கி அழகான முறையில் வெளியிடப்படுகின்றமை பாராட்டிற்குரிய விடயமாகும்.

இவ்வகையில் இன்று இடம்பெறும் கௌரவிப்பு நிகழ்வுகள் மற்றும் கூட்டுறவு மலர் வெளியீடு ஆகியன சிறப்பாக இடம்பெற வாழ்த்தி எனது வாழ்த்துச் செய்தியினை வழங்குவதையிட்டு பெருமகிழ்வடைகின்றேன்.

உ. யசோதா
பிரதேசசெயலர்,
சண்டிலிப்பாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச்செய்தி

எழில் கொஞ்சும் ஈழமணித் திருநாட்டின் தலையாக விளங்கும் யாழ்ப்பாண மாநகரில், கூட்டுறவின் உயிர்நாடியாக விளங்கிய கூட்டுறவின் தந்தை திருவாளர் வீரசிங்கம் ஐயா அவர்கள் அவதரித்த இந்த மண்ணில், கூட்டுறவின் தாற்பரியத்தைப் பறைசாற்றி கூட்டுறவை வாழவைத்த கூட்டுறவுச் சங்கங்களில் முதன்மையானது பண்டத்தரிப்பு பரிஷ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் என்றால் அது மிகையாகாது.

1971ஆம் ஆண்டில் சட்டபூர்வமாகப் பதிவு செய்யப்பட்டு பல்வேறு கிளைகளை பிரதேசமெங்கும் பரப்பி ஆலமரமாகப் பரந்து விரிந்த இச்சங்கத்தின் மக்கள் சேவைகளை மனதார வியந்து பாராட்டுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். பல்பொருள் விற்பனையை ஆரம்பச் செயற்பாடாகக் கொண்ட இச்சங்கம் நாளடைவில் "பண்கோப்" சின்னத்துடனான உற்பத்தியாகப் பரிணமித்து காலப்போக்கில் 17 கிளைகள், கோப்சிற்றி, எரிபொருள் நிலையம், புடவை நிலையம், 3 கிராமிய வங்கிக் கிளைகள் என சேவை நிலையங்களை விஸ்தரித்து 88 பணியாளர்களுடன் முதன்மைமிக்க சங்கமாக இயங்குவது பெருமைக்குரியதாகும்.

கூட்டுறவுச் சங்கங்களின் சேவைத்தரவரிசையில் 2012ஆம் ஆண்டில் மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தையும் மாகாண மட்டத்தில் இரண்டாம் இடத்தையும் 2013ஆம் ஆண்டில் மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தையும் பெற்றமை, இச்சங்கம் ஆற்றிய சேவைக்கான சாதனைத் தரப்படுத்தலே இதன் முன்னணித்துவத்தை விளம்பி நிற்பதாக அமைகிறது.

சங்கத்தின் தன்னலமற்ற சேவைகளுக்கு ஆணிவேராகப் போசணை ஊட்டும் இயக்குனர் சபைக்கும் சங்கத்தின் இயந்திரப் பாகங்களாக மிளிரும் பணியாளர்களுக்கும் சங்கத்தின் உயிர்நாடியான அங்கத்துவப் பெருமக்களுக்கும் கூட்டுறவாளர்களுக்கும் என் இனிய வாழ்த்துக்களைத் தெரிவிப்பதற்கு எனக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு பெருமகிழ்வடைவதுடன் அதை எனது பேறாகவும் கருதுகிறேன்.

வாழ்க வாழ்க என இச்சங்கத்தை வாழ்த்துவதுடன் வளமும் நலமும் செழிக்க இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

பொ. வாகீசன்
செயலாளர்
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு,
வடமாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

**"நீடித்து நிலைத்து நிற்க வேண்டும்"**

அங்கத்தவர்களுக்குச் சேவை, பொது மக்களுக்குச் சேவை, வேலைவாய்ப்பு எனும் அடிப்படையில் ஒரு நிறுவனமாக, ஒரு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமாக 31.01.1971இல் பதிவு செய்யப்பட்டு, கட்டியெழுப்பப்பட்ட பண்டத்தரிப்பு பரிஷ் பல்நோக்குக் கூட்டுறவுச்சங்கம் இன்று யாழ்ப்பாண மாவட்டத்தில் 24 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் சிறந்த சங்கமாகக் காணப்படுகின்றது.

அங்கத்தவர்களை, அவர்களுக்குச் சேவைகளைச் சிறந்த முறையில் செயற்படுத்துவது, அதாவது அவர்களின் உற்பத்திகளை நியாயமான விலைக்குக் கொள்வனவு செய்து வழங்கி வருவதுடன், பேக்கரி, அரிசி ஆலை என்பவற்றைச் சிறந்த முறையில் செயற்படுத்தி வருவது கண்கூடு.

இதற்கெல்லாம் சங்கத்தின் நிர்வாகம், அது எடுக்கும் தீர்மானங்களைச் செயற்படுத்துவதில் அயராது முயற்சியுடைய பணியாளர்களைப் பாராட்டாமலும் இருக்க முடியாது. அந்த வகையில் நீண்ட காலம் தனது பணிகளை வழங்கி, அதிகமான பணியாளர்கள் ஓய்வு பெற்றுச் சென்றிருக்கின்றார்கள்.

ஒரு சிறந்த நிறுவனம் என்பது, இணைக்கப்படும் பணியாளர்கள் இடையில் விலகாது, ஓய்வுக்காலம் வரை அங்கேயே பணியாற்றுவது என்பதைக் கொண்டிருக்கும். இலாபமாக இயங்குவது மட்டுமல்ல பணியாளர்களுக்குக் காலத்திற்குக் காலம் சம்பள உயர்வுகள், ஊக்குவிப்புப்படிகள், வாழ்க்கைச் செலவுப்படிகளை வழங்கி வருவதும் அவதானிக்க முடியும். நிர்வாகமானது மூன்று வருடத்திற்கு ஒருமுறை மாறிமாறி வருவதாகும். ஆனால் பணியாளர் ஒருவர் அவர் ஓய்வு பெற்றுச் செல்லும் வரை அங்கேயே பணிபுரிய வேண்டியுள்ளார். எனவே 50% மேற்பட்ட பங்களிப்பு பணியாளர்களினாலேயே சங்கத்தைச் சிறந்த முறையில் வைத்திருக்க வேண்டிய பொறுப்பு உள்ளது. அதற்கேற்றவாறு சிறந்த பணியாளர்கள் மதிப்பீடு செய்யப்பட்டு, மதிப்பு வழங்கி, அவர்களை உரிய இடத்தில் அமர்த்துவது அவசியமாகும். அது மட்டுமல்ல அவர்களைப் பாராட்டுவதும் அவசியமாகும்.

நல்ல நிர்வாகம், முயற்சி உடைய நேர்மையான பணியாளர்கள், காலத்திற் கேற்ற சிறந்த செயற்பாடுகள், அங்கத்தவர்களை நெருக்கமாக வைத்திருக்கும் பங்கு, செலவுச் சிக்கனம், நிதிகளை சிறந்த முறையில் கையாளுதல், நிதிப்பலம் என்பன ஒரு நிறுவனம் நீண்டு நிலைத்திருக்கக் கூடிய குறிகாட்டிகளாகும். இவ்வகையில் பண்டத்தரிப்பு பரிஷ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் நீண்டு நிலைத்திருக்க வேண்டிக் கொள்கின்றேன்.

சு. கணேசு
கூட்டுறவு அபிவிருத்தி
உதவி ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சங்கத் தலைவர்





## சங்க இயக்குனர் சபை



திரு. க.கந்தசாமி
(உப தலைவர்)



திரு. சு. சாந்தகுமார்
(உறுப்பினர்)



திரு. க. செல்வராசா
(உறுப்பினர்)



திரு. ஆ.இம்மனுவல்
(உறுப்பினர்)



திரு. அ.ந. கிளறன்ஸ்
(உறுப்பினர்)



திரு. சு. பிரசாந்
(உறுப்பினர்)



திரு. ம.கபிலன்
(கூ.அ.உத்தியோகத்தர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது முகாமையாளர்




கணக்காளர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வங்கிச் சேவை முகாமையாளர்




## வர்த்தக முகாமையாளர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உற்பத்தி முகாமையாளர்




## பணியாளர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

பண்டத்தரிப்பு பரிஷ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் வெளியிடப்படும் கூட்டுறவு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

கூட்டுறவு இயக்கம் சிறந்த மனித விழுமியங்களையும் பொருளாதார வளர்ச்சிக்கான சிந்தனைகளையும் உள்ளடக்கிய பாரிய விருட்சமாகும். கூட்டுறவின் பெறுமதிகளை நன்கு புரிந்து கொண்டு கூட்டுறவிற்கான சிறப்பான சேவையினை கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக வழங்கி வரும் பணியாளர்களையும் கூட்டுறவுக்காகத் தம்மை முழுமையாக அர்ப்பணித்து அகில இலங்கையிலும் வட மாகாணத்திலும் முதன்மையான கூட்டுறவுச் சங்கமாக மலரச் செய்த இப்பிரதேச மூத்த கூட்டுறவாளர்கள் ஏனைய கூட்டுறவாளர்களின் வாழ்விலும் ஒளிவீச எனது இதய பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

"நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து உழைப்போம்
நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து மகிழ்வோம்"

வி. கே. அருந்தவநாதன்
கூட். அபி. உதவி ஆணையாளரும்
வாழ்நாள் கூட்டுறவாளரும்

உடுவில் வீதி,
மானிப்பாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கூட்டுறவு மலருக்கான வாழ்த்துச்செய்தி

மக்களுக்கான சேவை என்ற உன்னதமான நோக்கத்தினைக் கூட்டுறவுக் கொள்கையின் அடிப்படையில் கொண்டு எம் பிரதேச மக்களுக்குச் செயலாற்றிவரும் பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ. சங்கத்தின் வெள்ளிவிழாக் காணும் பணியாளர்களுக்கும், எம் பிரதேசத்தின் மூத்த கூட்டுறவாளர்களுக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

சமூகத்திற்குச் செயலாற்றுவது என்பது உள்ளத்தால் விரும்பிச் செய்யப்படும் ஒரு விடயம். மக்களுக்காகப் பொதுநலமாகச் சிந்தித்து அவர்களுக்காகச் சேவையாற்றும் பாங்கானது வாழ்வின் உயர்ச்சிக்கு நிச்சயம் பங்காற்றும். குறிப்பாக எமது பிரதேசமக்கள் பல இன்னல்களுக்கு முகம்கொடுத்த இக்கட்டான சூழ்நிலைகளின்போது மக்களின் வாழ்வு காக்கக் கரம்கொடுத்து அவர்களின் வாழ்வினை நிலைபெறச் செய்ய தமது நலன்பாராது உழைத்த இந்தச் சேவையாளர்களுக்கான கௌரவம் நிகழ்த்தப்பட வேண்டியதொன்றாகும்.

இன்று முளைத்து நாளை அழியும் காளான்களாய்ப் பிறப்பெடுத்து இன்று மட்டும் சேவையாற்றி நாளை காணாமலேயே போகும் மலினமானவர்கள் மத்தியில் 25 வருடம் தாண்டியும் பொதுச்சேவையில் நிலைபெற்றிருக்கும் சேவையாளர்கள் என்றும் வாழ்த்தப்பட வேண்டியவர்கள்.

எடுத்துக்காட்டுகள் தான் இந்த உலகத்தில் அடுத்து வரும் இளம் சமுதாயத்தினருக்கும் சமூகத்திற்குச் சேவையாற்றும் மனப்பாங்கினை வளரச்செய்யும். இன்றைய தினத்தில் கூட்டுறவுச் சேவையில் வெள்ளிவிழாவினைக் கொண்டாடும் பண்டத்தரிப்புப் பரிஷ் ப.நோ.கூ. சங்கப் பணியாளர்களுக்கும் வெள்ளிவிழாக் காணும் சேவையாளர்களுக்கு முன்மாதிரியாகத் திகழ்ந்து பிரதேசத்தின் மூத்த கூட்டுறவாளர்களுக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும் மேலும் மக்களுக்கான தங்கள் சேவைகள் தொடர்ந்து கூட்டுறவு என்பதன் உண்மை அர்த்தத்தை எம் வருங்காலச் சந்ததியினருக்கு வழங்கி எதிர்கால எம் சமூகத்தின் வாழ்க்கை வளம்பெற உங்கள் சங்கத்தின் சேவைகள் தொடர வேண்டும் என்றும் தங்கள் சங்கத்தால் வெளியிடப்படும் கூட்டுறவு மலர் சிறந்ததொரு கூட்டுறவுக்கு எடுத்துக்காட்டாக விளங்க வேண்டும் என்றும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டி எனது வாழ்த்துக்களையும் மக்கள் வங்கிச் சமூகத்தின் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மா. கலிஸ்ரஸ்,
முகாமையாளர்,
மக்கள் வங்கி, சங்கானை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தலைவரின் உள்ளத்திலிருந்து


வி. சுப்பிரமணியம்,
B.A. Hons, Dip in Edu.
(முன்னாள் அதிபர்)


எமது சங்கத்தில் 1998ம் ஆண்டு தொடக்கம் 2001ம் ஆண்டுவரை உபதலைவராக செயலாற்றி 01.03.2002ல் தலைவர் பொறுப்பை ஏற்றுக் கொண்டேன். தலைவர் பொறுப்பை ஏற்றுக் கொண்ட நான் இச்சங்கத்தை இந்த பிரதேசத்தில் வாழ்கின்ற மக்களின் மேம்பாட்டுக்குரியதோர் நிறுவனமாகவும் பணியாளர்களின் நலன்களைப் பேணக்கூடிய வகையிலும் இலாபகரமாகவும் இயக்க வேண்டுமென திடசங்கர்ப்பம் பூண்டோம். சங்கத்தைச் சரியான பாதையிலே கொண்டு செல்ல வேண்டுமானால் சங்கத்தின் கடந்த கால ஏற்பாடுகளை அறிய வேண்டியிருப்பதை உணர்ந்து கொண்டேன்.

பண்டத்தரிப்பு பரிஷ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் 1971ம் ஆண்டு கூட்டுறவுச் சட்டத்தின்படி சிறிய எல்லைப் பரப்பிற்குள் உருவாக்கப்பட்டது இச்சங்கத்தின் முதல் தலைவராகக் கூட்டுறவாளர் திரு. S.கந்தையா தலைமையில் இயக்குநர்சபை அமைத்து சிறப்பாக செயற்பட்டதை அறிய முடிகிறது. இக்கால கட்டத்தில் சங்கத்தில் நுகர்ச்சித்துறை மட்டுமல்லாது பல்வேறு செயற்பாடுகள், மின்விசை நெசவாலை, கைத்தறி நிலையம், பாண்சாலை, கிராமியவங்கி, புடவை அச்சிடுதல், சாயமிடுதல், தையல் நிலையம், நல்லெண்ணெய், சோப், பீடி, விவசாயப் பண்ணை போன்ற பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்து பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் என்ற எண்ணக்கருவிற்கு ஏற்ப செயற்பட்டதை அறிய முடிகிறது. பல நூற்றுக் கணக்கான பணியாளர்களைக் கொண்ட நிறுவனமாகவும் மிளிர்ந்தது.

எமது சங்கம் பல்வேறு செயற்பாடுகளைத் தன்னகத்தே கொண்டு இயங்கியதால் பல நூற்றுக்கணக்கானோருக்கு வேலைவாய்ப்பை வழங்கியது மட்டுமல்லாமல் 1971 தொடக்கம் 1977 வரை சிறப்பான வருவாயைப் பெற்று இலாபகரமாக இயங்கியது. அக்காலத்தில் எமது சங்கத்தின் மின்தறி ஆலையில் உற்பத்தி செய்யப்பட்ட சாறி, மேலாடை போன்றவை தென்னிலங்கைக்கு அனுப்பப்பட்டு சிறந்த வருவாயைப் பெற்றது மட்டுமல்லாமல் அவ் உற்பத்திகளைத் தேடி தென்னிலங்கை மக்கள் சங்க உற்பத்திப் பொருட்களைத் கொள்வனவு செய்யும் நிலையைக் கண்டேன். மேலும் நாட்டின் சகல பகுதிகளிலும் சிறப்பான சந்தை வாய்ப்பைப் பெற்று உன்னத நிலையில் இருந்த காலத்தில் சங்கத்தின் பொதுமுகாமையாளராக திரு. இ. இராஜசுந்தரம் அவர்கள் ஆரம்ப காலங்களில் சங்கத்தின் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதில் அக்கறையோடு செயற்பட்டார். இங்கு கடந்த காலத்தில் 1975ம் ஆண்டு மேற்கு ஜேர்மனியில் நடைபெற்ற சர்வதேச வியாபார சந்தையில் ஐரோப்பாவில் முதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரமெனக் கணிக்கப்படும் இச்சந்தையிலே 21 தனியார் நிறுவனங்களும் அரச நிறுவனங்களுடனும் எமது சங்கத்தை பங்கு பெறச் செய்து எங்கள் சங்கத்தின் உற்பத்திகளின் முக்கியத்துவத்தை உலகறியச் செய்த பெருமையும் அவ்வியாபார சந்தையிலே முகாமையாளர் அவர்கள் நேரடியாக பங்கு பற்றி எமது சங்கத்திற்கு சிறப்பான இடத்தைப் பெற்றுக் கொடுத்தார். சங்கம் இத்தகைய செயற்பாடுகளால் பெற்றுக்கொண்ட இலாபத்தினாலேயே மாரீசன்கூடல், இளவாலை, சென்யூட், காஞ்சிபுரம், பெரியவிளான் பகுதிகளில் சொந்தக் கட்டடத்தில் இல்லாமல் இயங்கிய கிளை நிலையங்களுக்கு நிரந்தரமான கிளை நிலையங்களை அமைப்பதற்கு உந்து சக்தியாக இருந்தது என்பதை உணர்ந்து கொள்ளக் கூடியதாக இருந்தது.

1977ம் ஆண்டு வரை சிறப்பான செயல்பாடுகளை முன்னெடுத்து உற்பத்தி சார் துறையினூடாகவும் நுகர்ச்சி விற்பனையூடாகவும் சிறந்த வருமானத்தைப் பெற்றமையால் தென்னிலங்கை கூட்டுறவாளர் ஒருவர் எமது சங்கத்தைப் பற்றி தெரிவிக்கும் பொழுது சிறிய பகுதிக்குள் சக்திவாய்ந்த சங்கமாகவும், பண்டத்தரிப்புப் பிரதேசத்தின் மகிமையை வெளிக்காட்டுகின்ற சங்கமாக திகழ்கின்றது எனப் பாராட்டினார். வேறு சில கூட்டுறவாளர்களின் பாராட்டையும் பெற்றுக்கொண்டது.

சிறப்பான கட்டமைப்பையும் வருவாயையும் பெற்று விளங்கிய எமது சங்கம் 1977ம் ஆண்டு அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்ட திறந்த வெளி பொருளாதார கட்டமைப்புக்களால் எமது உற்பத்திகள் தென்னிலங்கையில் சந்தை வாய்ப்பை இழந்தன. இதனால் உற்பத்திப் பகுதி பல நெருக்கடிகளை சந்தித்த வேளையில் 1974ம் ஆண்டு தொடக்கம் சங்க உயர் மட்டத்திலிருந்த முரண்பாடுகளும் சங்கத்தின் செயற்பாட்டைப் பாதித்தது என்று அறியமுடிகிறது. சங்கத்திலேற்பட்ட முரண்பாட்டு வளர்ச்சியானது சங்கத்தில் அரசியல் தலையீட்டை ஏற்படுத்தியது. மட்டுமல்லாமல் சங்கத்தின் தலைமைப் பீடம் அடிக்கடி மாற்றமடைந்தமையும் ஒரே நேரத்தில் தெரிவு நியமனம் என்ற அடிப்படையில் பல தலைவர்கள் செயற்பட்டதை நோக்கும் போது முரண்பாட்டு வளர்ச்சியானது சங்கத்தின் செயற்பாடுகளை பொருத்தமான நேரத்தில் பொருத்தமான தீர்மானங்களை எடுக்காமையும் சங்கம் 1977ம் ஆண்டு தொடக்கம் 1988ம் ஆண்டு வரை நட்டத்தில் இயங்குவதற்கு ஏதுவான காரணங்களாக அமைந்தது. மட்டுமல்லாது சங்கத்தின் பணியாளரிடையேயும் இது பெரிய பாதிப்பை ஏற்படுத்தியது. இருந்தாலும் இக்காலகட்டத்தில் சங்கத்தின் சொத்துக்கள் அடைமானம் வைக்கப்பட்டும் கிராமிய வங்கி நிதி வேறு துறைகளுக்கு மாற்றப்பட்டும் நிதிபலம் விரயம் அடைந்திருந்தமையை பழைய தலைவர் திரு. செ. இராசநாயகம் தனது நூலில் குறிப்பிட்டது போல் சங்கம் குலைக்கும் நிலைக்கு வந்தது என்ற கருத்தை நாம் ஏற்கவில்லை. ஆனால் அக்காலம் நிதி பலவீனம் அடைந்திருந்தது என்பதை உணரக்கூடியதாக இருந்தது. இதுவரை கடமையாற்றிய திரு.இ. இராசுந்தரம் 1985ல் ஓய்வு பெற்றுச் செல்ல திரு.ம.ஜோசப் அவர்கள் பொதுமுகாமையாளராக நியமிக்கப்பட்டார். இவர் காலத்திலும் சங்கம் தொடர் நட்டங்களை சந்தித்துவந்தாலும் அவருடைய செயற்பாட்டின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாக நட்டம் குறைவடைந்து சென்றமையை அவதானிக்க முடிகிறது. இவரும் 1989ல் ஓய்வுபெற்றுச் செல்ல திரு. சு. வைரவநாதன் பொது முகாமையாளராக நியமனம் பெற்றார்.

இவருடைய காலத்தில் 1989ம் ஆண்டிலிருந்து சங்கம் இலாபத்தை நோக்கி முன்னேறத் தொடங்கியது. 1990 - 1991ல் நட்டத்தை சந்தித்தாலும் 1996 வரை சங்கம் இலாபகரமாக இயங்கத் தொடங்கியது. 1992ம் ஆண்டு சங்கத்திற்கு கிடைக்கபெற்ற இடம்பெயர் நிவாரணங்களை வழங்கும் பொறுப்பை சங்கம் பெற்றுக் கொண்டமையாலும் சங்கம் இலாபகரமாக இயங்கியது மட்டுமல்லாமல் சங்கத்தின் 1977ம் ஆண்டிலிருந்து சங்கத்திற்கு ஏற்பட்ட இழப்புக்களை இவ் ஆண்டுகளில் கிடைக்கப்பெற்ற வருமானத்திலிருந்து சீர்செய்யப்பட்டதையும் நுகர்ச்சி நிதியம், கிராமிய வங்கி நிதி, வங்கி கடன்கள் சீர் செய்யப்பட்டு இலாபகரமாக இயங்குவதற்கும் சங்க ஒட்டுமொத்த பணியாளர்களின் அர்ப்பணிப்பும், சேவையும் காரணமாக அமைந்தது. மேலும் அலுவலகம் இடம்பெயர்ந்த காலத்தில் பணியாளர்களின் ஒற்றுமை, சங்கத்தின் செயற்பாடுகளை பாதிக்காமல் இருந்ததோடு மட்டுமல்லால் திரும்பவும் 1996ம் ஆண்டு சொந்த இடத்தில் இயங்குவதற்கு ஆரம்பித்த காலத்தில் 1997 - 2001 வரை சங்கம் நட்டத்திலியங்கியதனை அவதானிக்க முடிந்தது.

1998 – 2000ம் ஆண்டு காலத்தில் சங்கம் தன்னுடைய செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்குத் தடையாக இருந்த சேதமடைந்த கட்டிடங்கள் திருத்தியமைப்பதற்காக சங்க பணத்திலும் நிறுவனங்களின் உதவியைப் பெற்று பாரிய மூலதன செலவு செய்யவேண்டி இருந்தமையும் நஸ்டத்தில் இயங்க வேண்டியிருந்ததையுணர்ந்து கொண்டோம்.

சங்கம் கடந்த காலங்களில் செயல்பட்ட விதத்தினை உணர்ந்து கொண்டமையால் எமது சங்கத்தை இலாபகரமாக மக்களுக்கு சேவையாற்றக் கூடிய வகையிலும் பணியாளரின் நலன்களைப் பேணக்கூடிய வகையிலும் சங்கத்தின் செயற்பாட்டை முன்னெடுக்க வேண்டுமெனத் தீர்மானித்துள்ளேன். செயற்பாடுகளை முன்னேற்றகரமாக இயக்க வேண்டுமானால், கடந்த காலங்களில் சங்கத்தில் ஏற்பட்ட முரண்பாடுகள் எவ்வாறு சங்கத்தைப் பாதித்தது. நான் பணியாளர்களோடு தனியாகவும், கூட்டாகவும் கலந்துரையாடி சங்கத்தின் விசுவாசம் உள்ள பணியாளர்களாகச் செயல்படத் தூண்டியுள்ளேன். மேலும் சங்கத்தின் சகல துறைகளையும் வினைத்திறனுள்ளதாக மாற்றியமைக்க செயற்பாடுகளை முன்னெடுக்க முனைந்தேன். இந்த வகையில் நுகர்ச்சிப் பகுதியினரோடு கலந்துரையாடி வியாபார அதிகரிப்பை ஏற்படுத்துவதற்கு முனைந்தோம். பணியாளர்களின் விசுவாசம், அர்ப்பணிப்பு போன்றவற்றால் செயற்பாடுகள் முன்னோக்கிச் சென்றது. நுகர்ச்சித் துறையைப் பொறுத்தவரையில் கிளை நிலையங்களில் முகாமையாளராக பலர் எந்தக் கிளை நிலையத்தைப் பொறுப்பேற்றாலும் மக்களோடு தொடர்புகளைப் பேணி வியாபாரத்தை உச்ச நிலையில் வைத்திருந்தவர்கள் என்பதை என்னால் மறக்க முடியாது. அவர்கள் ஓய்வு பெற்றுச் சென்றாலும் அவர்களின் செயல்திறன் இன்னும் என் மனதிலே பதிந்துள்ளது. நுகர்ச்சித் துறை சிறப்பாகச் செயற்பட்டமையும் அத்துடன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமிய வங்கியைப் பொறுத்தவரையில் *UNDP* நிதியுடன் சங்கத்தின் மேன்மிகை நிதியையும் அக்கால கட்டத்தில் மீள்குடியேறிய மக்களின் தொழில் விருத்திக்கான வெங்காய செய்கை கடன் இலகு தவணையில் வழங்கினோம். நெற்செய்கை கடன் வறுமைக்கோட்டிற்குள் வாழ்கின்ற மக்களுக்கு நீர் இறைக்கும் இயந்திரம் வாங்குவதற்கான கடனூடாக விவசாயிகள் மேம்பாட்டை உயர்த்துவதற்காக கடன் திட்டங்களை வழங்கியது மட்டுமல்லாமல் சுயமுயற்சியில் ஈடுபடு பவர்களை ஊக்குவிப்பதற்காகக் கடன் திட்டங்களை வழங்கி அம்முயற்சிகளை ஊக்குவித்தோம். இக்கடன் திட்டங்களை வழங்கி அறவீடு செய்வதற்கு சிறப்பாகக் கிராமிய வங்கி முகாமையாளர்களின் முயற்சியும் அவர்களை நெறிப்படுத்திய வங்கிச் சேவை முகாமையாளர்களின் செயற்பாடுகளினாலும் வங்கி வருமானம் அதிகரித்தமையாலும், பாண்சாலை உற்பத்தி மிகவும் கீழ் மட்டத்தில் நடை பெற்றுக் கொண்டிருந்தது. இச்செயற்பாட்டை அவர்களோடு கலந்துரையாடி செயல்பாடு முன்னெடுத்தபடியால் இலாபகரமாக இயங்கக் கூடியதாக இருந்தது. மேலும் பணியாளர்களின் அர்ப்பணிப்பும், விசுவாசமும், கடமையுணர்வும் சகல செயற்பாடுகளிலும் முன்னேற்றம் காணப்பட்டமையினாலும் சங்கம் 2002ம் ஆண்டிலிருந்து இலாபத்தைத் நோக்கி நகரத்தொடங்கியது.

சங்கம் இலாபத்தைக் நோக்கி செயற்படத்தொடங்கினாலும் எதிர்காலத்தில் அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற நிவாரண செயற்பாடுகள் நிறுத்தப்படக் கூடும் என்பதாலும் பணியாளர்களின் சம்பளங்கள் வாழ்க்கை செலவுக்கேற்ற விதத்தில் அதிகரித்துச்செல்ல வேண்டிய நிலை ஏற்படுமென்பதாலும் சங்கத்தின் செயற்பாடுகளில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டுமென்பதற்காக சங்கத்தின் வருமானத்தை அதிகரிப்பதற்காக மட்டுமன்றி எதிர்காலத்தில் சங்கம் இலாபகரமாக இயங்க வேண்டுமென்பதற்காகவும் உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென நினைத்தோம் அதனடிப்படையாக முதல் சங்கத்திற்கு பெற்றோல் நிலையம் ஒன்றை உள்வாங்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டோம்.

பல முயற்சிகள் எடுத்தாலும் அம்முயற்சி கிடைக்கவில்லை. ஆனால் பொது முகாமையாளர் திரு.சு.வைரவநாதன் அவர்கள் அப்போதைய அமைச்சர் கௌரவ டக்ளஸ் தேவானந்தாவோடு பல சந்திப்புக்களை ஏற்படுத்தி மாதகல் கிராம பெரியவர்களோடு இணைந்து செயற்பட்டு எரிபொருள் நிரப்பு நிலையத்தை சங்கத்திற்கு பெற்றுக் கொடுத்தார்கள். இவ் எரிபொருள் நிலையத்தை வேறு பல தனியார்கள் எடுப்பதற்கு முயற்சிகள் மேற்கொண்ட வேளை அமைச்சர் அவர்கள் சங்கத்திற்கு வழங்க வேண்டுமென ஆணித்தரமாக சிபார்சு செய்து எரிபொருள் நிலையத்தைப் பெறுவதற்கு வழிவகுத்தார். இச்செயற்பாட்டை முன்னெடுத்த திரு.சு.வைரவநாதன் முயற்சி பாராட்டத்தக்கது மட்டுமல்லாமல் சங்கத்திற்கு வருமானத்தை அதிகரிப்பதற்கு வழி அமைத்தது. சங்கத்தின் செயற்பாடுகளை விஸ்தரிப்பதற்கு 2003ம் ஆண்டில் அரைக்கும் ஆலை 2004ம் ஆண்டில் அரிசி ஆலை போன்ற உற்பத்தி நடவடிக்கைகளை ஏற்படுத்துவதற்கு துணையாக சங்கத்திற்கு நின்றவர் முகாமையாளர்கள், நடுத்தர முகாமையாளர்கள், பணியாளர்கள் பங்களிப்போடும் ஆரம்பிக்கப்பட்டமையால் சங்கத்தின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவாயை அதிகரிக்கச் செய்யக் கூடிய செயற்பாட்டை முன்னெடுத்தோம். சங்கம் 77ம் ஆண்டிற்கு முன் எவ்வாறு பல அமைப்புக்களைக் கொண்டு விளங்கியதோ அதே போன்று ஒரு அமைப்பை நுகர்ச்சி வியாபாரம், விவசாயப்பகுதி, கிராமிய வங்கி, பாண்சாலை, நல்லெண்ணை உற்பத்தி, பெற்றோல் நிலையம், அரிசி ஆலை, அரைக்கும் ஆலை போன்ற பல்வேறு கட்டமைப்புக்கள் உருவாக்கப்பட்டு சங்கம் எதிர்காலத்தில் இலாபகரமாக இயங்குவதற்கு அடித்தளம் இடப்பட்டது. இருந்தாலும் 2005ம் ஆண்டில் சங்கம் சங்கத்தின் பணத்தில் அரிசி ஆலைகளுக்கு பொறி புனரமைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டமையால் வங்கி வட்டியாக 22 இலட்சத்திற்கு மேல் செலுத்தவேண்டி இருந்தமையால் 2005ல் நட்டமடைந்தாலும் 2006 பின் இச் செயற்பாடுகளால் சங்கம் கூடிய வருவாயைப் பெற்றது மட்டுமல்லாமல் 2007ம் ஆண்டில் சங்க இலாபத்திலிருந்து மூலதன செலவை சீர்செய்தோம். இத்தகைய செயற்பாடுகளை முன்னின்று செயல்பட்ட முகாமையாளர் வைரவநாதன் ஓய்வுபெற்றுச் செல்ல இ. தங்கராசா ஓராண்டு காலம் முகாமையாளராகக் கடமையாற்றி இலாபகரமாக இயங்கி ஓய்வுபெற்றுச் செல்ல நுகர்ச்சி முகாமையாளராகக் கடமையாற்றிக் கொண்டிருந்த ஆ. நாகராசா அவர்கள் பொதுமுகாமையாளராகப் பொறுப்பேற்றார். இவர் சங்கத்தின் செயல்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதில் அக்கறையோடும் இயக்குநர் சபையோடும் இணைந்து செயல்பட்டார். இவரது முயற்சியின் காரணமாகக் கடந்த காலங்களில் நிவாரணம் வழங்கப்படும் நடவடிக்கையில் சங்கம் சிறப்பாகச் செயல்பட்டமையால் புதிய கட்டிடம் அமைப்பதற்கு பிரதேச செயலரால் 30 இலட்சம் ரூபாய் ஒதுக்கம் செய்யப்பட்டது. இந் நிதியோடு வங்கியின் மேல் மிகை நிதியில் இருந்து 20 இலட்சம் ரூபாவையும் சேர்த்து புதிய கட்டிடத்தை அமைத்து அக்கட்டிடத்தினுள் கோப்சிற்றி, புடவை நிலையம், கிராமிய வங்கி போன்றவற்றை அமைப்பதற்கு உறுதுணையாக நின்றவர் முகாமையாளர் திரு. ஆ. நாகராசா. இக் காலத்தில் எனக்குத் தனிப்பட்ட அச்சுறுத்தல் இருந்தமையால் தலைவருக்கான கடமைகளை உபதலைவரிடம் வழங்கி ஒதுங்க வேண்டிய நிலையில் இருந்தேன். 2009ஆம் ஆண்டில் திரு. ச. செல்வரத்தினம் தலைமையில் புதிய இயக்குநர் சபை தெரிவோடு பல செயல்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன என்பதை அவதானிக்க முடிந்தது. இக் காலகட்டத்தில் 7ம், 8ம் ஆண்டுகளில் நுகர்ச்சித் துறையாலும் அரிசி ஆலை உற்பத்தியாலும் கூடிய இலாபத்திலிருந்து மேல்மாடிக் கட்டிடத்தை அமைப்பதற்கு 30 இலட்சம் ரூபாவைப் பாவித்துக் கட்டுவதற்கு உறுதுணையாக இருந்தவர் பொதுமுகாமையாளர். இக் கட்டிடத்தை அமைப்பதற்கு பல வருடங்களாக நினைத்தும் சங்கத்தின் நிதிநிலை சரியாக இல்லாமையால் நிறைவேறாமலிருந்தது என்பதை அறிய முடிகிறது. மேலும் நுகர்ச்சி விற்பனை அதிகரிப்பதற்கு சிறப்பு விற்பனை நிலையங்கள் அமைக்கும் விடயத்தை கையாளப் பொருத்தமான இடங்களில் சிறப்பு விற்பனை நிலையங்களை அமைத்து தனது கடந்தகால அனுபவத்தின் ஊடாக பொது முகாமையாளர் நுகர்ச்சி விற்பனையை அதிகரிக்கச் செய்துள்ளனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலையில் 2012ம் ஆண்டு மீண்டும் தலைமைப்பொறுப்பை ஏற்றுக்கொண்டேன். இக்காலகட்டத்தில் சங்கம் சிறப்பாக செயற்பட்டு இலாபத்தை ஈட்டிக்கொண்டாலும் பணியாளர்களின் சம்பளம் முழுமையாக வழங்கப்படாமையை இனங்கண்டேன். எனவே பணியாளர் சம்பளத்தை வழங்குவதற்கு அக்காலகட்டத்தில் பின்தங்கி நின்ற அரிசி ஆலை செயற்பாட்டையும், கிராமிய வங்கியின் கடன் வழங்கும் செயற்பாட்டையும் முன்னெடுக்க வேண்டியேற்பட்டது. இச்செயற்பாடுகளை முன்னெடுத்ததன் விளைவாகப் பணியாளர்களின் சம்பளத்தை வழங்கினோம். இக்காலகட்டத்தில் 2011 – 2012ம் ஆண்டில் வழங்கிய சம்பளத்திலும் மேலதிகமாக 2012 – 2013ம் ஆண்டில் இருபத்தைந்து இலட்சத்திற்கு மேல் சம்பள உயர்வுக்காக வழங்கி சங்கத்தை இலாபகரமாக இயக்குவதற்குப் பணியாளர்கள் தங்களைத் தயார்படுத்திக்கொண்டார்கள். மேலும் மாகாணசபை 2015ம் ஆண்டில் அறிவித்த 30% வீத சம்பளத்தை உடனடியாக வழங்கி சங்கத்தை இலாபகரமாக இயக்கி வருகின்றோம். 2013இல் பொதுமுகாமையாளர் ஆ. நாகராசா ஓய்வு பெற்றுச் செல்ல நா. சபாரத்தினம் ஒரு வருட காலம் பொதுமுகாமையாளராக சிறப்பாக செயலாற்றி 2014ம் ஆண்டு ஓய்வு பெற்றார். அதன் பின்பு கணக்காளர் அ.கி.ஜயந்தன் பதில் பொதுமுகாமையாளராகவும் இரு பொறுப்பையும் சிறப்பாக ஒருவருட காலம் பணியாற்றினார். அதனைத் தொடர்ந்து பதில் பொதுமுகாமையாளராக க. ரவிச்சந்திரன் அவர்கள் சிறப்பாகச் செயலாற்றி வருகிறார். பழைய பணியாளர்கள் 95 வீதம் ஓய்வு பெற்றுச் செல்ல 2014ம் ஆண்டு தொடக்கம் கிளை நிலையங்கள் ஏனைய பகுதிகளில் புதியவர்கள். அத்துடன் மேல்மட்ட பணியாளர்களும் புதியவர்களே. பொறுப்பையேற்று செயற்பட்டு வருகின்றார்கள். இவர்கள் அர்ப்பணிப்போடு செயற்படுகிறார்கள், செயற்படுவார்களென நம்புகின்றோம்.

எமது சங்கம் இக்காலகட்டத்தில் யாழ் மாவட்டத்தில் சிறப்பாக முதல் விருதுகளையும் சங்கம் பெற்றது மட்டுமல்லாமல் சங்க பணியாளர்களும் மாவட்ட மட்டத்தில் விருதுகளைப் பெற்றிருக்கின்றார்கள். மேலும் எமது கிராமிய வங்கியும் முதல் தரமான விருதுகளைப் பெற்று இவ்வாறு எமது சங்கம் சிறப்பான விருதுகளையும், இலாபங்களையும் பெற்று வருவதோடு மட்டுமல்லாமல் எதிர்காலத்திலும் நிலைத்த வருமானத்தை பெறக்கூடிய வகையில், 2005 காலகட்டத்தில் கட்டமைக்கப்பட்ட செயற்பாடுகள் வாயிலாகவேதான் இச்செயற்பாடுகளில் முன்னின்று உழைத்த பொது முகாமையாளர் சு. வயிரவநாதன், கணக்காளர் இ. தங்கராசா, வர்த்தக முகாமையாளர் ஆ. நாகராசா, உட்துறைக்கணக்காய்வாளர் அ. கணேசலிங்கம் ஆகியோரும் அவர்களோடு இணைந்து செயற்பட்ட பணியாளர்களுமே ஆவார். மேலும் இக்காலகட்டத்தில் பொதுச்சபையினர், இயக்குநர் சபையினர் கடந்த காலங்களைப் போல் முரண்பாடுகளில்லாமல் ஒற்றுமையோடு எம்மோடு இணைந்து சங்கத்தினை இலாபகரமாக இயக்குவதற்கு துணை நின்றவர்களையும் மனதில் நிலைநிறுத்திக் கொள்கின்றோம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# தலைமைத்துவம்

ம. கபிலன்
கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்,
யாழ்ப்பாணம்.

மனித நாகரிகப் படிமுறை வளர்ச்சியில் உயிர்ப்பான ஓர் அங்கமாக தலைமைத்துவம் விளங்குகின்றது. இதனால் இன்றைய நவீன உலகில் தலைமைத்துவக் கோட்பாடுகள் பற்றிய தேடல் இன்றியமையாததொன்றாக விளங்குகின்றது. தேசங்களை மாத்திரம் அல்ல சமூகங்களையும், நிறுவனங்களையும் குடும்பங்களையும் கட்டியெழுப்பவும் பாதுகாத்து வழிநடத்தவும் தலைமைத்துவம் அவசியமாகின்றது. அரசியலில் மட்டுமல்ல சமயம், மருத்துவம், கூட்டுறவு, விஞ்ஞானம், விளையாட்டு, இலக்கியம் போன்ற எல்லாத்துறைகளுக்குமே தலைவர்கள் அவசியமாக இருக்கின்றனர். மனித வரலாறு என்பது ஒரு வகையில் பார்த்தால் அரசியல், இராணுவ, சமூக, சமய தலைவர்களின் வரலாறுகளாகவே இருந்திருக்கின்றது. உலகளாவிய ரீதியில் ஒவ்வொரு நாட்டிலும் தோன்றிய புராண, இதிகாசங்கள், பண்டைய இலக்கியங்கள் தலைவர்கள் புகழ்பாடுவனவாகவே இருந்திருக்கின்றது.

தலைமைத்துவம் என்பது மானிட வாழ்வுடன் பின்னிப் பிணைந்திருப்பதுடன் அவனது வாழ்க்கைப் போக்கினைத் தீர்மானிக்கும் சக்தியாகவும் விளங்குகின்றது. இத் தலைமைத்துவமானது முறைசார்ந்த தலைமைத்துவமாகவோ அல்லது முறைசாரா தலைமைத்துவமாகவோ இருக்கலாம். தலைமைத்துவம் என்னும் எண்ணக்கருவானது மனிதனது சிந்தனையை ஆகர்ஷிக்கும் ஒரு கருப்பொருளாக எல்லாக் காலமும் இருந்து வந்துள்ளது. இந்திய கிரேக்க இதிகாசங்கள் தலைமைத்துவம் பற்றி எடுத்தியம்புகின்றது. சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த பிளேற்றோ எழுதிய *(The Republic)* என்னும் நூல்தான் தலைமைத்துவம் பற்றிய ஓர் கோட்பாடு உருவாக முக்கிய காரணமாக அமைந்தது. இதேபோல சீனதத்துவாசிரியர் சன்சூ தனது *"The Art of War"* என்னும் நூல் மூலமும் இத்தாலிய அரசியல் அறிஞர் நிக்கலோ மாக்கியவல்லி *"The Prince"* என்னும் நூல் மூலமும் தலைமைத்துவ கோட்பாடுகளை சமூகத்திற்கு அறிமுகப்படுத்தினார்கள்.

தலைமைத்துவம் பற்றி ஆய்வு செய்தவர்கள் தமது ஈடுபாடுகளுக்கு ஏற்ப பல்வேறுவிதமாக வரைவிலக்கணப்படுத்தியுள்ளனர். எனவே பொதுவாக நோக்கின் "எந்தவொரு மனிதனின் நடத்தை மற்றவர்களின் நடத்தையின் மாறுதலை தன்னில் ஏற்படுத்தும் மாற்றத்தை விட அதிகமாக ஏற்படுத்துகின்றதோ" அந்த நடத்தையே தலைமைத்துவமாகும். அதாவது பிறரது நடத்தையில் செல்வாக்கு செலுத்தும் செயன்முறையாகும். தலைமைத்துவத்தில் பின்வரும் தலைமைத்துவ வகைகள் உளவியலாளர்களால் முன்வைக்கப் படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. நிறைவேற்றுத் தலைவர் (*Executive Leader*)
2. நிர்வாகத் தலைவர் (*Administrator Leader*)
3. கொள்கை வகுப்புத் தலவைர் (*Policy Maker Leader*)
4. துறைசார் நிபுணத் தலைவர் (*Expert Leader*)
5. இலட்சியத் தலைவர் (*Ideologist Leader*)
6. கவர்ச்சித் தலைவர் (*Charismatic Leader*)
7. அடையாளத் தலைவர் (*Symbolic Leader*)
8. தந்தைவழித் தலைவர் (*Father Figure Leader*)
9. சமயத் தலைவர் (*Religious Leader*)

தலைவர்கள் பிறக்கின்றனர் உருவாக்கப்படுவதில்லை (*Leaders are born not made*) என்ற மக்ஸ்வெபரின் கூற்று இன்று வரை அறிஞர்களால் விவாதிக்கப்படும் ஒரு விடயமாகும். எனவே ஒரு தலைவரிடம் பின்வரும் பண்புகள் இருக்க வேண்டியது அவசியமாகின்றது.

- குழுவின் மதிப்பைப் பெறல்
- தன் பணிகளில் வெற்றி பெறல்
- ஆளுமைக் கூறுகள்
- உண்மைத்தன்மை நம்பகத்தன்மை
- தூரநோக்கான சிந்தனை
- தொடர்பாடல் திறன்
- தீர்மானம் எடுக்கும் திறன்
- திட்டமிடல்
- குழுவாகச் சேர்ந்து வேலை செய்தல்

நிறுவனங்கள் பின்வரும் விதமாக தலைவர்களை தேர்ந்தெடுக்கின்றது.

1. நியமித்தல் (*Appointing*)
2. தெரிந்தெடுத்தல் (*Electing*)
3. சமூகத்தன்மை (*Social Leader*)

**தலைமைத்துவக் கோட்பாடுகள்**

தலைமைத்துவக் கோட்பாடுகள் பற்றி பின்வரும் அணுகுமுறைகள் காணப்படுகின்றன.

- பண்புக் கோட்பாடு
- நடத்தைசார் கோட்பாடு
- சூழ்நிலைக் கோட்பாடு
- ஆட்கொள்ளும் தலைமைத்துவம்
- நடைமுறைப்படுத்தும் தலைமைத்துவம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2013 மீள்குடியேற்றத்தின் போது நிவாரணம் வழங்கப்பட்டது



கிளை 01 திறப்புவிழாவின் போது





புதிய தலைமை அலுவலக திறப்பு விழா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பண்புக் கோட்பாடு**

குறித்த ஒரு தலைவருக்கு காணப்படும் உடல் ரீதியான பண்புகள், சமூகப் பண்புகள், ஆளுமைப் பண்புகள் தனிப்பட்ட பண்புகளை உள்ளடக்கியதாகவே பண்புக் கோட்பாடு காணப்படுகின்றது. மேற்கூறப்பட்ட நான்கு பண்புகளை அடிப்படையாகக் கொண்டே தலைவர்களை மற்றையோரிடம் இருந்து வேறுபடுத்தக் கூடியதாக இருக்கின்றது.

**நடத்தைசார் கோட்பாடு**

நடத்தைசார் தலைமைத்துவ கோட்பாடுகள் பின்வரும் ஆய்வுகள் மூலம் மேற்கொள்ளப்பட்டது.

- கேட்லெவின் ஆய்வுகள்
- மிக்சிக்கன் பல்கலைக்கழக ஆய்வுகள்
- ஒகியோ மாநில பல்கலைக்கழக ஆய்வுகள்
- முகாமைத்துவ நிலை வரைபு

இவ்வாய்வானது தலைவர்களின் நடத்தையினை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டதாகும்.

கேட்லெவின் என்பவர் தனது ஆய்வுகள் மூலம் பின்வரும் தலைமைத்துவப் பண்புகளை இனங்கண்டுள்ளார்.

- ஏகாதிபத்திய தலைமைத்துவம்
- ஜனநாயக தலைமைத்துவம்
- தலையீடற்ற தலைமைத்துவம்

மேற்கூறப்பட்ட மூன்று தலைமைத்துவத்தை நோக்குவோமாயின் ஜனநாயக ரீதியிலான தலைமைத்துவமே ஊழியர்களின் திருப்தியையும், தொழிலின் தரத்தையும் கூடுதலாக வழங்குகின்றது. இன்றைய நவீன உலகில் அதிகளவான மக்களால் எதிர்பார்க்கப்படுவதும் பின்பற்றப்படுவதுமான தலைமைத்துவம் ஜனநாயக ரீதியிலான தலைமைத்துவமாகும். இருந்த போதிலும் அடேல்ப் கிட்லர், முசோலினி, இடிஅமீன் போன்ற ஏகாதிபத்திய தலைமைத்துவப் பண்புகளைக் கொண்ட தலைவர்களையும் மக்கள் தமது தலைவர்களாகக் கொண்டனர் என்பது கண்கூடு.

ஏனைய ஜீவராசிகளிடமிருந்து மனிதனை வேறுபடுத்திக் காட்டும் பண்புகளில் தலைமைத்துவம் முக்கிய இடத்தை வகிப்பதாலும் விஞ்ஞானம், தொழில்நுட்பம் போன்று முகாமைத்துவமும் வளர்ந்து வரும் துறை என்பதாலும் தலைமைத்துவம் பற்றிய தேடல் அனைவருக்கும் அவசியமானதொன்றாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வரலாற்றுப் பாதையில் எமது சங்கம்

அ. கணேசலிங்கம்
முன்னால் உள்ளகக் கணக்காய்வாளரும்
கணக்காளரும்.

1970ம் ஆண்டு ஆட்சிக்கு வந்த அன்றைய ஐக்கிய முன்னணி அரசாங்கம் கூட்டுறவுத் துறையைப் புனரமைத்து அதனூடாக பொருளாதார அபிவிருத்தி செய்யவும் வேலை வாய்ப்பை உருவாக்கவும் கூட்டுறவு சட்டத்தின் திருத்தம் மேற்கொண்டு நாட்டில் உள்ள நாலாயிரத்திற்கும் மேற்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை ஒன்றிணைத்து பொருளாதார பலங் கொண்டவை **372** ஆரம்ப பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களாகப் பதிவு செய்தது. இவ்வாறு பதிவு செய்யப்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் பண்டத்தரிப்பு பரிஷ் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கமும் ஒன்று.

இச்சங்கம் பண்டத்தரிப்பு பட்டினம், பண்டத்தரிப்புக் கிராமம் ஆகிய உள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாகப் பரப்பை சங்க எல்லைப் பரப்பாகக் கொண்டு அத்தொழிற் பரப்பில் அடங்கி இருந்த பண்டத் தரிப்பு, கோவிற்பற்று பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், 13 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், 04 பண்டகசாலை சங்கம் என்பவற்றை ஒன்றிணைந்து **1971.01.31**ம் திகதி J/1550 இலக்கத்தில் பதிவு செய்யப் பட்டது.

**இணைக்கப்பட்ட சங்கங்கள்**

1. பண்டத்தரிப்பு கோயில் பற்று பல நோக்குக் கூட்டுறவு சங்கத்தின் சமாசம்.
2. மாதகல் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
3. மாதகல் மத்தி பரிஷ் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம்
4. மாதகல் பரிஷ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
5. மாதகல் நுணசை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம்
6. மாரீசன் கூடல் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம்
7. பெரியவிளான் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
8. சித்திரமேழி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம்
9. பிரான் பற்று பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம்
10. பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம்
11. சில்லாலை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம்
12. வடலியடைப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
13. இளவாலை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. பாரத்தனை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம்

15. மக்குவில் பண்டகசாலை கூட்டுறவுச்சங்கம்

16. இளவாலை கன்னியர் மடம் பண்டகசாலை கூட்டுறவுச்சங்கம்

17. சிறுவிளான் பண்டகசாலை கூட்டுறவுச்சங்கம்

18. மாசியப்பிட்டி பண்டகசாலை கூட்டுறவுச்சங்கம்

மேற்படி சங்கங்கள் புதிய சங்கத்துடன் இணையும் போது பண்டத்தரிப்பு மின்தறி ஆலை, பண்டத்தரிப்பு கைத்தறி ஆலை, பண்டத்தரிப்பு பேக்கரி, மாதகல் கிராமிய வங்கி, மாதகல் கைத்தறி மற்றும் அசையும், அசையாத சொத்துக்கள் என்பனவும் உள்ளடக்கி இருந்தன.

இச் சங்கத்தைப் பதிவு மேற் கொண்ட பின்னர் யாழ் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் தனக்கு வழங்கப்பட்ட தத்துவத்தின்படி சங்கத்திற்கு வட மாகாண கூட்டுறவுச் சபை கௌரவ செயலாளரும் இக்கிராமத்தின் கூட்டு றவாளரும் ஆகிய திரு.க.கந்தையா தலைமையில் இயக்குனர் சபை நியமிக்கப்பட்டது. மேலும் பொது முகாமையாளராக வடமாகாண ஐக்கிய மேற்பார்வை சபை கூட்டுறவுக் கல்லூரி விரிவுரையாளரும் கூட்டுறவு பரிசோதகரும் ஆகிய திரு.இ. இராயசுந்தரம் நியமிக்கப்பட்டார்.

தலைவர், இயக்குனர்சபை வழி காட்டலுடன் பொது முகாமையாளர் ஏற்கனவே சமாசத்தில் இருந்த மூத்த பணியாளர், வடபகுதி ஐக்கிய மேற்பார்வை சபை கணக்குப் பதிவாளர், ஓய்வு பெற்ற கூட்டுறவுப் பரிசோதகர் ஆகியோரை உள்ளடக்கி ஒரு நிறைவான பலம் பொருந்திய ஆளணியை உருவாக்கிப் பல வளர்ச்சித் திட்டங்களை முன்னெடுத்து சமூக பொருளாதார அபிவிருத்திக்கு வித்திட்டார்கள். இவ் ஸ்தாபனங் களால் உருவாக்கப்பட்ட பணியாளர்கள் காலத்திற்குக் காலம் பொது முகாமையாளராகவும் மத்திய மட்ட முகாமையாளராகவும் செயற் பட்டு வந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

சங்கம் நுகர்ச்சி வியாபாரம், விவசாய அபிவிருத்தி சந்தைப்படுத்தல், கைத்தொழில் அபிவிருத்தி, கிராமிய வங்கிச் செயற்பாடுகள் என்பன போட்டி போட்டு சமாந்தரமாக செயற் பட்டு இலாபகரமாக இயங்கியது. சங்கம் பதிவு செய்து 5 ஆண்டுகளில் 700க்கு மேற்பட்ட பணியாளர்கள் கடமையாற்றியதன் மூலம் இப்பிரதேச மக்கள் வேலை வாய்ப்பைப் பெற்றிருந்தார்கள்.

**இக் காலகட்டத்தில் உருவாக்கப்பட்ட சிறுகைத்தொழில்கள்**

1. மின்தறி விரிவாக்கம்
2. ஆடை தயாரிக்கும் நிலையம்
3. சாயமிடல், அச்சிடல்
4. பண்டத்தரிப்பு கிராமிய வங்கி
5. விவசாய பண்ணை
6. விவசாய சேவை நிலையம்
7. தீப்பெட்டி உற்பத்தி
8. சோப் உற்பத்தி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. நல்லெண்ணெய் உற்பத்தி

10. பீடி உற்பத்தி

11. இவற்றைச் சந்தைப்படுத்துவதற்காக இரண்டு லொறிகள் கொள்வனவு செய்யப்பட்டது.

**காணிக் கொள்வனவு**

1. பண்டத்தரிப்பு அலுவலகக் காணி - 2
2. பெரியவிளான் - கிளைக் காணி
3. பெரியவிளான் விவசாயப் பண்ணை
4. இளவாலை கிளைக் காணி
5. மாரீசன் கூடல் கிளைக் காணி
6. மக்குவில் கிளைக் காணி

மேற்படி தொழில் நடவடிக்கைகளுக்காக காணிகள் கொள்வனவு செய்யப்பட்டன. கட்டடங்கள் கட்டப்பட்டன. மேலும் மூலதனம் மக்கள் வங்கி மூலம் பெறப்பட்டு முதலீடு செய்யப்பட்டது. இருந்தும் சங்கம் 1975 வரை இலாபகரமாகச் செயற்பட்டு 1975ல் நடைபெற்ற சர்வதேச கூட்டுறவு போட்டியில் யாழ் மாவட்டத்தில் முதலாம் இடத்தையும் தேசிய மட்டத்தில் மூன்றாம் இடத்தையும் பெற்று வரலாற்றுச் சாதனை படைத்தது.

1976ம் ஆண்டு ஐக்கிய முன்னணி அரசின் பொருளாதாரக் கொள்கை மாற்றம் உற்பத்தித் துறையின் தாராள பொருளாதார இறக்குமதி காரணமாக மின்தறி உற்பத்தி, உடைதயாரிப்பு நிலைய உற்பத்திகள் சந்தைப்படுத்தலில் தேக்கம் ஏற்பட்டு உற்பத்திப் பொருட்கள் முடக்கப்பட்டு உற்பத்தி குறைவடைந்தது. மேலும் தொடர்ந்து வந்த ஆண்டு போர்ச் சூழல் காரணமாக தீப்பெட்டி உற்பத்திக்குத் தேவையான மருந்துப் பொருட்களுக்கு அரசாங்கத்தால் தடை விதிக்கப்பட்டதால் தீப்பெட்டி தொழிற்சாலையையும் இயக்க முடியாமல் போய்விட்டது. மேலும் மின் துண்டிப்புக்களும் உற்பத்தித் துறையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டு நட்டமடைந்தது மேலும் இத்துறையில் பணியாற்றிய பணியாளர் ஆள் குறைப்பு செய்யப்பட்டனர். மேலும் வங்கியில் பெற்ற கடன்களை செலுத்த முடியாது நிதி நெருக்கடி ஏற்பட்டது. மேலும் போர்ச்சூழல் காரணமாக விவசாய நடவடிக்கைகள் சந்தைப்படுத்தல் ஆகியவை முடக்கப்பட்டது. கிராமிய வங்கி அடைவு நடவடிக்கைகள் நிறுத்தப் பட்டது.

மக்கள் வங்கிக்குச் செலுத்த வேண்டிய கடன்கள் பெரியவிளான் முந்திரிகைத் தோட்டக்காணி விற்கப்பட்டு தீர்வு செய்யப்பட்டது. மற்றும் கிராமிய வங்கி நிதி பாவனையும் நுகர்ச்சிப்பகுதி இலாபத்தில் மாதாந்தம் ரூபா 10,000/= செலுத்தி தீர்வு செய்யப்பட்டன. அரசின் பாராளுமன்ற உறுப்பினர் ஒரு சிலரின் தலையீடு நிர்வாகத்தின் உள் முரண்பாடுகளும் இக்காலத்தில் சங்கம் பின்னடைவுக்கு ஒரு காரணமாகும் இதன் காரணமாக பல தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள் நியமிக்கப்பட்டார்கள். கூட்டுறவுத் திணைக்களத்தினரும் மக்கள் வங்கியின் அனுசரணையுடன் சங்கம் எதிர்நோக்கிய நிர்வாக, நிதிப் பிரச்சனைகள் படிப்படியாகத் தீர்வு செய்யப்பட்டு 1987ம் ஆண்டுகளுக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் சங்கம் ஸ்திர நிலைக்குத் திரும்பியது. 1992ல் ஏற்பட்ட யுத்த சூழ்நிலை காரணமாக சங்கம் மீண்டும் நெருக்கடிக்கு உள்ளானது. இருந்தும் அக்கால கட்டத்தில் கடமையாற்றிய பணியாளரின் முயற்சியால் பொருட்கள் இழப்பு ஏற்படாது பண்டத்தரிப்பு களஞ்சியத்தில் உள்ள பொருட்கள் இரவோடு இரவாக சங்கானைக்கு மாற்றப்பட்டு சங்கானை, மானிப்பாய், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் கிளைகளை அமைத்து பொருள் விநியோகம் மேற்கொள்ளப் பட்டது. 1995ம் ஆண்டு மீண்டும் இடப்பெயர்வை அடுத்து தென்மராட்சியில் கிளைகள் அமைத்து பொருள் விநியோகம் மேற்கொள்ளப் பட்டது. மீண்டும் 1996ம் சூரிய கதிர் இராணுவ நடவடிக்கையால் சங்கம் ரூபா 6 இலட்சத்திற்கு மேல் பொருளிழப்பு ஏற்பட்டது மீண்டும் 1997ம் ஆண்டு சொந்த இடமான பண்டத்தரிப்பில் செயற்படத் தொடங்கியது. இக்கால கட்டத்தில் பொருள் ஏற்றி இறக்கும் பணியில் பணியாளர்கள் ஈடுபட்ட போது பொது முகாமையாளர் உட்பட பல பணியாளர்கள் இராணுவத்தால் பயங்கரவாதிகள் என சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு சித்திர வதைக்கு உட்படுத்தப்பட்டு இளவாலை பங்குத் தந்தையின் செயற்பாட்டால் விடுவிக்கப்பட்டனர். மேற்கண்டவாறு சங்கமும், பணியாளரும் பல கஸ்டங்களையும் இழப்புக்களையும் தாண்டி மீண்டும் பூச்சியத்தில் இருந்தே ஆரம்பித்தார்கள். பண்டத்தரிப்பில் இருந்த எமது சங்க அலுவலகம், களஞ்சியக் கட்டடம் இடிபாடுகளுடன் கூரைகள் இல்லாமல் காட்சியளித்தது. இருந்தும் பண்டத்தரிப்பு Y.M.C.A கட்டடத்தில் அலுவலகத்தை இயக்கி எஞ்சி இருந்த கூரைத்தகடுகளால் எஞ்சியிருந்த கட்டிடத்திற்கு கூரை அமைத்து களஞ்சிய வசதி ஏற்படுத்தப் பட்டது. அப்போது இடம்பெயர்ந்த மக்களுக்கு ஒரு சில குறிப்பிட்ட கிளைகள் மூலம் அரசாங்க அதிபரிடம் இருந்து பெறப்பட்ட உணவுப் பொருட்கள் விநியோகிக்கப்பட்டன.

பிரதேச செயலர் நன்கொடை மூலமும் மக்கள் வங்கி கடன் உதவி மூலமும் சங்கக் கட்டடங்கள் சிறிது சிறிதாகக் திருத்தப்பட்டு நுகர்ச்சி வியாபார நடவடிக்கைக்கு விஸ்தரிக்கப் பட்டது. பேக்கரி, கிராமிய வங்கி என்பன மீண்டும் செயல்படத் தொடங்கியது. அப்போது குடாநாட்டுக்கு உணவு விநியோகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமே மேற் கொள்ளப்பட்டது. சங்கங்கள் தமது வியாபார நடவடிக்கைகளை பெருக்கி இலாபத்தில் இயங்கத் தொடங்கியது. இதே போல் இச்சங்கம் இலாபத்தில் இயங்கத் தொடங்கியது.

மேலும் இக்காலத்தில் பொதுச் சபை இயக்குநர்சபை அனுமதியுடன் உழவு இயந்திரம் கொள்வனவு செய்யப் பட்டு கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்பட்டது. லேடன் லொறியும் வவுனியாவில் இருந்து கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப் பட்டது மேலும் பல அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

I. கிராமிய வங்கி மூலம் அங்கத்தவர் சுயமுயற்சிக் கடன் திட்டம்

II. பண்டத்தரிப்பில் அரிசி ஆலை நிறுவி இன்றுவரை இலாபமாக செயற்படுகின்றது

III. சங்கம் பண்டத்தரிப்பில் ஒரு எரி பொருள் நிலயத்தை ஆரம்பத்தில் நிறுவுவதற்கு மேற்கொண்ட போது அன்றைய அரசியல் வாதிகள் தலையீட்டால் தோல்வி யடைந்தது. இக்கால கட்டத்தில் மாதகல் திரு. திருச்சிற்றம்பலம் பொது முகாமையாளர் சு.வையிரவநாதன் ஆகியோரின் இடைவிடா முயற்சியால் பாராளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தாவின் தலையீட்டால் எமது சங்கத்திற்கு எரிபொருள் நிலையம் பெற்றுத் தரப்பட்டது. இதன்மூலம் சங்கம் மாதாந்தம் நிரந்தர வருமானம் பெற ஏதுவாக உள்ளது.

IV. மாதகல் அரைக்கும் ஆலை நிறுவி சேவையில் ஈடுபட்டும் உற்பத்தி நடவடிக்கை மேற்கொண்டும் சங்கத்திற்கும் இன்று வரை கணிசமான இலாபத்தை ஈட்டியது.

2006ம் ஆண்டில் பொது முகாமையாளராக இருந்த திரு.சு.வையிரவநாதன் ஓய்வு பெற சிறிது இடைவேளையின் பின் திரு.ஆ.நாகராசா பொது முகாமை யாளராகப் பொறுப்பேற்றார். இக்கால கட்டத்தில் மீண்டும் உள்நாட்டுப் போர் உச்சம் பெற்றது. இதில் வடபகுதிக்கு உணவுப் பொருள் கொண்டுவருவதில் தடங்கல் ஏற்பட்டு உணவு தட்டுப்பாடு ஏற்பட்டது. அப்போது சங்க அரிசி ஆலையில் கணிசமான அளவு நெல் கையிருப்பில் இருந்தமையால் சங்க பாவனையாளர்களுக்கு தேவையான அரிசி கட்டுப்பாட்டு விலையில் விநியோகிக்கப் பட்டது. தொடர்ந்து மீண்டும் கப்பலில் பொருட்கள் ஏற்றிவரப்பட்டு சங்கமூலம் மக்களுக்கு விநியோகிக்கப்பட்டது.


இக்கால கட்டத்தில் சங்கம் கணிசமான இலாபத்தை அடைந்தமை குறிப்பிடத்தக்கதாகும். அரசசார்பற்ற நன்கொடை மூலம் பின்வரும் அபிவிருத்தித் திட்டங்கள் மேற் கொள்ளப்பட்டன.

1. தலைமை அலுவலகக் கட்டடம் - 7.7 மில்லியன்
2. கோப் சிற்றி - 1 மில்லியன்
3. மினி கோப் சிற்றி – 5 - 1.5 மில்லியன்
4. மின்தறி களஞ்சியம்
5. சித்திர மேழி கிளைக் கட்டடம்
6. மாதகல் வெங்காயக்களஞ்சியம்

சங்கம் தற்போது ஆளணி பௌதீக வளங்களுடனும் நிதி வளத்துடனும் உள்ளது. மேற்படி பௌதீக வளங்களை இன்றைய நவீன தொழில்நுட்ப முறைக்கு மாற்றிய மைக்கப்பட்டால் இச்சங்கம் வரும் காலத்தில் பொருளாதார வளங் கொண்ட சங்கமாக மிளிரும்.

"ஒன்று பட்டால் உண்டு வாழ்வு
ஒற்றுமை நீங்கின் அனைவருக்கும்
தாழ்வு"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




திரு. அ. கிறிஸ்ரி ஜயந்தன்

கணக்காளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கூட்டுறவின் முக்கியத்துவம்

எஸ். எஸ். உதயகுமார்,
தலைவர்,
பொருளியல் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

இன்றைய இருபத்தியோராம் நூற்றாண்டிலும் நவீன மனிதன் விண்ணையும் அளந்து வெண்நிலாவிலும் செவ்வாய்க்கிரகத்திலும் குடியேறும் முயற்சிகளிலும் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றான். இக்காலத்திலே அபிவிருத்தி என்ற பெரு விருட்சமானது தொழில்நுட்பம் என்ற மூலவேரின் அடர்ந்த பெரும் கிளைகளை அகில உலகெங்கும் பரப்பி வியாபித்துள்ளது.

இன்றைய இந்த விஞ்ஞான விருத்திகளுக்கெல்லாம் காரணம் தான் என்ன? கல்லை உரசித் தீயைக் கண்டுபிடித்த காலத்தில் இருந்து உதயமாகிய தொழில்நுட்ப வளர்ச்சியானது இன்று விண்ணையும் விஞ்சிவிட்டது. இவை யாவும் தனிமனித முயற்சியினால் மட்டுமே உருவாக்கப்பட்டவையா? இல்லவே இல்லை. கூடி வாழும் கூட்டுறவுப் பண்பு மூலமே இவற்றுக்கான அடித்தளம் இடப்பட்டுள்ளது என்பதை யாராலும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. எந்தளவு உடல் வலிமை, மன வலிமை, சமூக வலிமை கொண்டவனாக ஒருவன் இருந்த போதிலும் தனியாக அவனால் எச் செயலையும் செய்ய முடியாது.

“பண்டு முளைப்பது அரிசியேயானாலும்
விண்டுமி போனால் முளையாதாம்
கொண்ட பேராற்றல் உடையார்க்கு
ஆகாத அளவின்றி ஏற்ற கருமம் செயல்”

என்ற தமிழ் மூதாட்டி ஔவையின் மூதுரைப் பாடலடி இவ்வுண்மையை அழகாகவும், தெளிவாகவும் விளக்குகின்றது.

எனவே யாரும் கூட்டுறவு பற்றி நன்கு தெளிவாக அதாவது உள்ளங்கை நெல்லிக்கனி போல உயர்ந்திருக்க வேண்டும். மக்கள் தமது அரசியல், சமூக, பொருளாதார, கலாச்சார விருத்தி கருதி தானாகவே முன்வந்து ஒன்று கூடுவதை கூட்டுறவு என வரையறை செய்யலாம்.

இன்றைய இக்காலத்தில் அதாவது கைத்தறியில் ஆரம்பித்த கைத்தொழில் யுகம் கணணியை வலம் வரும் இக்காலத்திலே மனிதனுடைய எல்லாச் செயற்பாடுகளுக்கும் காரணகர்த்தாவாக அமைந்திருப்பது கூட்டுறவு ஆகும் என்றால் அது மிகையாகாது. கூட்டுறவின் தந்தை என எல்லோராலும் போற்றப்படும் றொபேர்ட் ஓவனின் உயரிய சிந்தனைக் கோட்பாடுகளின் மூலமாக இங்கிலாந்திலே ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவு இயக்கமானது இன்று எல்லா நாடுகளிலும் தன் பங்கை செவ்வனே ஆற்றி வருகின்றன. ஒரு மனிதனுடைய கருவறையிலிருந்து கல்லறை வரையான எல்லா செயற்பாடுகளுக்கும் காரண கர்த்தாவாக விளங்குவது கூட்டுறவே ஆகும் என்பதை யாபேரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றுக்கொண்டே ஆக வேண்டும்.

எம்மைச் சூழவுள்ள மனிதர்கள் ஒன்று சேர்ந்து வாழ்வதையே நாம் சமூகம் என எடுத்துக் கொள்கிறோம். அந்த சமூகமானது நல்லமுறையில் விருத்தியடைய வேண்டும். ஒரு சமூகமே சர்வதேச உலகத்தின் அடிப்படை அலகு. கூட்டுறவு முறையின் உயர்ந்த தன்மையினாலேயே இன்றைய சமூகம் விருத்திப் படிகளை நோக்கி மென்மேலும் முன்னேறிக் கொண்டிருக்கிறது. அனைவரும் ஒன்றுபட்டு செயற்படுவதே கூட்டுறவு.

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு – நம்மில்
ஒற்றுமை நீங்கின் அனைவர்க்கும் தாழ்வு
நன்றிது தேர்ந்திடல் வேண்டும் - இந்த
ஞானம் வந்தாற் பின் நமக்கெது வேண்டும்"

என்று புரட்சிக்கவிஞர் பாரதி பாடிச் சென்றுள்ளார். மனித ஒற்றுமை தான் சமூகத்தின் இணைப்பம்சம். ஆனால் சமூகம் பெருகப் பெருக இந்த இணைப்பம்சம் உடைக்கப்பட்டு முரண்பாடுகள் மலிந்து விடுகின்றன. குடிப்பிறப்பினால் ஏற்படும் முரண்பாடுகளை சாதி என்றும் குழுஅமைப்பினால் ஏற்படும் முரண்பாடுகளை மதம் என்றும் பண்பினால் ஏற்படும் முரண்பாடுகளை நல்லோர், தீயோர் என்றும் பணத்தினால் ஏற்படும் முரண்பாடுகளை ஏழை, செல்வன் என்றும் பல முரண்பாடுகள் சமூகத்தை உடைத்து விடுகின்றன. சொத்தினால், உழைப்பினால் ஏற்படும் முரண்பாடு முதலாளி, தொழிலாளி என்ற வர்க்க பேதத்தினையே உருவாக்கி விடுகின்றனர் எனவே சமூகப் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்த இம்முரண்பாடுகளை ஒழிக்க செயற்றிறனும் பயனுறுதியும் மிக்க ஒரு அமைப்பு வேண்டும். அது கூட்டுறவு மட்டுமாகத் தான் இருக்க முடியும்.

19ம் நூற்றாண்டிலே சீன யப்பான் சண்டைகளால் விலைவாசி உயர்ந்ததால் அல்லற்பட்ட மக்களுக்கும் எமது நாட்டிலே பிரித்தானியர் ஆட்சியின் போது நலிவடைந்த கிராமியப் பொருளாதார முறையின் காரணமாக பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கும் கைகொடுத்து உதவியதும் கூட்டுறவே ஆகும்.

சமூகப் பொருளாதார முரண்பாடுகளை நீக்கி தொழிற்பிரச்சினைகளையும் உழைப்புச் சுரண்டல் பிரச்சினைகளையும் கூட்டுறவின் மூலமே தீர்க்க முடியும் என ஜோன் ஸ்டுவர்மில் குறிப்பிடுவது சுட்டிக்காட்டத்தக்கதாகும்.

இன்றைய உலகின் கூட்டுறவானது பல மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. முதலாளித்துவம் வளர்ச்சிக்குத் தடையாகிவிட்டது. சமூக மக்களை ஒன்றுபடுத்தி விட்டதும் அவர்களிடையே ஏற்படும் சேமிப்பும், சிக்கனமும் வளர வழி செய்து விட்டது. யாவரும் எல்லா நலன்களையும் பெற்று அபிவிருத்தியடைய முடிவதோடு நாட்டில் அபிவிருத்தியையும் துரிதப்படுத்த முடியும்.

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, ஒற்றுமையே பலம், கூடி வாழ்ந்தால் கோடி நன்மை என்று எம்முன்னோர்கள் ஆதிகாலத்திலேயே கூறி விட்டனர்.

இன்று எல்லோரும் நற்பண்புகளைக் கடைப்பிடித்து பொதுநலக் கொள்கை உடையவர்களாக வாழ வழி செய்வது கூட்டுறவே ஆகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எம் கூட்டு உறவு

செல்வி. சுபோதினி சபாரத்தினம்
கிராமிய வங்கிப் பகுதி

கூட்டுறவு பற்றி கூறும் பொழுது
கூடவே தோன்றுது கொண்ட ஒற்றுமையே
பழக்கத்தில் உள்ளதை வழக்கத்தில் மாற்றி
இயங்க வைப்பது அதன் ஆற்றுமையே
சேவை செய்யும் நோக்குடன் உருவாகி
தேவை அறிந்து மக்களின் குறை தீர்க்கும்
அரை நூற்றாண்டு காலத்தை நோக்கி
அயராது ஓயாது சேவையாற்றி
என்றும் எண்ணற்ற சாதனைகளை
நிகழ்த்திய ஓர் சங்கம் இன்னும் பல
சாதித்துக் காட்டும் அது திண்ணம்
நிறைய அர்ப்பணிப்புக்கள் கண்டதொரு கூட்டுறவு
பண் மாநகரில் பல கிளைகள் பரப்பி
மக்களுக்கு ஓர் உறவுப்பாலமாய்
காலம் காலமாய் வித்திட்டு
அரசி ஆலை பாண் சாலை புடவை நிலையம் என்று
மக்கள் நலன் ஒன்றே மண்ணில்க் கொண்ட சங்கம்
மக்கள் சேவைக்கென கிராமிய வங்கி மூன்றினை
தன்னகத்தே கொண்டு உயர்சேவையாற்றும்
விவசாய சுய தொழில் கடன் வசதி
ஒய்வூதியம் ஒருங்கிணைத்தே தரக் கூடிய ஒரு சங்கம்
ஒன்றிணைந்து செயற்பட்டு மனம் திறந்து
வசப்பட்டு பக்தியோடு தொழிற்ப்பட்டு
சாதனைகளைக் கொண்டாடுவோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலமைப்பரிசிலில் சித்தியடைந்த மாணவர்களின் கௌரவிப்பின் போது.......









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எனது உள்ளக்கிடக்கையில் பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கம்......

திருமதி. சோ. கருணாகரன்

இலங்கையின் வடபால் அமைந்துள்ள யாழ் குடாநாட்டின் வலி. தென்மேற்கு பிரதேசத்தில் பெருமையோடு முன்னணியில் திகழும் சங்கமாகப் பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கம் திகழ்கின்றது. ஆரம்பத்தில் தனித்தனி நுகர்வோர் சங்கமாக ஒவ்வொரு கிராமத்திலும் 1952ல் அரும்பி பண்டகசாலைச் சங்கமாக உருவாகி விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களைப் பெற்று பண்டமாற்று முறையில் அவர்களுக்குத் தேவையான நாளாந்த உணவுப் பொருட்களை வழங்கும் சங்கமாக இருந்தது. இவ்வாறான அமைப்புக் களுக்கு ஓர் தலைமைச் செயலகமாக (சமாசமாக) பண்டத்தரிப்பில் 1958ல் கூட்டுறவாளர்களால் ஆரம்பிக்கப் பட்டது.

பண்டத்தரிப்பு சமாசம் நுகர்ச்சி பொருள் விற்பனையுடன் ஒரு பேக்கரியை உருவாக்கி பாண், பணிஸ், பிஸ்கட், கேக் வகைகளை உற்பத்தி செய்தது மட்டுமன்றி பாடசாலை மாணவர்களின் மதிய உணவுக்கான பணிஸ் வகைகளை விநியோகித்து மாவட்டத்தில் சிறந்த பாண் விநியோ கஸ்தர் என்ற பெயரைப் பெற்றது. மேலும் 16 லூம்கள் கொண்ட கைத்தறி நெசவாலையும் ஆரம்பிக்கப்பட்டு புடவை விற்பனை நிலையமொன்றும், நுகர்ச்சிப் பொருள் விற்பனை நிலையமொன்றும் பண்டத்தரிப்பில் ஸ்தாபிக்கப்பட்டன. பாண் விநியோகத்திற்காக ஒரு வானும் நுகர்ச்சிப் பொருள் விநியோகத்திற்காக ஒரு லொறியும் கொள்வனவு செய்யப் பட்டது.

13 கிளை நிலையங்களுடனும் 04 களஞ்சியங்களுடனும் உணவுப் பொருள் விநியோகிக்கும் உயரிய பணியை மாத்திரம் புரிந்து வந்த சங்கம் வளர்ச்சிப் படிகளில் ஏறி வந்திருப்பதை வரலாறு உணர்த்துகின்றது. கைத்தறி, புடவை, பேக்கரி என்பவற்றின் உற்பத்தியில் புதிய உருவாக்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன. மாதகல் மத்தியில் 12 லூம்கள் கொண்ட கைத்தறி நெசவாலையும், ஒரு கிராமிய வங்கியும், சில்லாலையில் சிகரெட் புகையிலைச் சங்கமொன்றும் ஆரம்பிக்கப்பட்டது. தொடர்ந்து பல லட்சங்கள் செலவில் பண்டத்தரிப்பு மின்தறி ஆலையொன்று ஆரம்பிக்கப் பட்டு எமது பிரதேசத்திற்குட்பட்ட அயல் கிராமங்களிலுள்ளவர்களுக்குக் கூட தொழில் வாய்ப்பு ஏற்படுத்தப் பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1971ல் புனரமைப்பின் பின் 06.03.1971ல் வட்டுக்கோட்டை தொகுதியில் ஒரு பகுதியையும், காங்கேசன்துறைத் தொகுதியில் ஒரு பகுதியையும் கொண்ட பண்டத்தரிப்பு பட்டினசபை, கிராமசபை என்பவற்றிற் குள்ளடங்கியதாக பண்டத்தரிப்பு, மாதகல், மாரீசன்கூடல், சித்திரமேழி, இளவாலை, பெரியவிளான், பிரான்பற்று, வடலியடைப்பு, சில்லாலை எனும் கிராமங்களை தனது பிரதேச எல்லைக்குட்பட்டதாக அமைத்து J/1550 என்னும் பதிவிலக்கத்தில் பாரிய ப.நோ. கூ.சங்கமாக உருவாக்கப்பட்டது. புனரமைப்பின் பின்னரான 05 ஆண்டு களில் சங்கம் பொருளாதாரத்தில் தன்னிறைவு அடைந்து குறுகிய காலத்தில் பல பரிசுகளையும் வெற்றி விருதுகளையும் பாராட்டுக்களையும் பெற்றுள்ளது. சங்க நடவடிக்கைகள் யாவற்றிலும் அங்கத்தவர்களைப் பங்குகொள்ளச் செய்து அவர்களின் மேம்பாட்டு நோக்கங்களைப் பூர்த்தி செய்வதை இலக்காகக் கொண்டு அவர்களிடையே விழிப் புணர்ச்சியையும் ஈடுபாட்டையும் அதிகரிக்க 1976ல் பொருட்காட்சிகள், கலைநிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்து விழா கொண்டாடியது.

தனது தொழிற்பாடுகளை பல துறைகளில் பன்முகப்படுத்தி தையல் நிலையம், பிறின்ரிங், டையிங் பிரிவுகளும், பிற சோப் தொழிற்சாலை களும் ஆரம்பிக்கப்பட்டு வேலையற்ற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்துள்ளது. பண்டத்தரிப்பில் ஓர் கிராமிய வங்கி ஆரம்பிக்கப்பட்டு விவசாயிகளுக்கு கிராமிய வங்கி மூலம் கடன் வசதிகளையும், நீர் இறைக்கும் இயந்திரம், விதை தானியம் என்பவற்றை வழங்கி விவசாயத்துறையி னருக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தது.

பாவனையாளருக்கு உணவுப் பொருட்கள், உடைகள், தட்டுப் பாடான பொருட்கள் விநியோகித் ததுடன் சொந்த இலாபத்தை மனதில் கொள்ளாது பன்முகப்படுத்தப்பட்ட உற்பத்தி தாபனங்கள் அமைத்து புடவை உற்பத்தி, சாறி பிறிண்ரிங், சாறி டையிங் என்பவற்றில் புதிய வெற்றியை ஈட்டியது. பிறநாட்டு புடவை இறக்குமதியை நிறுத்திய வேளையில் தரத்திலோ குறையாத ஆடை அணிகள் தயார் செய்து இலங்கை பூராகவும் அளித்து பெரும் புகழும் பெற்றது.

பல இலட்சம் செலவில் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்ற சங்கக் கட்டிடங்கள், தொழிற்சாலைகள், உரமான உழைக்கும் கரங்கள் சங்க வளர்ச்சிக்கு சான்று பயக்கின்றது. சங்கம் அக்காலத்தில் ஈட்டிய இலாபத்தை புதிய முயற்சிகள், அபிவிருத்தித் திட்டங்கள், அங்கத்தவர் களுக்கான இலாபப் பங்கீடு நுகர்ச்சி யாளருக்கான கொள்வனவிற்கேற்ற தள்ளுபடி போன்ற திட்டங்களில் செலவிட்டது. 13 கிளைகளுடன் மேலதிகமாக 5 துணைக்கிளைகளும் ஆரம்பிக்கப்பட்டது. சங்க எல்லைப் பரப்பில் உள்ள கல்வி நிலையங்களில் கல்வி மேம்பாட்டுக்கு உதவி செய்ததோடு புலமைப்பரிசில் பெற்ற அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கும் பணத்தொகை வழங்கி ஊக்குவித்துள்ளது. இன்றுவரை புலமைப்பரிசில் பெற்ற அங்கத்தவர்களின் பிள்ளைகள் கௌரவிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

அச்சுவேலி கைத்தொழிற் பேட்டையில் தீப்பெட்டி தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டு 03 வருடங்கள் இயங்கி பாதுகாப்பு ஏற்பாடு காரணமாக மூடப்பட்டது.

அக்காலத்தில் உள்நாட்டில் மாத்திரமன்றி வெளிநாட்டிலும் சங்கம் தன் புகழை நிலைநாட்டியது. ஐரோப்பிய பொருளாதார சமூகம் வழங்கிய உதவியால் ஜேர்மனியில் நடந்த உலகப்பொருட் காட்சியில் சங்கம் தன் உற்பத்திப் பொருட்களான சேட், நல்லெண்ணை வகைகளை காட்சிக்கு வைக்கும் அரிய வாய்ப்பும் இப்பொருட்களை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யும் வாய்ப்பினையும் பெற்றது. 1974ம் ஆண்டு காலப்பகுதி தொடக்கம் இன்றுவரை சங்கம் தரமான நல்லெண்ணெய் உற்பத்தியில் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

13 கிளை நிலையங்களும் 05 துணைக் கிளை நிலையங்களும், புடவை, இரும்பு நிலையங்களும் இயங்கி வந்தன. குடாநாட்டில் ஏற்பட்ட போர்ச்சூழ் நிலையாலும், மின்தடை காரணமாகவும் மின்தறி நிலையம் செயற்பட முடியாத நிலையிலும் இதனால் தையல் நிலையம் செயற்படாத நிலையும் ஏற்பட்டது. தொடர்ந்து 1992ல் ஏற்பட்ட இடப்பெயர்வால் சங்கம் சங்கானைக்கு சென்று தொழில் வளங்கள் இழந்தாலும் எமது பகுதி மக்களுக்குச் சேவையாற்றியது. 1995இல் மீண்டும் ஏற்பட்ட இடப் பெயர்வால் மீசாலை, புத்தூர்ச் சந்தி ஆகிய பகுதியில் சங்கத்தை அமைத்து 1997இல் மீண்டும் பண்டத் தரிப்பில் பல சிரமங்களுக்கு மத்தியில் ஆரம்பிக்கப்பட்டது.

இவ்வாறாக மீண்டும் தனது செயற்பாட்டை ஆரம்பித்த எமது சங்கம் பல இன்னல்களின் மத்தியிலும் தொடர்ந்து இயங்கி வந்தது. இவ்வாறு இயங்கி வரும் நிலையில் சிறந்த முகாமைத்துவத் திறனும் சிறந்த நிர்வாகத் திறனும் கொண்ட பொது முகாமையாளர் திரு. சு. வைரவநாதன் அவர்களின் பெருமுயற்சியின் பயனாக எமது பிரதேச மக்களின் எரிபொருள் தேவைக்கென ஓர் எரிபொருள் நிரப்பு நிலையத்தை 2001ம் ஆண்டளவிலே முகவ ராண்மையை பெற்று ஆரம்பித்து இன்றுவரை இலாபகரமாக இயங்கி வருகின்றது. இதனைத் தொடர்ந்து மக்களின் அன்றாடப் பசிதீர்க்கும் அரிசியினை குறைவின்றி வழங்குவதற்காக பாரிய செலவினை முதலீடாகக் கொண்டு அரிசி ஆலையினை 2003ம் ஆண்டளவிலே நிறுவி சிறப்பாக இன்றும் செயற்பட்டு வருகின்றது. இதனைத் தொடர்ந்து ஏனைய பகுதி மக்களைப் போன்று இளவாலைப் பகுதி மக்களின் சேமிப்புப் பழக்கத்திற்கென 2003ம் ஆண்டிலே அங்கு ஓர் கிராமிய வங்கிப் பிரிவையும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிசிமா, மிளகாய்த் தூள் என்பவற்றினைப் பொதுமக்கள் பெற்றுக் கொள்வதற்காக 2004ம் ஆண்டில் மாதகலில் அரைக்கும் ஆலையையும் ஆரம்பித்து இன்றைவரை சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றது.

இவ்வாறு செயற்பட்டுவரும் காலத்தில் 2005ம் ஆண்டின் இறுதிப் பகுதியிலே ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையின் போது குடாநாட்டின் பல பகுதிகளிலும் பிரதான அத்தியாவசியப் பொருளான அரிசிக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்ட போதிலும் எமது பிரதேச மக்களிற்குப் போதுமான அரிசியினை உரிய பங்கீட்டு முறையின் மூலம் வழங்கிய பெருமை எமது சங்கத்தையே சாரும்.

இவ்வாறாகத் திறம்பட இலாப கரமாக இயங்கி வந்த சங்கம் 2008ம் ஆண்டிலே அன்றைய வலி. தென் மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலராயிருந்த திருமதி. ரூபினி வரதலிங்கம், திருமதி. அ. எழிலரசி அவர்களின் ஒத்துழைப்பினாலும் சங்கத் தலைவர் திரு. சு. றெ. பிரான்சிஸ் சேவியர் அவர்களின் உதவியுடனும் பொது முகாமையாளர் திரு. ஆ. நாகராசா அவர்களின் பெருமுயற்சியினாலும் வடக்கின் துரித மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் பெறப்பட்ட நிதியுதவியுடன் கிராமியவங்கிப் பகுதி, புடவை நிலையம், கூட்டுறவு நகர் என்பவற்றைக் கீழ்த்தொகுதியாகவும், தலைமைக் காரியாலயத்தை மேல்த் தொகுதியாகவும் கொண்ட புதிய கட்டடத் தொகுதியிலே இயங்கி வருகின்றது.

கடந்த காலத்தில் சிறந்த சங்கமாக செயற்பட்டதன் காரணமாக மாவட்ட, மாகாண ரீதியாக பரிசில்களையும் பெற்றுக்கொண்டது. அதுமட்டுமன்றி 2013ம் ஆண்டிலே சிறந்த சங்கங்களில் ஒன்றாக எமது சங்கத்தைப் பார்வையிடுவதற்காக ஆசிய நாடுகளைச் சார்ந்த கூட்டுற வாளர்களின் சுற்றுப்பயணத்தின் போது எமது சங்கத்திற்கும் வருகை தந்தமை குறிப்பிடத்தக்க ஓர் விடயமாகும்.

இவ்வாறாக பல சிறப்புக் களுடனும் சாதனைகளுடனும் இயங்கி வரும் சங்கம் எதிர்காலத்திலும் பல சிறப்புக்களும் சாதனைகளும் பெற்று மிளிர வேண்டுமென வாழ்த்து கின்றேன்.

"பண். பரிஷ் வாழ்க வாழ்க

பல்லாண்டு வாழ்க வாழ்கவே"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கூட்டுறவு பற்றிய பொதுவான கண்ணோட்டம்

செல்வி. ரேணுகா பாக்கியநாதன்,
கணக்குப் பகுதி.

பிரித்தானிய ஆட்சிக்கு கீழ்ப் பட்ட காலத்தில் இருந்து தோட்டத் தொழிலாளர்களின் பொருளாதார தேவைகளை நிறைவு செய்ய என 1906ம் ஆண்டு இலங்கை கூட்டுறவுச் சங்க முறைமை அல்லது கூட்டுறவு இயக்கம் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. 1957ம் ஆண்டு நாடு பூராகவும் வெவ்வேறு நோக்கத்திற்காக நிறுவப் பட்டிருந்த கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கூட்டுறவுக் கடைச் சங்கங்கள் என்பன அதிகார பிரதேசவாரியாக ஒன்றிணைக்கப்பட்டு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப் பட்டது. மேலும் பொருளாதார வியாபார முறைமைக்கு இசைவாக அல்லது ஏற்றவகையில் 1971ம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் மறுசீரமைக் கப்பட்டன. இதற்கு அமைய சங்கங்களின் அதிகார எல்லையை பரவலாக்கி வலுவான பொருளாதார அமைப்பாக மாற்றியமைக்கப்பட்டது.

தேசிய அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்கின்ற துறையாகக் கருதப்படும் கூட்டுறவு வர்த்தகத்தின் செயற்பாடுகளை நவீன தொழில் நுட்பத்தினதும் புதிய முறைகளை உபயோகிப்பதன் மூலம் தரமுயர்த்து வதன் பொருட்டு ஒத்துழைப்பு வழங்குதல், வழிகாட்டுதல் மற்றும் ஒருங்கிணைப்பை ஏற்படுத்தல் போன்றன சங்கங்களின் பணியாகும்.

கூட்டுறவானது கூட்டுறவுக் கல்வி மற்றும் பயிற்சி போன்ற மேம்பாட்டு செயன்முறைகளை செயற்படுத்தி வழிகாட்டியாகவும் செயற்படுகின்றது எனலாம். கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கிடைக்கப்பெறும் வரப்பிரசாதம் பற்றி நோக்கும் போது தனிநபருக்கு அங்கீகாரம் அளித்தல், உரிமைகளைப் பெற்றுக் கொள்ள வாய்ப்பளித்தல் என்பனவாகும்.

மக்கள் பல்வேறு தொழில்களில் ஈடுபடுவதற்கும், உற்பத்தியான பொருள்களை நல்ல விலையில் விற்பதற்கும் தரமுள்ள பொருள்களை நியாயமான விலையில் மக்கள் வாங்குவதற்கும் கூட்டுறவு பயன் படுகின்றது. எல்லாத் துறைகளிலும் கூட்டுறவு முறை சேவை செய்கின்றது. வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படைத் தகுதிகளைப் பெற இது துணை செய்கிறது.

கூட்டுறவு அமைப்புக்களால் மக்களிடையே ஒற்றுமையும் தன்னம்பிக்கையும் வளர்கின்றன. ஒவ்வொருவரும் தனக்காகவும் பிறருக்காகவும் உழைக்க வேண்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் எண்ணம் மலர்கிறது. தனிமனிதன் என்னும் எண்ணம் மாறிச் சமுதாயம் என்ற எண்ணம் விரிகின்றது. சமுதாயம் தன்னைப் பாதுகாக்கும் என்ற எண்ணத்தை இதன் மூலமும் ஒவ்வொருவனும் உணர்கின்றான். சமுதாயம் உயர்ந்தால் நாடும் உயரும் என்ற நல்ல மனப்பான்மையைப் பெறுகின்றான்.

கூட்டுறவு இயக்கம் தன்னுள்ளே பல நூற்றுக்கணக்கான கூட்டுறவுச் சங்கங்களைக் கொண்டுள்ளது. அச்சங்கங்களுள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமே தலையாயது. தரத்தினாலே பெரியது. அது உணவுப் பொருள்களையும் மற்றைய தேவைப் பொருட்களையும் நியாய விலைக்கு வழங்குகின்றது. விவசாயிகளுக்கு பலவகை உதவிகளை வழங்குகின்றது.

சுருங்கக் கூறின் கூட்டுறவு இயக்கம் மக்கள் இயக்கமாகும். எத்தொழிலும் கூட்டுறவின் வழியாகச் செயற்பட்டால் செம்மையுறும் எப்பொருளையும் கூட்டுமூலமாகப் பெற்றால் பயன்கிட்டும். கூட்டுறவின் பயன் உலகம் முழுவதும் காணக் கிடைக்கிறது. "பல தடிகள் ஒன்றாகக் கட்டப்பட்ட தடிக் கட்டொன்றை முறிக்க முடியாது கஷ்ரப்பட்ட சகோதரர்கள் தடிக்கட்டை அறுத்து தடிகளைத் தனித்தனியாக தடிகளாக்கி மிக இலகுவில் முறித்த கதை "ஒற்றுமை நீங்கின் அனைவருக்கும் தாழ்வு" என்ற கூட்டுறவு அம்சத்தைத் தெளிவாக விளக்குவதாகவும் வேடன் இட்ட வலையில் சிக்கிய புறாக்கள் தம்முடன் ஒன்று சேர்ந்து வலையைத் தூக்கிச் சென்று தப்பிய கதை "ஒன்று பட்டால் உண்டு வாழ்வு" என்ற கூட்டுறவு அம்சத்தைத் தெளிவாக விளக்குவதாகவும் அமைகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுமுகாமையாளர் வரிசையில்




திரு. இ. இராஜசுந்தரம்
(1973 – 1978)



திரு. ம. போசெப்பு
(1984 – 1988)



திரு. க. வைரவநாதன்
(1989 – 2006)



திரு. இ. தங்கராஜா
(2006)




திரு. ஆ. நாகராஜா
(2006 – 2012)



திரு. க. நா. சபாரத்தினம்
(2013)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பண்டத்தரிப்பு பரிஷ் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் உற்பத்திப் பகுதி

திரு. ம. ஸ்ரீதரன்,
பதில் உற்பத்தி முகாமையாளர்.

உற்பத்திப் பகுதியானது பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கம் புனர் அமைப்பதற்கு முன்பே வெதுப் பகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 1971ம் ஆண்டு புனரமைப்புச் செய்யப்பட்டு உற்பத்தி நாடளாவிய ரீதியில் வெற்றியைப் பெற்று சிறந்த முறையில் செயற்பட்டு வருவதை நாம் அனைவரும் அறியக் கூடியதாக இருந்தது.

உற்பத்திகள் மின்தறி, சாயம் இடல், உடை தயாரிப்பு, கைத்தறித் துணி நெய்தல், சவர்க்கார உற்பத்தி, நல்லெண்ணெய் உற்பத்தி, தீப்பெட்டி உற்பத்தி, பீடி உற்பத்தி, அச்சிடல் பகுதி போன்றன 1985 வரை சிறந்த முறையில் செயற்பட்டு வருவதை ஆவண ரீதியில் காணக் கூடியதாக உள்ளது.

சிற்றுண்டிப் பகுதியானது 1995ல் ஆரம்பிக்கப்பட்டு 2004ம் ஆண்டு வரை சிறந்த முறையில் செயற்பட்டு வந்துள்ளது. அதன் பின்னர் அரிசி ஆலை 2003ம் ஆண்டும், அரைக்கும் ஆலை 2004ம் ஆண்டும், நல்லெண்ணெய்ப் பகுதியும் இன்று வரைக்கும் சிறந்த முறையில் மக்களுக்குத் தரமாக உற்பத்தி செய்து மக்களுக்கு ஏற்ற அளவுகளில் கிளை களூடாக விற்பனையை மேற்கொண்டு வருகின்றது.

குறிப்பாக உற்பத்திப் பகுதியில் மின்தறி ஊடாக துணிகள் உற்பத்தி செய்யப்பட்டு அதற்கு சாயம் இடப்பட்டு இங்கிருந்து வெளிநாடு களுக்கும் ஏற்றுமதி செய்ததை ஆவணங்கள் மூலம் அறியக்கூடியதாக இருக்கின்றது. யாழ் மாவட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங் களில் சிறந்த சங்கமாக உற்பத்திப்பகுதி சிறந்த வகையில் செயலபட்டு வந்ததை எல்லோரும் அறிவார்கள். சங்கத்தின் ஆயிரக் கணக்கானோர் உற்பத்திப் பகுதியில் கடமையாற்றி வந்ததை ஆவணங்கள் மூலம் அறியவருவதோடு அவர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கிய பெருமை இச் சங்கத்தையே சாரும்.

மக்கள் சங்கத்தின் பற்றுள்ளவர் களாகாவும் விசுவாசம் உள்ளவர் களாகவும் தங்களுடைய சங்கம் என்ற வகையில் சங்கத்தின் சேவையைப் பெற்று சங்கத்தை நல்ல நிலைக்கு உருவாக்கிய பெருமை மக்களையே சாரும். குறிப்பாக வெங்காய உற்பத்தியில் ஈடுபடும் மக்கள் சங்கத்தின் ஊடாகவே விற்பனையை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொண்டு அதில் ஒரு பகுதி இலாபத்தைச் சங்கக் கட்டடத்தை கட்டுவதற்கான ஒத்துழைப்பையும் வழங்கியுள்ளார்கள்.

உற்பத்திப் பகுதியானது தற்போது அரிசி ஆலை, அரைக்கும் ஆலை, நல்லெண்ணெய்ப் பகுதி, வெதுப்பகம் இன்றுவரை சிறந்த முறையில் உற்பத்தி செய்து மக்களுக்குத் தரமான பொருட்களாகவும், வாடிக்கையாளருக்குத் தேவையான அளவுகளில் பொருட்களை பொதி செய்தும் மக்களைச் சென்றடையும் வகையில் சிறந்த முறையில் செயல்பட்டு வருகின்றது.


வெதுப்பகத்தைப் பொறுத்த மட்டில் பாண், *T* பணிஸ், கிறீம் பணிஸ், மடத்தல், பொழிச்சி, கல்பணிஸ், றஸ்க், கச்சான் பிஸ்கற் என்பன உற்பத்தி செய்து மக்களுக்கு குறைந்த விலையிலும் தரமான பொருட்களாக இருப்பதனால் மக்களே நாடிவந்து பெற்றுக்கொள்கின்றார்கள். சங்க வெதுப்பகமானது இங்குள்ள எத்தனையோ நவீன வெதுப்பகங் களிலும் சிறந்து விளங்குகின்றது. மின்சாரத்தில் வேகவைப்பதிலும் பார்க்க விறகு அடுப்பு போறணையில் வேகவைக்கும் சுவையே மக்களைக் கவர்கின்றது.

அரைக்கும் ஆலையானது மக்களின் தேவைகளுக்கு நெல்லுடைத்தல், மா அரைத்தல், மிளகாய் திரித்தல், ஈர அரிசி அரைத்தல் போன்ற சேவைகளை வழங்கி வருகின்றது. இவ் உற்பத்திப் பகுதியானது சிறந்த முறையில் செயல்பட்டு வருவதை நாம் எல்லோரும் அறிவோம்.

சங்க செயல்பாட்டில் அரிசி ஆலை குறிப்பிடத்தக்க பங்கை வகிக்கின்றது. அங்கத்தவர்களிடமும், சில்லறை உற்பத்தியாளரிடமும் நேரடியாக நெல்கொள்வனவு செய்யப்பட்டு அரிசி உற்பத்தி நடை பெறுகின்றது. எங்கள் பிரதேச வாடிக்கையாளரின் தேவையில் ஒரு பகுதியை நிறைவு செய்கின்றது. தரவுகள் கீழே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

"மக்கள் சேவையே மகேசன் சேவை" எனக் கூறி வாழ்த்துகின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





திரு. ம. மரியஸ் றொமியூல்ட் றொஷான்

பதில் கணக்குப் பதிவாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




திரு. ம. மரியஸ் றொமியூல்ட் றொஷான்

பதில் கணக்குப் பதிவாளர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்ட மட்டத்தில் விற்பனையில் முன்னிலையில் நின்றமைக்கான கிளை முகாமையாளர் கௌரவிப்பு









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மக்களுக்கு அதியுயர் சேவை வழங்கக்கூடிய நிறுவனம் கூட்டுறவுச் சங்க அமைப்பே ஆகும்

பொ.சிவஞான சுந்தரம்
கிளை முகாமையாளர்

கூட்டுறவு என்பது ஐக்கியம், ஒருமைப்பாடு, கூடிஉழைத்தல் என்னும் சொற்பதங்களின் வெளிப்பாடாகும். ஒருவர் தனித்து நின்றுசெய்ய முடியாத விடயங்களை ஏனையவர்களுடன் இணைந்து தனக்காகவும், இணைந்துள்ள ஏனையோருக்காகவும் ஒன்று கூடி உழைத்தல் கூட்டுறவு எனப்படும். ஆதிகாலத்தில் கிராமிய மட்டங்களில் தங்கள் வேலைகளை இலகுபடுத்த ஒன்று கூடி உழைத்த முறைமை நிறுவன அமைப்புகளாக மாற்றமடைந்து கூட்டுறவுச் சங்கங்கள் என்ற அமைப்பு முறையை உருவாக்கியது. இவை காலத் தேவைக்கேற்ப வளர்ந்து பொருளாதார வளர்ச்சியில் பங்கு கொண்டதோடு முதலாளித்துவ சுரண்டலில் இருந்து விடுபடவும் வழிவகுத்தது.

இதன் வளர்ச்சியில் ஏற்படக் கூடிய பிணக்கு நிலைகளைத் தவிர்ப்பதற்காக சட்டங்கள் உருவாக்கப்பட்டு பணித்தொகுதிகளும் உருவாக்கப்பட்டு ஜனநாயகரீதியில் செயல்படுத்தப்படும் ஒரு மக்கள் அமைப்பாக இயங்கி வருகின்றது. இதன் எஜமான்களாக மக்களே காணப்படுகின்றனர்.

கூட்டுறவுச் சங்கங்கள் தனித்தனி அமைப்புகளாக தங்கள் தங்கள் தொழிற்பாடுகளைச் செயற்படுத்துவதற்காக கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள் தொழிற்பாடுகளைச் செயற்படுத்துவதற்காக கடன் விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள் மீன்பிடிக் கூட்டுறவுச் சங்கங்கள் தனித்தனி உற்பத்திக்கான கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற பலவகையான தனித் தொழிற்பாட்டை முன்னிலைப் படுத்தும் கூட்டுறவுச் சங்கங்கள் செயற்பட்டு வருகின்றன.

இவற்றைவிட தனித்துவமாக பல தொழிற்பாடுகளை ஒன்றிணைத்து ஒரு அமைப்பின் கீழ் செயற்படுத்தக் கூடிய ஒரு நிறுவனமாக பலநோக்குக் கூட்டுறவுச் சங்க அமைப்பு உள்ளது. அதில் ஏற்படுத்தப்பட்டுள்ள சட்ட வரையறைகள் இடமளித்துள்ளன. சில அறிஞர்களால் குறிப்பிடப்பட்டது போல் கருவறையிலிருந்து கல்லறை வரை மனித தேவைகளுக்காக இவ் அமைப்புக்களின் தொழிற்பாடுகளை விரிவுபடுத்த முடியும்.


இவ் அமைப்பு நுகர்ச்சிப் பொருள் வியாபாரத் தொழிற்பாடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேமிப்புப் பழக்கங்களை ஊக்குவிப்பதற்கு கடன் சேவைகளை வழங்குவதற்குக் கிராமிய வங்கித் தொழிற்பாடு உற்பத்திப் பொருட்களுக்கான பாண்சாலை, அரிசி ஆலை ஏனைய உப உணவு உற்பத்திகள் உற்பத்தி செய்து மக்களுக்கு வழங்கக் கூடிய சந்தர்ப்பங்கள் அங்கத்தவர்களின் உற்பத்தியாகிய நெல், வெங்காயம், உப உணவுப் பொருட்களாகிய மிளகாய், பயறு, உழுந்து என்பவற்றைக் கொள்வனவு செய்து அவைகளை உரிய சந்தை வாய்ப்பைப் பெற்றுக் கொடுத்தல் போன்ற விடயங்களில், ஈடுபடுவதன் மூலம் அங்கத்தவர் தனிமனித சுரண்டலில் இருந்து விடுபட்டு தமது பொருளாதார அபிவிருத்தியை மேற்கொள்ள முடியும் இதன் போது ஒன்றோடொன்று தொடர்புபட்ட தேவையான விடயங்களில் அங்கத்தவர்களுடன் இணைந்து செயற்படுமுகமாக உற்பத்திக் காலங்களில் அவர்களுக்குத் தேவையான கடன்களை வழங்குதல் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை கொள்வனவும் செய்ய அவர்களுக்கு பொருளாதார வளத்தை ஏற்படுத்திக் கொடுப்பதோடு கடன்களைப் பெற்றுக் கொடுப்பதோடு மாத்திரம் நின்று விடாது சேமிப்புப் பழக்கங் களிலும் அவர்களை ஊக்கப்படுத்தி அவர்களின் முன்னேற்றத்தில் பங்கு பற்றக் கூடிய சந்தர்ப்பம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க அமைப்பிலேயே பின்னிப் பிணைந்துள்ளது.

இதன் நன்மைகளை உணரக் கூடிய வகையில் சகல மக்களும் ஆலோசனை வழங்க அவர்களை அங்கத்தவர்களாக இணைத்து செயற்படுவதன் மூலம் இவ் அமைப்பை வலுப்படுத்தலாம். இவ் அமைப்பின் தொழிற்பாடுகளின் மூலம் கிடைக்கப் பெறும் வருமானங்களில் இதில் இணைந்து கொண்ட அங்கத்தவர்கள், வாடிக்கையாளர்கள், என்பவர்களுக்கு சமுதாயத்தின் மீதான அக்கறை இலாபத்தில் பங்கீடு செய்தல் என்பவற்றைக் கருத்தில் கொண்டு மாணவர்களுக்கான கல்வி ஊக்குவிப்பு, வாடிக்கையாளருக்கு கொள்வனவு மீதி தள்ளுபடி என்பன மக்களுக்குத் திருப்தியளிக்கக் கூடிய வகையில் செயற்படுத்தல் வேண்டும். எனவே மக்களின் பல்வேறுபட்ட தேவைகளை ஜனநாயக ரீதியில் நிறைவேற்றும் நிறுவனம் கூட்டுறவு சங்கங்களே ஆகும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# எம்மோடு ஒன்றிணைந்த கூட்டுறவு

திரு. வை. கைலைநாதன்
மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர்,
யாழ்ப்பாணம்.

"கூட்டுறவே நாட்டுயர்வு", "கூடி வாழ்ந்தால் கோடி நன்மை" என்பது வெறும் வாய்ச் சொல் மட்டுமல்ல. இது வாழ்வின் வானவில். வறுமை எனும் இருளகற்றும் சூரியன். இருளிலே ஒளி காட்டும் இன்பநிலா. கடன் எனும் பளுவை சுமந்து கால் ஒடிந்து போனவர் கடன் பழுவைத் தீர்த்துவைக்கும் சுமைதாங்கி பசுமைத் தோட்டத்திற்கு வாழ்வளிக்கும் மழைமேகம். வர்த்தக நிலையங்களுக்குள் வலியவந்து புகுந்து விட்ட குறையளவு, தரம் இன்மை, அதிகவிலை, கலப்படம் ஆகிய நச்சுக் காற்றினை நலியச் செய்யும் ஓர் ஆயுதம். உற்பத்தி, விற்பனை, நுகர்வு, கடன் வழங்கல் ஆகியவற்றில் உண்மைத் தன்மையினை உருவாக்கும் அருமருந்து.

இவ்வாறு சமுதாயத்தின் பாலர் முதல் முதியவர் வரை அனைத்து மக்கள் துறைகளிலும் மங்காது, மறையாது குன்றாது, குறையாது, மலர்ந்து மிளிர்ந்து யுத்தகாலம், சமாதான காலம் என்று பாராது சேவையாற்றும் கூட்டுறவு எனும் கற்பகதரு.

இத்தகைய கூட்டுறவு மறுமலர்ச்சிக்கும், தொழிற்புரட்சிக்கும் வித்திட்ட இங்கிலாந்து நகரம்தான் கூட்டுறவுக் குழந்தையையும் உலகுக்கு ஈர்த்தது. ஐரோப்பிய நாடுகளான இங்கிலாந்து, ஜேர்மன், நோர்வே, சுவீடன் ஆகிய பல நாடுகளில் நுகர்வு, கடன், கூட்டுறவு வங்கி, வாணிபத்துறை போன்ற துறைகளிலும் ஏற்படுத்திய புதுமையையும் புரட்சியையும் கண்ணுற்ற நம்மவரும் கூட்டுறவுச் செடியை தமது நாட்டிலும் பயிரிட்டனர். இந்த வகையில் எமது ஈழத் திருநாட்டிலும் 1906ம் ஆண்டளவில் கூட்டுறவுக்கு வித்திடப் பட்டது.

அரசு அளித்த ஆதரவு அறிஞர் பலரின் சிந்தனையில் உதித்த அரிய பல கருத்துக்கள் பெரியோர் அருளிய பெரும் தொண்டாலும் கடன் சங்க வடிவில் ஆரம்பித்த கூட்டுறவு 2ம் உலக மகாயுத்த காலத்தோடு புத்துணர்ச்சி பெற்று பல்வேறு கூட்டுறவு அமைப்புகளால் உயர்வு பெற்றது. அயலாரின் அரசாட்சி அகன்றபின்னர் அரசினர் கூட்டுறவின் குண இயல்புகளை ஆய்ந்து அறிந்து முக்கியத்துவத்தைத் தெளிவு பெற பல்வேறு குழுக்களை நியமித்து நாட்டின் பொருளாதாரத் திட்டத்திற்குள் முக்கியத்துவம் அளித்தனர். அதற்குள் கூட்டுறவு நீங்காத நிரந்தர அங்கம் அளித்து செழித்து தளைத்து வளர அரசில் கூட்டுறவு அமைச்சும், கூட்டுறவுத் திணைக்களமும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டுறவுக் கல்விக்கு பொல்கொல்லை கூட்டுறவுக் கல்லூரியும் அமைத்து பக்க பலமாக்கினர்.

முதலாளித்துவத்திற்கும், பொது வுடமைக்கும் இடையே ஏற்படும் ஆதிக்க போட்டியை தகர்க்கும் இடை நிலையாகக் கூட்டுறவைக் காணலாம். நேர்மையான அறநெறிமுறை திறந்த வெளிப்பாட்டுத் தன்மை, சமூகப் பொறுப்பு, பிறரில் கவனம் செலுத்துதல் போன்ற அடிப்படை மனோ நிலைகளைக் கூட்டுறவாளர் கொண்டு இருக்க வேண்டும். எனவே கூட்டுறவு என்பது ஓர் கலாச்சாரம், கூட்டுறவுக் கலாச்சாரம்.

அங்கத்தவர்களின் தன் ஆர்வம், திறந்த உறுப்புரிமை, ஜனநாயக உறுப்பினர் கட்டுப்பாடு, உறுப்பினர் பொருளாதாரப் பங்குபற்றுகை, சுய ஆளுகை, சுயாதீனம், கூட்டுறவுக் கிடையே கூட்டுறவு என்ற ஜனநாயகப் பாரம்பரியத்துடனும் இலாப நோக்க மற்ற சேவை நோக்குடனும் சிக்கனம் ஒத்துழைப்பு என்ற அடிப்படையில் தானும் வாழ்ந்து சமூகத்தையும் மேம்படுத்தி சுரண்டாமலும் சுரண்டப் படாமலும் வேற்றுமையில் ஒற்றுமை கண்டு தாங்களே எஜமான்களாகவும் செயற்பட்டு சமூக பொருளாதார அபிவிருத்தியோடு சிறந்த மனித சமுதாயத்தையும் ஏற்படுத்தும் புனித அமைப்பே கூட்டுறவாகும்.

மக்களின் தேவைகள், விருப்பங்கள் பலவித்தியாசமான செயற்பாடுகளை உடையதாக இருக்கின்றன. அதாவது மனிதர்களின் சமூக அமைப்பு, சூழல், காலநிலை, பிரதேச நிலை, நிதி வசதி, தொழிலாற்றும் இடம் போன்ற காரணிகள் மனிதர்களின் தேவைகளை வேறுபடுத்துகின்றன.

விவசாயிகள், கூலித்தொழி லாளர்கள், மீனவர்கள், கால்நடை வளர்ப்போர், பெருந்தோட்ட தொழி லாளர், தொழிற்சாலை தொழிலாளர், பண்ணையாளர்கள், உற்பத்தி யாளர்கள், பனை, தென்னைசார் உற்பத்தியாளர்கள், சிகை ஒப்பனைத் தொழிலாளர்கள், வாகன உரிமை யாளர்கள், துறைமுகத் தொழி லாளர்கள், ஊழியர் நலன்விரும்புவோர், மணல் ஏற்றும் வாகன உரிமை யாளர்கள், கிராமிய சிறுகைத் தொழிலாளர்கள் எனப் பல்வேறுபட்ட சமூக அமைப்பில் இக்கூட்டுறவு வியாபித்துள்ளது.

விவசாயிகளிடையே விவசாய கூட்டுறவுச் சங்கங்களாகவும் மீனவர்கள் மத்தியில் க.தொ.கூ.சங்கங்களாகவும் தொழிலாளர் இடையே தொழிலாளர் கூட்டுறவுச் சங்கமாகவும் கால்நடை வளர்ப்போர் இடையே கால்நடைக் கூட்டுறவுச் சங்கமாகவும் பனை, தென்னை சார் தொழிலாளர் இடையே பனை தென்னை வள உற்பத்திக் கூட்டுறவுச் சங்கமாகப் பல்வேறு கூட்டுறவுச் சங்கமாக மிளிரும் கூட்டுறவானது பல்வேறு மட்டங்களில் தலைவர்களை உருவாக்கி தலைமைத் துவப் பண்புகளை வளர்க்கின்றது. நிர்வாகத் திறன்களை வளர்க்கின்றது. சுருங்கக் கூறின் மனித வளங்களை


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

முகாமை செய்யும் தொடர்பினை மனிதர்களிடையே கூட்டுறவு வளர்க்கின்றது.

நிதிவளம் குறைந்தவர்கள் தமக்கிடையே சிக்கன சேமிப்புப் பழக்கத்தை உருவாக்கி நிதியீட்டலை ஏற்படுத்த கிராமிய மட்டத்தில் சிக்கன சேமிப்புக் கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கம் உருப்பெற்று கிராமிய பொருளாதாரத்தை வளர்க்கின்றது.

இவ்வாறு பல்வேறுபட்ட பல நோக்கங்களை உடையோர் ஒன்று சேர்ந்து ஒரே கூரையின்கீழ் தமக்கு வேண்டிய பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்யத்தக்க வகையில் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கமாக மிளிர்கிறது.

இந்த வகையில் பண்டத்தரிப்பு பரிஷ் பலநோக்குக்கூட்டுறவுச் சங்கமும் 1971ம் ஆண்டு காலம்முதல் மக்களின் நுகர்ச்சித் தேவைகளைப் பூர்த்தி செய்வதோடு புடைவை உற்பத்தி, ஆடை உற்பத்தி, தீப்பெட்டி உற்பத்தி, உணவுத் தேவைக்கு என பாண்சாலை, சிக்கன சேமிப்புக்கும், கடன் வசதிக்குமாக கிராமிய வங்கி சேவைகள், விவசாயிகளுக்கு என உற்பத்திப் பொருள் கொள்வனவுகள் (உ+ம் : நெல், வெங்காயம்) வாகனவசதிகள், விவசாய நில உழவு சேவைகள், கட்டிடப் பொருள் தேவைகளைப் பூர்த்தி செய்யும் சேவைகள் கைத்தொழிலாளர்களை ஊக்குவிக்கும் நல்லெண்ணை உற்பத்தி விற்பனை சேவைகள், அரிசி ஆலை, அரைக்கும் ஆலை போன்ற வற்றோடு நின்றுவிடாது அங்கத்தவர் பிள்ளைகளுக்கான கல்வி ஊக்குவிக்கும் பொருட்டு புலமைப்பரிசில்கள் சிரமதானங்கள் கூட்டுறவுதின விழாக்கள், கல்விச் சுற்றுலாக்கள், மூத்த கூட்டுறவாளர்களைக் கௌரவிப்பு போன்ற பல்வேறு சேவைகளை ஆற்றி வருவதோடு புடைவை, ஆடைகள் ஏற்றுமதி வியாபாரம் கடந்த 1970 – 1980 காலப்பகுதிகளில் மேற் கொண்டதோடு அகில இலங்கையில் புடவைக் கண்காட்சியில் 1976ல் முதலிடம் பெற்றமையும், கடந்த 2012, 2013, 2014 ஆண்டுகளில் மாவட்ட மட்டங்களில் முதலிடம் பெற்றமையும் பாராட்ட வேண்டியதொன்றாகும்.

பண்கோப் என பலராலும் அழைக்கப்படும் பண்கோப் எதிர் காலங்களிலும் சிறப்பாக அங்கத்தவர் கட்கும், அயலவர்கட்கும் படித்த வர்க்கும் பாமரர்க்கும் மேலும் பல முயற்சிகளை கால மாற்றத்திற்கு ஏற்ப சேவைகள் பல ஆற்றி வளர்ந்து மிளிர வேண்டும் என்றும் ஊதியத்தினை அதிகம் பாராது அயராது உழைத்து வந்த, வருகின்ற வரப்போகின்ற பணியாளர்களது சேவைகளைப் பாராட்டி ஈழத் திருநாட்டின் வடபால் மென்மேலும் மிளிர வேண்டும். அதற்கு எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவாராக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எமது பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் நுகர்ச்சி வியாபாரத்தில் எதிர்நோக்கும் சவால்கள்

செ. செல்வகுமார்
பதில் வர்த்தக முகாமையாளர்

"தமது பொருளாதார, சமூக, கலாசார தேவைகளையும் எதிர் பார்ப்புக்களையும் பூர்த்திசெய்து கொள்வதற்காகச் சொந்தவிருப்பின் பெயரில் ஒன்று சேர்ந்தவர்களால் சுயேட்சையாக உருவாக்கப்படும் அமைப்பு" கூட்டுறவு ஆகும்.

இலங்கையில் 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் கூட்டுறவு அமைப்புக்கள் உருவானதாக வரலாறு கூறுகின்றது. ஆயினும் 1957ல் புதிய சந்தைக் கட்டமைப்பு உருவாக்கத்தால் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க அமைப்புக்கள் தோற்றம் பெற்றன. இவை 1971ம் ஆண்டுக்காலப் பகுதியில் புனரமைப்புக்கு உட்படுத்தப் பட்ட போது எமது சங்கம் "பண்டத்தரிப்பு பரிஷ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்" எனும் பெயரில் பதிவு செய்யப்பட்டது. இது வரையறுக்கப்பட்ட பொறுப் புடைய சமூகநலனை நோக்காகக் கொண்ட அமைப்பாகும்.

பல தொழிற்பாடுகளை முன் னெடுத்துச் செயற்பட்ட எமது சங்கமானது 1976, 1977 காலப்பகுதியில் அகில இலங்கை ரீதியில் முதல் நிலைச் சங்கங்களில் ஒன்றாக திகழ்ந்தது. 1976ல் ஜேர்மனியில் நடைபெற்ற சர்வதேச வர்த்தகக் கண்காட்சியில் தனது உற்பத்திகளான சேட்டிங் சூட்டிங் வகைகளைக் காட்சிப்படுத்தி நாட்டிற்குப் பெருமை சேர்த்தது.

காலப்போக்கில் ஏற்பட்ட அரசியல் பொருளாதார மாற்றங் களாலும் வர்த்தக உடன்படிக்கை களாலும் பல்தேசிய உற்பத்திப் பொருட்களின் இறக்குமதிகள் அதிகரித்தன. இவற்றுடன் எமது கைத்தொழில் உற்பத்திகள் போட்டி போட முடியாதநிலை ஏற்பட்டது. இதனால் எமது கைத்தொழிற் சாலைகளை மூடவேண்டிய நிலை ஏற்பட்டது. சங்க செயற்பாட்டில் பிரதான ஒரு தொழில் முயற்சிப் பகுதி செயலற்றுப் போனதனால் மற்றைய பிரதான பகுதியான வர்த்தகத் துறையிலேயே அதிக கவனம் செலுத்த வேண்டியிருந்தது.

தற்போது சங்கத்தின் வர்த்தக தொழிற்பாட்டில் மொத்த விற்பனை நிலையம் ஒன்று, பிரதான " கூட்டுறவு நகர்" ஒன்று, சிறிய கூட்டுறவு நகர் விற்பனை நிலையங்கள் ஐந்து, நுகர்ச்சி விற்பனைநிலையம் பன்னிரண்டு, எரிபொருள் விற்பனை நிலையம் ஒன்று, புடவை விற்பனை நிலையம் என்பன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியாபர நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றன.

ஆரம்பத்தில் எமது வர்த்தக முயற்சிகளுடன் போட்டிபோடக்கூடிய பலமான அமைப்புக்கள் எவையும் சங்க எல்லைப்பரப்பில் காணப்படாமையினால் விவசாயப் பொருள் தேவைக்காகவும் நுகர்ச்சிப் பொருட் தேவைக்காகவும் அங்கத்தவர்களும் வாடிக்கையாளர்களும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தையே நாட வேண்டிய நிலையில் இருந்தனர். நாட்டில் இடம்பெற்ற யுத்த சூழ்நிலையால் இடப்பெயர்வு மட்டுமல்லாது அழிவுகளையும் பெரும் இழப்புக்களையும் சந்தித்த போதும் மக்களுக்கான நிவாரணப் பொருள் விநியோகம் பங்கீட்டுப் பொருள் விநியோகம் போன்ற சேவைகளுடன் மொத்த, சில்லறை வியாபார நடவடிக்கைகளும் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டன.

உலகமயமாக்கல் கொள்கைகள், தொழிற் பரம்பல்கள், நவீன தொழில் நுட்ப வளர்ச்சிகள், அதிகரித்த பணப் புழக்கம் போன்ற காரணிகளால் தனியார்துறை அபரித வளர்ச்சி பெற்று நிற்கின்றது. இதனால் சேவை நோக்கம் கொண்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பல வழிகளிலும் பெரும் சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

இறக்குமதியாளர்கள் பலரும் மொத்த வியாபாரிகளாகவும், மொத்த வியாபாரிகள் பலரும் சில்லறை வியாபாரிகளாகவும் செயற்படுவதனால் பலமான போட்டி ஏற்படுகின்றது.

உள்நாட்டு யுத்தம் நிறைவடைந்த தன் பின்பு வீதி அபிவிருத்தி, நகர அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது. இதனால் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இயங்கிய தொழிற்சாலைகளின் உற்பத்திப் பொருட்கள், நிறுவனங்கள் மூலமாகவோ முகவர்கள் மூலமாகவோ மொத்த சில்லறை வியாபாரிகளையும் தாண்டி நுகர்வோரை நேரடியாகச் சென்றடைகின்றது.

நவீன வடிவமைப்பிலான பலவேறுபட்ட சிறந்த தொழில்நுட்ப ஆற்றலைக் கொண்ட பொழுதுபோக்கு மையங்களுடனான விசேட அதியுச்ச காட்சிப்படுத்தல்களுடன் கூடிய அத்தியவசிய, ஆடம்பர, அழகுசாதன, மருந்து, பால்மா, விளையாட்டு உபகரணங்களை ஒரே கூரையின் கீழ் பெற்றுக் கொள்ளக் கூடிய அமைப்பிலான வியாபார நிறுவனங்களின் வருகையும் எமக்கு பெரும் சவாலாக அமைந்துள்ளது.

யாராலும் இலகுவில் தொடங்கி நடாத்தக் கூடிய சில்லறை வியாபார நிலையங்கள் தெருவிற்குத் தெரு என்றில்லாமல் மூலை முடக்கெங்கிலும் காணப்படுகின்றமையால் வாடிக்கையாளர்கள் பகிரப்படுகின்றார்கள்.

நடைபாதை வியாபாரம், அங்காடி வியாபாரம், பண்டிகைக் காலங்களையும் பருவகாலங்களையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இலக்குவைத்துப் படையெடுத்து வரும் வெளியூர் வியாபாரிகள் இது போன்ற பல்வேறுபட்ட தொழில் நிலைச் சவால்களுக்கு முகம் கொடுத்து தனது இருப்பை தக்கவைத்து இன்னும் பல தசாப்தங்களுக்கு நிலைத்து நிற்க வேண்டிய பொறுப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு உண்டு. எனவே கூட்டுறவுச் சங்கங்களும் சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபடுவதுடன் மொத்த வியாபாரச் செயற்பாடு களையும் பல்வேறு விற்பனைத் தந்தி ரோபாயங்களைத் கையாழ்வதனூடாக அதிகரிக்கவேண்டும். சந்தையில் அதிக கேள்வியுடைய உற்பத்திப் பொருட் களை, விற்பனை செய்வதற்கான முகவராண்மையைப் பெற்றுச் செயற்பட வேண்டும். அத்துடன் சில்லறை விற்பனை நிலையங்களை தற்காலத்திற்கேற்றவாறு நவீனமயப் படுத்தி கவர்ச்சிகரமான காட்சிப் படுத்தல்களுடன் இலத்திரனியல் பணப்பயன்பாட்டு வசதிகளையும் ஏற்படுத்தி காலத்திற்கு காலம் விற்பனை மேம்படுத்தல் சலுகைகளை வழங்குவதன் மூலம் வியாபாரத்தை பெருக்கிக் கொள்ள வேண்டும். கூட்டுறவின் அவசியத்தையும், தேவைப் பாட்டையும் மக்களுக்கு உணர்த்து வதோடு, தனியார்துறை வியாபாரி களின் சூட்சுமமான விளம்பர, விற்பனை உத்திகளையும் தெளிவு படுத்த வேண்டும்.

அடிக்கடி சந்தை ஆராய்ச்சியில் ஈடுபடுவதோடு, பங்குச்சந்தை நிலவரம், அந்நியச் செலாவணி மாற்றுவீதம், வரிவிதிப்பு போன்றவற்றுடன் சந்தையின் கேள்வி நிரம்பல்களை அவதானித்து காலத்திற்கேற்ற வியாபார நடவடிக்கைகளை ஆக்க பூர்வமாக முன்னெடுப்பதன் மூலம் சவால்களை வெற்றிகொள்ள முடியும்.

மனிதன் உயிர்வாழ்வதற்கு தண்ணீர் எவ்வளவு அத்தியாவசிய மானதோ அதேபோன்று சமூக வாழ்வா தாரத்திற்குக் கூட்டுறவு அமைப்புக்கள் இன்றியமையாததாகும். ஆகவே கூட்டுறவுச் சங்கங்களை பாதுகாத்து உயர்வடையச் செய்ய வேண்டியது நிர்வாகிகள், பணியாளர்கள் மட்டு மன்றி ஒவ்வோர் அங்கத்தவர்களதும், நலன் விரும்பிகளதும் பிரதேச வாசிகளதும் கூட்டுப் பொறுப்பும் கடமையுமாகும்.

"கூட்டுறவே நாட்டுயர்வு"


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




**திரு. அ. கிறிஸ்ரி ஜயந்தன்**

**கணக்காளர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்நகரில் கூட்டுறவு



ஆக்கம் : நா. மதுரா (B.A)
கணக்குப்பகுதி - எழுதுநர்

கூட்டுறவு என்கின்ற குளிர்மலரோ
மக்கட் சமுதாயத்தின்

மூலைமுடுக்கெல்லாம்
மலர்ந்து குளிர்ந்து மணம்பரப்பும்
வேளைதனில்
மறுமலர்ச்சிக்கும் தொழிற்புரட்சிக்கும்
வித்திட்ட ஐரோப்பியரே
கூட்டுறவு எனும் கற்பகதருவை
உலகுக்கு ஈந்தனரே.

பிரபஞ்சத்தின் வாயில்தனில்
போர்முரசும் ஒலியெழுப்ப
தோன்றியதோர் மகாயுத்தம்
அச்சத்தின் பீதியெங்கும்
மானிடரின் மனதினிலே இருள்சூழ
கண்காணும் தேசமெங்கும்
உதிரத்தில் தோய்ந்திங்கு உயிர்களுமாய்
அத்தருணம் எதிர்கொண்டோர்
ஏமாற்ற அவலங்களும்

வறுமையின் கோரமது
பட்டினியால் சாவுதனை
கண்டதிங்கு பெருமளவு
பொருளளவு குன்றிடவே
நல்லுள்ள மேதைகளும்
நிறுவலுற்றார் கூட்டுறவை

பிரிட்டிஷ்காரன் வருகையிலே—
அவன்பால்
பலநோக்கம் கொண்டாலும்
அத்தகைய பண்புடைய

கூட்டுறவு அமைப்புதனை
இலங்காபுரிதனிலே நிறுவலுற்றான்

உறவுகளின் கூட்டமுமாய்
மிளிர்ந்திடவே கூட்டுறவு
ஈழத்தின் வடபகுதி
சிற்றூராம் பண்டத்தரிப்பு
பண்டங்களை தரித்துவைக்கும்
இடமாக பொருள்படவே
மனிதநேயம் மேம்பட்டோர்
கூடிவந்த வேளைதனில்
சமுதாய வளர்ச்சிக்கு வித்திடவே
பல்வேறு சங்கங்களாய் இருந்தபோதும்
ஒற்றுமையாய் ஒருங்கிணைத்து
(ஒன்றுகூட்டி)
ஆண்டுகள் (1971) எழுபத்து
ஒன்றுகளில்
பண்பரிஷ் பலநோக்குக் கூட்டுறவு
சங்கமாக

தையலர் தம் கைவரிசை
புடவைதனில் காட்டிடவே
வரிசைவழி எனக்குமென்று நின்றனரே
தென்னிலங்கை வாழ்பவர்கள்
ஆண்டுகள் (1976) எழுபத்து ஆறுகளில்

தமிழரின் விடியலுக்காய்
காத்திருந்த வேளைதனில்
தமிழர் தம் ஊராம்
யாழின் வழி பூட்டிடவே
தென்புலத்து ஏற்றுமதி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டென்று ஸ்தம்பிக்க
உயிர்வாழ முடியாது உணவின்றி
பரிதவிக்க
பொறுத்திட முடியாது எம்சங்க
மாண்பினர்கள்
சட்டென்று எழுந்தனரே
துயர்துடைக்க
உறக்கமின்றி கண்விழித்து
இரவு பகல் உழைத்தனரே.

என் தாத்தா எனக்குரைத்த வாசகங்கள்
பொக்கிஷமாய் நினைவுகளில்
யூனியன் பாணுக்காய்
நிரைவடிவில் எம்மக்கள் நின்றனராம்
அத்தருணம் சங்கத்தின் பாண்சாலை
பேருதவி புரிந்ததென்று
மனுக்குலத்தின் தேவைகளைப் பூர்த்தி
செய்ய
தர்மவழி பாடுபட்டோர்
இச்சங்க பணியாளர்.
மொத்தமாக நிலையம் ஒன்று
பல கிளைகள் விருட்சமாக
நுகர்வோரும் அலைமோத
உற்பத்தி மேலோங்க
திட்டங்கள் பல வகுத்தார்.

ஒன்றிணைந்த கிராமங்கள்
பொருளாதார அபிவிருத்தி
மேலோங்க வேண்டுமென்று
கிராமிய வங்கி ஊடாக
கொடுத்தனரே கடன் திட்டம்.

நவீனத்தின் புதுமைக்கு
வழிவகுக்கும் மக்கள் கூட்டம்
நிதம்நாட புதிதாக உருவான
கூட்டுறவு நகராகும்.
தேசியத்தின் உணவான ஆலையையும்
அரைக்கும் ஆலை, பாண்சாலை
நல்லெண்ணெய் உற்பத்தி

பல பொருட்கள் திரிபடைய
ஈட்டியதே இச்சங்கம்
பெருமளவு இலாபத்தினை
வாகனங்கள் உயிர்வாழ
பண்நகரின் நாற்சந்தி முகப்பினிலே
தன்னகத்தே கொண்டமைந்த
எரிபொருள் நிரப்பு நிலையமது

சங்கத்தின் ஏற்றுமதி இறக்குமதி
திறம்பட நிகழ்த்திடவே
கட்டமைப்பில் உருவானதோர்
வாகனப்பகுதியாம்

கடந்த பல ஆண்டுகளாய்
ஈழத்தின் வடபுலத்தில்
முதல்நிலையைப் பெற்றிங்கு
தனக்கென்றோர் முகவரியை
சாதனையாய் பதித்திட்ட எம்சங்கம்

இற்றைவரை சிலர் உரைப்பார்
அன்று நாம்பட்ட அவலத்தில்
பக்கபலம் இச்சங்கமென்று
அச்சமயம் அவலத்தில்

பயன்பெற்றோர்
ஆசிதானோ - இன்று
உச்சபுகழ்பெற காரணமோ
தெரியவில்லை

பல்லாண்டு பல்லாண்டு பலநூறாண்டு
பவனியிலே பலதுறையில்
பண்நகரின் கூட்டுறவு
பகவலன்போல் வாழவென
பண்பான மனதுடனே
வாழ்த்துகின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கூட்டுறவுக் கொள்கைகளில் கல்வி பயிற்சி தகவல்

திரு. த. ரமேஸ்குமார்,
பகுதி நேரவிரிவுரையாளர்,
கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி.

கூட்டுறவு இயக்கத்தின் ஆரம்ப கர்த்தாக்களான றொச்டேல் முன்னோடிகளின் கொள்கைகளிலும் சர்வதேச கூட்டுறவு இணையத்தினால் 1937ம் ஆண்டு, 1966ம் ஆண்டு காலங்களில் பிரகடனப்படுத்தப்பட்ட கூட்டுறவுக் கொள்கைகளிலும் "கல்வி" என்ற அம்சம் மட்டுமே குறிப்பிடப் பட்டிருந்தது. வளர்ந்துவரும் சமூக விஞ்ஞானக்கல்வி தொழில்நுட்ப நாகரீக கலாச்சார மாற்றத்திற்கேற்ப 1995ம் ஆண்டு சர்வதேச கூட்டுறவு இணையம் கூட்டுறவுக் கொள்கைகளை மீளாய்வு செய்து முன்னர் உள்ள கூட்டுறவுக் கொள்கையான "கல்வி" என்பதுடன் "பயிற்சியளிப்பும்", "தகவலும்" என்ற இரு அம்சங்களும் உள்ளடக்கப்பட்டு "கல்வியும் பயிற்சியளிப்பும் தகவல் திரட்டலும்" என மாற்றம் கொண்டு வரப்பட்டது.

இங்கு கல்வி என்பது பொதுக் கல்வியையும் கூட்டுறவுக் கல்வியையும் உள்ளடக்கியுள்ளது. ஜனநாயகத்தின் அடிப்படைக் கல்வி ஆகும். மனிதனின் மேம்பாட்டுக்கு கல்வி மிக இன்றிய மையாததாகும். கூட்டுறவு அமைப்பில் அங்கத்தவர்கள் தமது உரிமைகளையும் சுதந்திரங்களையும் அனுபவிப்பதற்கு அவர்களுக்கு பொதுக்கல்வியறிவு இன்றி யமையாததாகும். ஜனநாயக மக்கள் இயக்கமான கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவர்கள் தமது உரிமைகளையும் பெறுப்புக்களையும், சுதந்திரங் களையும், கடமைகளையும் பூரணமாக உணர்ந்து கொள்வதற்கும் அனுபவிப்பதற்கும் அவர்களுக்கு கூட்டுறவுக் கல்வி பயிற்று விக்க வேண்டியது மிக அவசியமாகும். கூட்டுறவுச் சங்கங்கள் சிறப்பாக இயங்குவதற்கும் அங்கத்தவர்களுக்குச் சிறந்த சேவைகளைப் புரிவதற்கும் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்கள் போதிய கூட்டுறவுக்கல்வி அறிவுடைய வர்களாக இருத்தல் வேண்டும்.

கல்வி என்பது ஒருவரது அறிவை வளர்க்கின்றது. கல்வியின் நோக்கம் நிரம்பிய பூரண அறிவைப் பெறுதலாகும். ஆனால் பயிற்சி என்பது ஒருவரது ஆற்றலை விருத்தி செய்வதன் ஊடாக அவரது மனப்பாங்கு, நடத்தை என்பவற்றினை மாற்றியமைப்பதனைக் குறித்து நிற்கின்றது.

கூட்டுறவு நிறுவனங்கள் இலக்கு களை அடைந்து கொள்வதற்கு அவற்றின் அங்கத்தவர்களுக்கும் நிர்வாகிகளுக்கும் பணியாளர்களுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாவட்டமட்டத்தில் கௌரவிக்கப்பட்ட போது...



சங்கம் பெற்ற விருதுகள்







புலமைப்பரிசில் சித்தியடைந்த மாணவர்களின் கௌரவிப்பின் போது.......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறைசார்ந்த நிபுணத்துவம் வாய்ந்த பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும் என்பதனையே இக் கொள்கை வலியுறுத்துகின்றது.

**கூட்டுறவுத்துறை சார்ந்த பயிற்சியளிப்புக்கள்**

- அங்கத்துவ அதிகரிப்பும் பொதுச் சபையின் பங்களிப்பும்.
- பொதுச்சபையுடன் தொடர்புடைய சட்ட ஏற்பாடுகள்.
- கூட்டுறவுச் சங்கங்களின் கட்டமைப்பும் செயற்பாடும்.
- கூட்டுறவுச் சங்க வளர்ச்சியில் அங்கத்தவர்கள் பங்களிப்பின் அவசியம்.
- பொதுசனத் தொடர்பும் வாடிக்கையாளர் அபிவிருத்தியும்.
- சந்தைப்படுத்தல் தந்திரோபாயங்கள்.
- வாடிக்கையாளர் தொடர்பு முகாமைத்துவம்.
- புதிய உற்பத்திகளை இனங்காணும் நுட்பங்கள்.
- வரவு செலவுத் திட்டம் தயாரித்தல்.
- சாத்தியக்கூற்று அறிக்கைகள் தயாரித்தல்.
- படிவரீதியான கணக்கு வைப்பு முறைகள்.
- செயல்திட்ட அறிக்கைகளும் அதன் முக்கியத்துவமும்.
- வியாபார அபிவிருத்திக்கான தந்திரோபாயங்கள்.
- நவீன முகாமைத்துவ நுட்பங்களும் கூட்டுறவு நிறுவனங்களும்.
- தொலைநோக்குகளை உருவாக்குதல்.
- கூட்டுறவு தொடர்பான சட்ட ஏற்பாடுகள்.
- புதிய முயற்சிகளை இனங்காணும் தந்திரோபாயம்.
- புதிய செயல்திட்டங்களை உருவாக்கும் தந்திரோபாயங்கள்.
- பணியாளர்களின் கடமைகள், பொறுப்புக்கள்.
- ஆளணி தொடர்பான ஊக்குவிப்புத் திட்டங்கள்.
- சிறந்த பொதுசன தொடர்பு நுட்பங்கள்.
- தீர்மானம் எடுத்தல் நுட்பங்கள்.
- செயல்திட்டங்கள் தொடர்பான அறிமுகம்.
- கூட்டுறவுத் தலைமைத்துவம்.
- மக்கள் தொடர்பும் கூட்டுறவு தொடர்பான விழிப்புணர்வும்.
- குழுநிலை செயற்பாடுகளும் அபிவிருத்தியும்
- மனப்பாங்கு மாற்றத்தின் அவசியம்.
- வியாபார அபிவிருத்திக்கான திட்டமிடல்.

மேற்படி விடயங்கள் தொடர்பாக தொடர்ச்சியாக பயற்சியளித்தல் நடவடிக்கைகளை நவீன கட்புல தொழில்நுட்ப சாதனங்கள் மூலம் கூட்டுறவுத் துறையிலே இணைந்து செயற்படுகின்ற, கூட்டுறவுத் துறையினை வழிநடாத்துகின்ற, கூட்டுறவுத் துறையினைப் பயன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்துகின்ற சகல தரப்பினருக்கும் வழங்கப்பட வேண்டும் என வலியுறுத் தப்படுகின்றது.

மேலும் ஒரு நிறுவனத்திற்கு தகவலானது அத்தியவசியமான தொன்றாகக் காணப்படுகின்றது. கூட்டுறவு நிறுவனங்களை வழிநடாத்து கின்றவர்கள் சிறந்த தீர்மானங்களை எடுத்து நடைமுறைப்படுத்துவதற்கு தகவல்கள் இன்றியமையாதது ஆகும். சரியான தகவல்கள் பொருத்தமான நேரங்களில் கிடைக்குமாயின் எடுக்கப்படுகின்ற தீர்மானங்களும் சரியானதாகவும் வினைத்திறன் மிக்கதாகவும் அமையும். தகவல்களில் ஏற்படுகின்ற தவறுகள் / குறைபாடுகள் அத்தகவல்களின் அடிப்படையில் எடுக்கப்படுகின்ற தீர்மானங்களில் குறைபாடுடைய / முழுமையாக வெற்றி பெறமுடியாத பெறுபேறுகளை அடைவதற்கு வழிவகுக்கும். எனவே இத்தகைய செயற்பாடுகளினால் நிறுவனம் பாதிப்பு அடைய நேரிடும். தகவல் சேகரிப்பு நவீன தொழில் நுட்பத்தில் முக்கியமான இடத்தை வகிக்கின்றது. எல்லா நிறுவனங்களும் தகவல் களையும் புள்ளிவிபரங்களையும் திரட்டி வைத்தல் முக்கியமாக உள்ளது.

சங்கம் தன்னைப் பற்றிய தகவல்களைப் பூரணமாகத் திரட்டி அனைவருக்கும் வழங்குவதன் மூலம் தனது சாதனைகளையும் சிறப்பியல்பு களையும் பிரசாரம் செய்து தனது திறமைகளையும் நன்மதிப்பையும் அதிகரித்துக் கொள்ளலாம். சங்கம் ஒரு தகவல் திரட்டும் மையத்தை உருவாக்கி சங்கம் பற்றிய சகல தகவல்களையும் பூரணமாகத் திரட்டி வைத்திருத்தல் வேண்டும். மாறிவரும் உலகமய மாதலுக்கு ஏற்ப உலக மாற்றங்களையும் உடனுக்குடன் உள்வாங்கக் கூடிய அளவுக்கு ஆயத்தநிலையில் இருத்தல் அவசியமாக உள்ளது. தொழில்சார் தகவல்கள் மற்றும் தொழில் நுட்பங்களை மாறிவரும் உலக சூழலுக்கு ஏற்ப நிறுவனங்களில் பிரயோகித்து தகவல் பரிமாற்றத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்படுகின்றது. உதாரண மாக சங்கங்களுக்கான தகவல்களை இணையத்தில் தரவேற்றம் செய்து அதனை பிரபல்யம் அடையச் செய்யலாம். அத்துடன் சங்கங்கள் தனக்கெனத் தனியான கணக்கினை /முகவரியினை / தரவுத் தளத்தினை இணையம் மூலம் செயற்படுத்தலாம்.

"வளர்க கூட்டுறவுக்கல்வி
வாழ்க கூட்டுறவு இயக்கம்"


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# சமூக வளர்ச்சிக்கு கிராமிய வங்கியின் பங்கு

திரு. பொ. தெய்வேந்திரம்
வங்கிச் சேவை முகாமையாளர்.

அங்கத்தவர்களின் வங்கித் தேவைகள் கடன் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக மக்கள் வங்கியின் உதவியுடன் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் உருவாக்கியுள்ள வங்கி அமைப்புக்களே கிராமிய வங்கி ஆகும்.

கிராம மக்களிடையே வங்கிப் பழக்கத்தை ஏற்படுத்துவதற்காக கிராமிய வங்கிகள் உருவாக்கம் பெற்றன. பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கிகளை நிறுவும் திட்டம் இலங்கையில் முதலாவதாக 1964ம் ஆண்டு கண்டி மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கிராமிய வங்கிகள் குறைந்த வருமானமுள்ள கிராம மக்களிடையே வங்கிப் பழக்கத்தை ஏற்படுத்தவும் கடன் வசதிகளை இலகுவாகப் பெற்றுக் கொண்டு செயற்பட கிராம மக்களின் வளர்ச்சிக்கு "கிராமிய வங்கி" என்ற அமைப்பின் முக்கியத்துவம் உணரப் பட்டது.

சமூகத்தின் வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் கூட்டுறவு கிராமிய வங்கிகள் பெரும் பங்காற்றி வருகின்றது.

01. கிராம மட்டத்தில் குறைந்த வருமானமுடைய மக்களது வங்கிப் பழக்கத்தை ஏற்படுத்தி ஊக்குவித்தல்.

02. கிராம மட்டத்தில் கல்வியறிவு குறைந்த மக்களிடையே சேமிப்புப் பழக்கத்தை உருவாக்குதல்.

03. கிராம மட்டத்தில் உற்பத்தி முயற்சிகளுக்கு இலகு கடன்களை வழங்கி சமூகத்தை பொருளாதார ரீதியில் உயர்த்துதல்.

04. வழங்கப்பட்ட கடன்களை போதிய கண்காணிப்புடன் மேற்பார்வை செய்து பொருளாதாரத்தை மேம்படுத்துதல்.

05. கிராம மக்களை உள்ளூர் கொடுகடன் தீவிரத்திலிருந்து மீட்டெடுத்தல்.

இவ்வாறு செயற்பட்டு வந்த கிராமிய வங்கிச் செயற்பாடுகள் வட மாகாணத்தில் 1971 ம் ஆண்டு கூட்டுறவு சங்கங்கள் புனரமைப்புச் செய்யப்பட்ட பின்னர் கிராமிய வங்கிச் செயற் பாட்டை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் நடைமுறைப்படுத்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஆனால் எமது பல நோக்குக் கூட்டுறவுச் சங்க புனரமைப்புக்கு முன்னரே யாழ் மாவட்டத்தில் கிராமிய வங்கி நடைமுறையை யாழ் மாவட்டத்தில் இரண்டாவது கிராமிய வங்கியாக மாதகல் மத்திய ப. நோ. கூ சங்கம் (தற்போதைய மாதகல் மத்தி கிளை 02) ஆரம்பித்து இவ் அமைப்பை உருவாக்கிய பெருமை அக்காலத்தில் அச்சங்கத்தின் தலைவராக இருந்து செயற்பட்ட சுப்பர் கந்தையா என்பவரையும் அவரது நிர்வாகத்தினையும் சாரும்.

மக்கள் வங்கி ஏனைய வங்கிகளின் தொழிற்பாடுகள் கிராம மட்டத்தில் இல்லாத காலத்தில் இவ் அமைப்பானது மாதகல் கிராம மக்களுக்கு பெரிய வரப்பிரசாதமாக அமைந்தது. அதன் ஆரம்ப தொழிற்பாடாக அங்கத்தவர்களின் சேமிப்பு பழக்கங்களை ஊக்குவிப்பதற்கும் அவ் எல்லைப் பரப்பில் கூடுதலான அங்கத்தவர் செய்யும் செயற்பாடாக விவசாய உற்பத்தியாளர்களுக்கு நெற் செய்கை, மிளகாய்ச் செய்கை, வெங்காயச் செய்கை போன்றவற்றிற்கு உற்பத்திப் பொருள் சந்தைப்படுத்தி கடனை மீளச் செலுத்தும் வகையில் உரிய கால தவணை அடிப்படையில் ஏனைய இரு அங்கத்தவர்களின் பிணை உடன்படிக்கையுடன் கடன்வழங்கி மீளப்பெறும் நடைமுறை பேணப் பட்டது.

இக்காலப் பகுதியில் கூட்டுறவுச் சங்கத்தின் ஏனைய தொழிற்பாடான வெங்காயக் கொள்வனவு கூட்டுறவுச் சங்கத்தினூடாகவே மேற்கொள்ளப் பட்டதனால் விவசாயக்கடன் அறவீடு இலகுபடுத்தக் கூடியதாக இருந்தது.

பின்வரும் காலங்களில் பல.நோ.கூ. சங்க அமைப்பு உருவான பின் பண்டத்தரிப்பு தலைமைக் காரியாலய அமைவிடத்திலும் கிராமிய வங்கி கிளை 01 ஆரம்பிக்கப்பட்டது. மாதகல் கிராமிய வங்கியூடாக மாதகல் பகுதி மக்களுக்கு வங்கிச்சேவை இடம்பெற்றதுடன் பண்டத்தரிப்பு கிராமிய வங்கியூடாக பண்டத்தரிப்பு, இளவாலை மக்கள் சேவைகள் பெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன. பின்பு இளவாலை கிராமத்தவரின் வேண்டுகோளுக்கமைய இவ் எல்லைப் பரப்பு மக்களின் வசதி கருதி தனியான கிளையொன்று ஆரம்பிக்கப்பட்டது. தற்போது யாழ் மாவட்டத்தில் கூடுதலான கிராமிய வங்கிக் கிளைகளை உடைய சங்கமாக எமது சங்கத்தை கருதலாம்.

கிராமிய வங்கித் தொழிற் பாட்டில் நகை அடகு பிடித்தல் தொழிற்பாடு நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையைக் கருத்திற் கொண்டு இடை நிறுத்தப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்ப காலங்களில் வழங்கப் பட்ட கடன் வழங்கும் நடைமுறைக ளுடன் இப்போது மேலும் கடற்தொழில் சுயதொழில் கடன், உறுதிக்கடன் என்பன வழங்கும் நடை முறையும். பேணப் பட்டு வருகின்றன. ஓய்வூதியங்களுக் கான ஓய்வூதியம் வழங்கும் நடை முறையும் பின்பற்றப்பட்டு வருகிறது.

மக்கள் இலகுவாக தமது மின்சாரப் பட்டியலைச் செலுத்தக் கூடிய வகையில் சேவையை மேற் கொள்ளல், சமூக பாதுகாப்பு ஓய்வூதியம் பெறுபவர்களுக்குச் சமூக பாதுகாப்பு ஓய்வூதியத்தை வழங்கல்.

காலத்திற்குக் காலம் அரசினால் வழங்கப்படுகின்ற மீளக்குடியேற்றம், சொத்து இழப்பீடு, வீட்டுத்திட்டம் போன்ற நிதிகளை கிராமிய மக்கள் வசதி கருதி கிராமிய வங்கியூடாக வழங்கிச் சேவையாற்றுதல்.

வெளிநாட்டிலிருந்து அனுப்பு கின்ற பணத்தை உடனடியாகவும் இலகுவாகவும் பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் இலகுபணப்பரிமாற்ற சேவையான வெஸ்டேன் யூனியன் சேவையை வழங்குதல். வாகனங் களுக்கான காப்புறுதிச் சேவையை வழங்குதல்.

தற்கால சூழலில் பல அரச வங்கி தொழிற்பாடுகளும் தனியார் வங்கிகளும் ஆரம்பிக்கப்பட்டு கடன் வழங்கல் முறைகளிலும் போட்டி நிலைமைகள் உருவாகியுள்ள போதும் அங்கத்தவர்கள் விசுவாசம் காரணமாக எமது வங்கித் தொழிற்பாட்டுடன் சேமிப்பு நடைமுறை, கடன்பெறும் நடைமுறை, ஓய்வூதியம் பெறும் நடைமுறை என்பவற்றுக்கு தங்கள் ஒத்துழைப்பை வழங்கியதற்கு எமது எல்லைப் பரப்பிலுள்ள அங்கத்த வர்களின் சங்கத்தின் மேலும் கடந்தகாலச் செயற்பாடுகளில் உள்ள நம்பிக்கையே காரணமாகும். தற்காலத்திலும் வருங்காலத்திலும் மக்கள் நம்பிக்கையைப் பேண தொடர்ந்து ஸ்தாபன ரீதியான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தற்போது 2012/2013 இல் யாழ் மாவட்டத்தில் சங்கம் முதலாவது இடத்தினையும் வடமாகாணத்தில் 2ஆம் இடத்திலும் 2013/2014இல் கிராமிய வங்கி யாழ்மாவட்டத்தில் 1ஆம் இடத்திலும் செயற்பாடுகள் இருக்கின்றன.

இனிவரும் காலங்களில் மக்களில் நலன் கருதி கடன் எல்லைகளை அதிகரித்து வழங்கு வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு மக்களுக்கும் எமது கிராமிய வங்கிக்குமான உறவுப்பாலம் தொடரும் என்று மகிழ்வுடன் பகிர்ந்து கொள்கிறோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நேபாள சுற்றுப் பயணம் எமது பார்வையில்

க. ரவிச்சந்திரன்
பொது முகாமையாளர்.

வடபகுதியில் பழம் பெரும் பிரதேசமாக விளங்குகின்ற பண்நகரமான பண்டத்தரிப்பில் அமைந்து "மக்கள் சேவையே மகேசன் சேவை" என சிறப்பாக மக்கள் சேவையைச் செய்துவருகின்ற பண்டத்தரிப்பு பரிஷ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் உற்பத்தி முகாமையாளராகிய என்னை பொது முகாமையாளர்களுக்கான திறன் விருத்திச் சுற்றுலாவுக்கு தெரிவு செய்தமையை அறிந்து மட்டற்ற மகிழ்வடைந்தேன். என்னுடன் வடமாகாணத்தைச் சேர்ந்த பதினொரு பொது முகாமையாளர் இணைந்து நேபாளம் நோக்கிய எமது சுற்றுப் பயணம் 22.02.2015 அன்று ஆரம்பமாகியது. அந்நாட்டு பாரம்பரித்துக்கமைய பட்டுச் சால்வை அணிவித்து வரவேற்றதனைத் தொடர்ந்து "காட்மண்ட் பசுபிக் ஹோட்டலில்" நாம் தங்குவதற்கான ஒழுங்குகள் செய்திருந்தனர். தொடர்ந்து அன்றிரவு 7.00 மணிக்கு ரூர்ஒகன் என்னும் இடத்தில் நேபாள முறையிலான விருந்துபசாரமும் பாரம்பரிய கலை நிகழ்வுகளும் நடாத்தப்பட்டது.

## நேபாளக் கூட்டுறவு

23.02.2015ஆம் திகதியன்று சுற்றுலா சயம்புநாத் கோவில் தரிசனத்துடன் ஆரம்பமானது. இக்கோவில் பெரிய மலை ஒன்றில் அமைக்கப்பட்டிருந்தமை சிறப்பம்சமாக இருந்தது. மதியம் பதினொரு மணியளவில் தேசிய கூட்டுறவு ஒன்றியத்துக்கு நாம் சென்றபோது தலைவர், இயக்குனர் சபை உறுப்பினர்கள் எம்மை பட்டுச் சால்வை அணிவித்து வரவேற்று கூட்டுறவுத்துறை சார்ந்த விடயங்களைப் பகிர்ந்து கொண்டனர். இவ் ஒன்றியத்தில் 18 பொது கூட்டுறவுச் சங்கங்கள், 1 தேசிய கூட்டுறவு வங்கி, 302 மாவட்டமட்ட கூட்டுறவுச் சங்கம் என 331 கூட்டுறவுத்துறை நிறுவனங்கள் அங்கத்தவர்களாக இணைந்ததன் மூலம் 4.6 மில்லியன் பேர் அங்கத்தவர்களாகவும் உள்ளனர். அடுத்து நேபாளக்கூட்டுறவு அமைச்சின் கீழ் 333 கூட்டுறவு நிறுவனங்கள் வழிநடத்தப்படுகின்றது. இவ்வமைப்பானது கூட்டுறவுத்துறை அதிகாரிகளைக் கொண்டே அமைக்கப்பட்டுள்ளதுடன் கூட்டுறவுச்சங்கத்தின் பதிவாளரும் அமைச்சரவையில் பங்கு கொள்வது



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

குறிப்பிடத்தக்க விடயமாகும். இங்கு கூட்டுறவுத் துறையானது அரசின் தலையீடு இன்றி சுயாதீனமான முறையில் தெரிவு செய்யப்பட்ட மக்கள் அமைப்பான கூட்டுறவு அமைச்சு மூலம் நிர்வகிக்கப்படுவது பெருமிதப்பட வேண்டிய ஒன்றாகும்.

**பாற்பண்ணை**

நேபாளத்தில் சிறவான் நகரத்தில் பாற்பண்ணை அமைந்துள்ளது. மிகப் பெரியளவிலான பாற்பண்ணையில் 273 க்கு மேற்பட்ட பசுக்களைக் கொண்ட இப்பண்ணையில் 35 பணியாளர்கள் பல்வேறு கடமைகளைப் புரிகின்றனர். இக் கூட்டுறவு நிறுவனத்தில் நேபாள தேசிய நக்கா வங்கி 11 பில்லியன் ரூபாவையும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் 60 பில்லியன் ரூபாவும் ஏனைய கூட்டுறவு அமைப்புக்கள் 640 பில்லியனையும் முதலீடு செய்வதன் மூலம் இப்பண்ணை மிகவும் சிறப்பாக இயங்கி வருவதன் மூலம் 2014 ம் ஆண்டில் 50 மில்லியன் நிகர இலாப மடைந்துள்ளது.

அத்துடன் பணியாளருக்கான பயிற்சி மண்டபங்கள் தங்குமிட வசதிகள் மற்றும் பொதுநோக்கு மையங்கள் என்பவற்றைச் சிறப்பான முறையில் அமைத்து செயற்படுத்தி வருவதுடன் இப்பண்ணையில் கறவைப் பசுக்களை கூட நேர அடிப்படையில் உரிய கடமையினை நிறைவேற்றக் கூடிய வகையில் ஒழுங்குபடுத்தி யுள்ளனர். 273 பசுக்களையும் சினைப் படுத்துவதற்காக ஒருகாளைமாடு மட்டும் வளர்க்கப்பட்டு வருகின்றது.

**சிக்கன கடனுதவிக் கூட்டுறவுச் சங்கம்**

சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கத்தின் பெண்மணி ஒருவர் தலைவராக இருப்பதுடன் 2009ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இச் சங்கத்தில் 48 உத்தியோகத்தர்கள் கடமை புரிகின்றார்கள்.

**இச்சங்கத்தின் சேவைகள்**

- பாடசாலைகளுக்குக் கிணறு அமைத்து வழங்கல்.
- பொது இடங்களுக்குக் கேற் அமைத்தல்.
- மாதத்தில் ஒரு தடவை கிராமத்தில் சிரமதானப் பணிசெய்தல்.
- உண்டியல் முறையிலான சேமிப்பை ஊக்குவித்தல்.
- வாரத்தில் இரண்டு தடவை உறுப்பினர் இல்லங்களுக்குத் தரிசனம் செய்தல்.
- நாளாந்த வங்கிக் கொடுக்கல் வாங்கல் நடவடிக்கை.

பல்வேறுபட்ட செயற்பாடு களை நடைமுறைப்படுத்துவதுடன் இதன் ஊடாக 84 இலட்சம் ரூபாவினைத் தனது சொந்த முதலாகக் கொண்டு இயங்கி வருவது சிறப்பம்சம் ஆகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஆட்டிறைச்சி பதனிடும் தொழிச்சாலை

தகைன் என்ற இடத்திலுள்ள ஆட்டிறைச்சி பதனிடும் தொழிற்சாலை அமைத்து செயற்படும் மாவட்ட கூட்டுறவு யூனியன் ஆடம்பரமான முறையில் இறைச்சியை பொதியிட்டு விற்பனை செய்வதுடன் நாளாந்தம் 150kg முதல் 200kg வரை அளவான ஆட்டுறைச்சியினை மாவட்ட தேவைக்கு வழங்குவதுடன் 250g வரையான இறைச்சியினை கவர்ச்சி யாக வடிவமைக்கப்பட்டு பைகளில் அடைத்து விநியோகித்து வருகின்றது. இதன் மூலம் பெருமளவான இலாபத்தினை இச்சங்கம் அடைந்துள்ளது.

நேபாளத்தின் காலணித்துவ ஆட்சி இல்லாது மன்னன் ஆட்சி முடிவுக்கு வரும் வரை கூட்டுறவுத் துறையானது பெரியளவிலான பொருளாதார வளங்களைத் தனதாக்கி செயற்படுவது சிறப்பான விடயமாக உள்ளது. குறிப்பாக மின்வழங்கல் சேவைகள், கோப்பித் தோட்டங்கள், மரக்கறித் தோட்டங்கள், பாடசாலை சிறுவர்களுக்கான பேருந்துச் சேவைகள், கோதுமை, பெரும் சீரகம், நச்சீரகம், மஞ்சள் பருப்பு, பூடு, பட்டாணி, பருப்பு, பேரீச்சம்பழம், பால் உற்பத்திப் பண்ணை, றப்பர் உற்பத்தித் தொழிற்சாலை, மரக்கறி விற்பனை நிலையங்கள், கல்வி அபிவிருத்தி எனப் பல பொருளாதார வளங்களையும் தன்னுடன் இணைத்துக் கொண்டதன் மூலம் ஆசியாவிலே கூட்டுறவின் பெரும் புரட்சியினை ஏற்படுத்தி யுள்ளது.

இத் திறன் விருத்திச் சுற்றுலாவின் பயனாக எமது கூட்டுறவு புத்தாக்கம் பெற்று புதுப்பொலிவுடன் மிளிரும் என்பது திண்ணமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பணியாளர்களின் பிரிவுபசார விழா



சார்க் நாடுகளின் கூட்டுறவாளர்கள் எமது சங்கத்திற்கு வருகை தந்த போது


பணியாளர்களின் பிரிவுபசார விழா


பணியாளர்களின் பிரிவுபசார விழா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கூட்டுறவின் குமுறல்

செல்வி. குகந்தினி தவராசா

நிழல் மரம் நான் என்பதால்
நித்தமும் என் கீழ்
இளைப்பாற பல பேர்
நின்று தான் செல்கின்றனர்
உறவுகளை கூட்டுவதால் - என்னை
கூட்டுறவு என்கினமோ
கூடிவிட்ட பிறகு – என்னை
கூச்சலிட்டு பிரிக்கினமோ.

நாடு தாண்டி சென்றாலும் என்னை
நல்லதோர் இயக்கம் என்பர்
சாடுதல் சொன்னாலும் - நான்
சளைத்து விட போவதில்லை
தேடுவோர் வேலை என்று பலர்
தேடி என்னை வந்தாலும்
காடு செல்லும் வரை நானும்
கலைத்ததும் கிடையாது.

வாடிக்கையாளரை நான்
வாசலோடு அனுப்பவில்லை
நாடி வருபவரும் - என்னை
நட்டம் என்று சொன்னதில்லை.

கோடி பேரை பார்த்ததுண்டு
கோசங்களை கேட்டதுண்டு
சாதனைகள் செய்தவரும் - என்
சரித்திரத்தில் பலர் உண்டு.

சாதி மதம் பார்த்ததில்லை
சண்டையையும் தூண்டவில்லை
நாதியற்ற உறவென்று – நீங்கள்
நடு தெருவில் விட்டாலும்
கூடி வாழும் என்று சொல்லி
கூட்டுறவை நான் வளர்க்க
காதியிலே நான் கூறும்
காலம் அதும் வந்ததுவோ

ஒற்றுமையுடன் சேர்ந்து நின்று
ஓங்கி குரல் எழுப்புங்கள்
கூட்டுறவின் சக்தி தன்னை
நாட்டுயர்வு ஆக்கிடுங்கள்
தாய்மடி தான் நானும்
தலை சாய்த்து பாருங்கள்
நல்லுயர்வு பெற நீங்கள்
கூட்டுறவை வளர்த்திடுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கூட்டுறவு வளர்ச்சியில் சமபங்காளிகள் அதன் பணியாளர்கள்

ஆக்கம் : திருமதி . க. சோபனா
அலுவலகப்பகுதி.

"பொதுப் பொருளாதாரத் தேவையுள்ள மக்கள் அவற்றை இலகுவில் நிறைவு செய்யும் பொருட்டு எவ்வித கட்டுப்பாடுமின்றி தன்னிச்சையாக தாமாக முன்வந்து மனிதர் என்ற ரீதியில் சமத்துவத்துடன் ஜனநாயக முறையில் ஒருங்கிணைந்து செயற்படும் முறையே கூட்டுறவாகும்." என கூட்டுறவு மேதை என வர்ணிக்கப்படும் கல்வேட் கூறியுள்ளார். இதனடிப்படையில் "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, ஒற்றுமை நீங்கின் அனைவர்க்கும் தாழ்வு" என்ற முதுமொழிகள் மக்கள் மத்தியில் கூட்டுறவானது பரந்துள்ள விதத்தையும். "ஒவ்வொருவரும் அனைவருக்கும் அனைவரும் ஒவ்வொருவருக்கும்" என்ற கூட்டுறவு தத்துவத்தையும் மிகச் சிறப்பாக எடுத்துக்காட்டுகின்றன.

இத்தகைய கூட்டுறவின் இயக்கத்திற்கு இரு சமபங்காளிகள் காரணகர்த்தாக்களாக விளங்குகின்றனர். மக்களால் ஜனநாயக முறையில் தெரிவு செய்யப்படும் பணிப்பாளர்களும், அவர்களால் பணிக்கமர்த்தப்படும் பணியாளர்களுமே ஆவர். முதலில் பணிப்பாளர் பற்றி நோக்குவதாயின் அவர்களே கூட்டுறவு தொடர்பான சகல தீர்மானங்களையும் எடுக்கும் அதிகாரம் உடையவர்களாகக் காணப்படுவர். அடுத்து பணியாளர் பற்றி நோக்குவதாயின் கூட்டுறவுக் கொள்கைகளை அமைத்து அதற்கமைய உருவாக்கப்பட்ட அமைப்பின் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்த என உருவாக்கப்படும் பணியாளர்களே கூட்டுறவுப் பணியாளர் ஆவர். பணியாளர்கள் தாம் கடமை செய்யும் அமைப்பின் நோக்கங்களை சரியாக உணர்ந்து செயற்படல் வேண்டும். அவ்வாறு உணர்ந்து செயற்பட்டால் மட்டுமே உரிய முறையில் கூட்டுறவை மேலும் வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்ல முடியும்.

இவ்வாறு பணியாளர் உணர்ந்து தமது அர்ப்பணிப்பான சேவையை வழங்கியதன் விளைவே கூட்டுறவுச் சங்கங்கள் சிலபடி முன்னோக்கிச் சென்றமைக்கான காரணமாகும். எவ்வாறெனில் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை எடுத்துக் கொண்டால் அவை ஆரம்பத்தில் நுகர்ச்சி வியாபாரத்தை மட்டுமே நோக்ககாக் கொண்டு செயற்பட்டு வந்தன. செலவீனங்களைக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுப்படுத்த கற்றுக் கொண்ட பணித் தொகுதி செலவீனங்களை கட்டுப் படுத்தி வருமானத்தை அதிகரித்ததன் முதற்படியாக பணியாளருக்கான சம்பள உயர்வை வழங்கியது. அடுத்து தமது நிறுவனத்தின் வருமானத்தை மேலும் அதிகரித்துக் கொண்ட பணித்தொகுதி பணியாளருக்கான அடிப்படைக் கட்டுமான வசதிகளில் மாற்றங்களை ஏற்படுத்த எண்ணி சகல அடிப்படை வசதிகளுடன் கூடியதான இட வசதியை விஸ்தீரணப்படுத்தியது. இத்துடன் மட்டும் தமது கூட்டுறவு நிறுவனத்தின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்த எண்ணாது முகவர் தொழிலையும் தனது பக்கத் தொழிலாக ஏற்று நடாத்தி வந்தமை கூட்டுறவு வளர்ச்சியின் அடுத்த கட்டமே. இவ்வாறாக தமது கூட்டுறவு நிறுவனத்தை நடாத்தி வரும் கால கட்டத்தில் அடுத்த சந்ததியினர்க்கும் வேலை வாய்ப்பை வழங்க எண்ணிய பணித்தொகுதி அரிசி ஆலை உற்பத்தி, நல்லெண்ணெய் உற்பத்தி, புடவை உற்பத்தி போன்ற பல உற்பத்தித் துறைகளை தன்னகத்தே உருவாக்கிக் கொண்டதன் விளைவே பாரிய கட்டமைப்பு கொண்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களாக வளர்ச்சி யடைந்துள்ளமை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சிப் படிகளில் ஏற்பட்ட ஓர் மைல் கல்லாகும். இத்தகைய மைல்கல்லை எட்டிய பெருமை பண்டத்தரிப்பு பரிஷ் ப. நோ. கூ. சங்கத்தையே சாரும்.

பனை, தென்னை வள அபிவிருத்திச் சங்கங்களாவன அவர்களின் வருமானத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு பணியாளர்களுக்கான அடிப்படை வசதிகளுடன் கூடிய சொந்தமான இடவசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்தமை பணியாளரால் இத்தகைய சங்கங்களின் வளர்ச்சியில் ஏற்பட்ட முதற்படி எனலாம். அத்துடன் மட்டும் நின்றுவிடாது வெல்ல உற்பத்தி, பனை யோலைசார் உற்பத்தி, தென்னந்தும்பு சார் உற்பத்திகள் போன்ற பனை, தென்னை உற்பத்திகள் என பல்வேறு பட்ட உற்பத்தித் துறைகளை தன்னகத்தே உருவாகி பாரிய கட்டமைப்புடன் கூடிய பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களாக இன்று மிளிர்வதற்குக் காரணம் பணியாளரின் அர்ப்பணிப்பான சேவையேயாகும்.

கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் பணியாளரின் அர்பணிப்பான சேவையே இன்று ஓர் பெரிய கூட்டுறவு அமைப்பதாக வளர்ச்சியடைந்து காணப்படக் காரணமாகும். எவ்வாறெனில் உரிய காலத்தில் பாலைக் கொள்வனவு செய்து உரிய காலப்பகுதியில் உற்பத்தித் துறைக்கு விநியோகம் செய்து, உற்பத்தித் துறையானது உரிய காலத்தில் உற்பத்தி செய்து பாதுகாப்பான உரிய முறைப்படி பொதி செய்து முடிவுப்பொருளை சந்தைக்கு அனுப்புகின்றது. இவ்வாறு செயற்பட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணியாளரின் தன்னலம் கருதாத சேவையே காரணமாகும். இத்தகைய பணியாளரின் அடித்தளமே இன்று கால்நடை வளர்போர் கூட்டுறவுச் சங்கங்கள் வளர்ச்சியடைந்து காணப்படக் காரணமாகும்.

இவ்வாறாகக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள், விவசாய உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற கூட்டுறவு அமைப்புக்களில் கடமையாற்றும் பணியாளர்களின் தன்னலமற்ற சேவையும் விசுவாசமுமே இன்று இத்தகைய கூட்டுறவு அமைப்புக்கள் வளர்ச்சியடைந்து காணப்பட அடித்தளமிடப்பட்டுள்ளன. இது இவ்வாறிருக்க சில அமைப்புக்களில் பணியாற்றும் பணியாளரின் விசுவாசமற்ற தன்மை காரணமாக அவ்வமைப்புக்கள் வீழ்ச்சிப் போக்கைக் கொண்டுள்ளதனைக் கண்கூடாகக் காணமுடிகிறது ஆதலால் பணியாளரின் அர்ப்பணிப்பான சேவையே இன்று கூட்டுறவு அமைப்புக்கள் வளர்ச்சியடைந்து காணப்படக் காரணமாகும்.

இவ்வாறாக வளர்ந்து சென்ற கூட்டுறவின் ஒவ்வொரு வளர்ச்சிப் படிக்கும் பணித் தொகுதியானது சரியானது முறையில் வித்திட்டுள்ளனர் என்பது கண்கூடு. பணித்தொகுதி என்பது இணைந்துள்ள சகல பணியாளர்களையும் உள்ளடக்கியதாகும். ஒவ்வொருவரும் கூட்டுறவுக் கொள்கைகளுக்கும் கூட்டுறவுச் சட்ட விதிகள், சுற்று நிருபங்களுக்கமைய நேர்மையாகவும், விசுவாசமாகவும் உழைத்து உரிய இலக்கை அடைதல் வேண்டும். ஆகவே பணியாளருடைய முழுமையான உழைப்பின் வெளிப்பாடு கூட்டுறவினுடைய வளர்ச்சிக்கு காரணமாக உள்ளதென்பது எல்லோராலும் உணரப்பட்ட ஒரு விடயம். ஒவ்வொரு பணியாளரும் ஒரு நாட்டை மீட்கும் விசுவாசமான போர் வீரன் போல் உழைப்பது அவசியம். இதன் மூலம் கூட்டுறவின் வளர்ச்சி யாவும் பணியாளர் கையிலேயே தங்கியுள்ளது என்பது எவ்வித மறுப்புமின்றி ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு விடயம்.

கூட்டுறவின் பூரண வளர்ச்சிக்கு ஆளுமை மிக்க கூட்டுறவுத் தலைமை மட்டுமன்றி, ஆளுமை மிக்க பணியாளர்களும் சமபங்காளிகளே என்பதை யாராலும் மறுக்கவோ மறைக்கவோ முடியாத உண்மை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண் கோப் புடவையகம்



- சேட், ரீசேட், சூட் வகைகள்
- கவுண், சாறி, சல்வார் வகைகள்
- லுங்கி, வேட்டி சால்வை வகைகள்
- சிறுவர் முதல் பெரியோர் வரை விரும்பி அணியும் நவநாகரீக ஆடைவகைகளை தெரிவு செய்து பெற்றுக் கொள்ள இன்றே நாட வேண்டிய இடம்

## பண் கோப் புடவையகம்



பண்டத்தரிப்பு பரிஷ் பல.நோ.கூட்டுறவுச் சங்கம்
பிரதான வீதி, பண்டத்தரிப்பு
தொலைபேசி : 021 321 2797



நுகர்ச்சி வியாபாரத்தில் முன்னோடி நிறுவனம்

**பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கம்**

தரமான பொருட்களை நியாயவிலையில்
வாங்கி மனநிறைவு பெற்றிட
எமது கிளை நிலையங்களை
என்றும் நாடுங்கள்......



நாகரிக யுகத்தில் நவீன வடிவமைப்பில்

## மக்கள் சேவையில் எமது கோப்சிற்றிகள்

அத்தியாவசிய அன்பளிப்புப் பொருட்களை ஒரே கூரையின் கீழ் நிறைந்த தரத்தில் குறைந்த விலையில் என்றும் பெற்றுக்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண் கோப் வெதுப்பகம்

பாண், பணிஸ், பிஸ்கற் வகைகள் தரமானவை, சுவையானவை

மலிவு விலையில்
மொத்தமாகவும்
சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ளலாம்.



# பண் கோப்

## அரிசி ஆலை, அரைக்கும் ஆலை

உடை. பச்சை, தீட்டல்பச்சை, குத்தரிசி வகைகளையும் அரிசி மா,
மஞ்சள் மா, மிளகாய்த் தூள் வகைகளையும்
மொத்தமாகவும்
சில்லறையாகவும் நியாய விலையில்
பெற்றுக் கொள்ளலாம்.



# பண் கோப் நல்லெண்ணெய்

மக்கள் மனம் கவர்ந்த உற்பத்திகள்,
மக்களுக்கான உற்பத்திகள்
பண் கோப் உற்பத்திகளே.......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரதேசத்தின் முன்னோடி கூட்டுறவாளர் S. கந்தையா J.P அவர்கள் (B.A. Honours – London)

இ. தங்கராஜா
முன்னாள் கணக்காளர்,
பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்.

இப்பிரதேசத்தின் கூட்டுறவுத் துறையின் முன்னோடியாகவும் இப் பிரதேசத்தின் கூட்டுறவு சார் மனப் பாங்கினை மக்கள் மத்தியில் கட்டி எழுப்பியவரும் தான் பிறந்த கிராமத்தின் கூட்டுறவுக் கட்டமைப்புக்களை உருவாக்கி மக்களின் மேம்பாட்டுக்கு உயர்வைத் தரும் கிராமிய மட்டத்தில் மட்டுமல்லாமல் பிரதேசமட்டம், மாவட்ட மட்டம், தேசிய மட்டங் களின் கூட்டுறவுக் கட்டமைப்புக்களில் பல்வேறு பதவிகளில் சேவையாற்றிய திரு. சு. கந்தையா அவர்கள் மாதகல் மண்ணில் பிறந்தார். இவர் ஆரம்பக் கல்வியைத் தொடர்ந்து உயர் கல்வி பெற்று ஆசிரியராக யா/ இளவாலை கென்றியரசர் கல்லூரியிலும், மாதகல்/ சென் யோசப் கல்லூரியிலும் பணியாற்றினார். இவர் ஆசிரியர் சேவைக் காலத்தில் லண்டன் பல்கலைக்கழகத்தில் B.A. சிறப்புப் பட்டத்தைப் பெற்றுக்கொண்ட முதல் மாதகல் பகுதியைச் சேர்ந்தவராவார். இவர் கல்விப் புலத்தில் தாக்கமான பணியினை மேற்கொண்டதோடு மட்டுமல்லாமல் சமூகப் பணியிலும் ஈடுபாடு கொண்டு விளங்கினார். மேலும் சமூக நிறுவனங்களில் பிரதிநித்துவம் வகித்தது மட்டு மல்லாமல் சமூக பணியிலும் ஈடுபட்டதால் இக்கிராமத்தின் முதலாவது சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டார். இவர் ஆசிரியர் பணியோடு ஆரம்பத்தில் கூட்டுறவுத் துறையில் ஈடுபாடு கொண்டிருந்தாலும் பிற்காலத்தில் ஆசிரியர் பணியை விடுத்து முழுமையாகத் தன்னைக் கூட்டுறவுத் துறையில் இணைத்துக் கொண்டார்.



தான் பிறந்த கிராமத்தின் மக்கள் அக்காலகட்டத்தில் சுயதேவையைப் பூர்த்தி செய்யும் விவசாயத்தையே செய்து கொண்டிருந்தார்கள். இவர் களினுடைய வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காக கூட்டுறவுத் துறையினூடாக பங்காற்ற முடியும் என்பதை உணர்ந்தார். அக்கால கட்டத்தில் மாதகலில் பிறந்த தம்பு மாஸ்ரர் என்பவர் இந்தியா சென்று 2 ஆண்டுகள் கூட்டுறவுத்துறை பற்றி கல்வி பயின்று மாதகல் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தையும், மாதகல் கிழக்கு ஐக்கிய நாணய சங்கத்தினையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்கி சிறந்த சேவை ஆற்றினார். இவரின் அடிச் சுவட்டைப் பின்பற்றி 1930களில் மாதகல் வடமேற்கு ஐக்கிய நாணய சங்கத்தை உருவாக்கி அதன் தலைவராகச் செயற்பட்டார். இச் சங்கத்தின் ஊடாக அக்காலகட்டத்தில் விவசாயிகள் எதிர் நோக்கிய முதலீட்டு செலவினங்களிற்காக குறைந்த வட்டியில் கடன்களை வழங்கி விவசாயிகளை ஊக்குவித்தார். மேலும் 1944ம் ஆண்டு மாதகல் மத்திய பண்டகசாலையைப் பதிவு செய்து அதன் தலைவராகச் செயற்பட்டார். இந் நிறுவனம் 1958ம் ஆண்டு அரசாங்கத்தின் சட்டத்திற்கு அமைவாக மாதகல் மத்திய பலநோக்குச் சங்கத்தை உருவாக்கி அதன் தலைவராகச் செயற்பட்டார். இச் சங்கமானது ஆரம்பத்தில் தனியார்க்குச் சொந்தமான கட்டடத்தில் இயங்கி வந்தது. சங்கத்தின் அங்கத்தவர்களின் ஒத்துழைப்போடு நிலம் கொள்வனவு செய்து புதிய கட்டிடத்தை உருவாக்கினர். இக் கட்டிடத் தொகுதியில் நுகர்ச்சி வியாபாரப் பகுதி, உற்பத்திப் பொருட்கள் கொள்வனவு செய்யும் பகுதி என இரு கட்டிட தொகுதிகள் அமைக்கப்பட்டன. நுகர்ச்சி வியாபாரத்தோடு வியாபாரதுறையை ஊக்குவிப்பதற்காக உற்பத்திப் பொருட்களைக் கொள்வனவு செய்வதையும் முன்னெடுத்தார். சிறப்பாக வெங்காயத்தை விவசாயிகளிடம் கொள்வனவு செய்து கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனத்தின் மூலம் சந்தைப்படுத்துகின்ற வசதிகளைப் பெற்றுக்கொடுத்தார். இச் செயற்பாட்டின் மூலம் விவசாயிகள் வெங்காயச் செய்கையில் ஊக்கமுடன் ஈடுபட்டு தங்களது வாழ்வாதாரத்தை உயர்த்தக் கூடிய வகையில் வருமானத்தைப் பெற்றுக் கொடுத்தார். மேலும் வெங்காயத்தைப் பொதி செய்யும் தேவைக்காக கூடு பின்னும் பயிற்சியை வழங்கி கூடு பின்னும் தொழிலை வளர்த்தது மட்டுமன்றி அக்கூடுகளை கொள்வனவு செய்து வெங்காயத்தைப் பொதி செய்யப் பயன்படுத்தினார். நுகர்ச்சி வியாபாரம், வெங்காயம் சந்தைப் படுத்தலால் கிடைத்த வருமானத்தைக் கொண்டு 150 அடி நீளமான கட்டிடத்தைச் சங்கத்திற்கு அமைத்தார். இக்கட்டிடத் தொகுதியில் கிராமிய வங்கி, உலோகப்பொருள் விற்பனை, விவசாய பொருள் விற்பனை, புடைவை விற்பனை, மகாநாட்டு மண்டபம் போன்ற பல்வேறு செயற்பாடுகளையும் கொண்டதாக அமைத்தார். 1965ம் ஆண்டில் யாழ் மாவட்டத்தில் அளவெட்டியிலும் மாதகலிலும் கிராமிய வங்கிகள் அமைக்கப்பட்டன. இக்கிராமிய வங்கியினை இச் சங்கத்திற்குப் பெற்றுக் கொடுத்த பெருமை இவரையே சாரும். இவ் வங்கி அமைப்பின் ஊடாக மக்களின் சேமிப்பை ஊக்குவித்ததோடு மட்டுமன்றி விவசாயிகளிடத்தில் விசேடமான சேமிப்பொன்றை உருவாக்கினார். மேலும் இவ்வங்கியின் ஊடாக வெங்காயச்செய்கை, நெற் செய்கையில் ஈடுபட்டவர்களுக்கு கடன் வழங்கியதோடு மட்டுமன்றி அடகு பிடித்து கடன் வழங்கும் திட்டத்தையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமாகாணத்திலிருந்து நேபாளம் சென்ற பொதுமுகாமையாளர் குழு



நேபாளத்திலிருந்து சங்கத்திற்கு வருகை தந்த கூட்டுறவாளர் குழு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமுல்படுத்தினார். இவ்வாறு கிராமிய வங்கிச் செயற்பாட்டைச் சிறப்பாக நெறிப்படுத்தியதன் விளைவு இன்றும் இக்கிராமிய வங்கி மாதகல் மக்களின் ஆதரவைப் பெற்று சிறப்பாக இயங்கி வருகின்றது. இவ்வாறே மாதகல் மத்திய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் 70ற்கு முன்பே பல நோக்கங்களையும் நிறைவு செய்கின்ற கட்டமைப்பைக் கொண்டு வளர்ந்து வந்தமைக்கும் இவரே உந்து சக்தியாக இருந்திருக்கின்றார்.

ஐம்பதுகளில் வெங்காயச் செய்கையை ஊக்குவிப்பதற்காக அரசு பல முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. விதை பொருட்களை வழங்கியும் வெங்காய விதை பொருட்களை விவசாயிகளுக்கு வழங்கியும் அவர்களின் உற்பத்தியை நஷ்டமடையாது கொள்வனவு செய்யும் முறையினை மேற்கொண்டது. இம்முறையினூடாக இப் பிரதேசத்தில் வாழுகின்ற விவசாயிகளின் நலன்களைப் பேணி அவர்களின் வாழ்வியலை வளம்படுத்த முடியுமென்பதைப் பிரதேசத்தின் கூட்டுறவுவாளரும் கருதிக் கொண்டார்கள். இந் நோக்கத்தை முன்னெடுப்பதற்காகப் பண்டத்தரிப்பு விளைபொருள் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கத்தை ஆரம்பித்தார்கள். இக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராக திரு. அ. கந்தையா அவர்கள் தெரிவு செய்யப் பட்டார். இவர் நீ. ஜேம்ஸ் அதிபர் அவர்களோடும் மேலும் பல கூட்டுற வாளர்களைச் சேர்த்துச் சங்கத்தை உருவாக்கினார். இதனூடாக வெங்காயத்தைக் கொள்வளவு செய்து கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனத்தினூடாக சந்தைப்படுத்தும் வசதிகளைப் பெற்றுக் கொடுத்தார்கள். இதனூடாக வெங்காயத்தைப் பயிர் செய்யும் ஆர்வத்தை வளர்த்ததோடு மட்டுமல்லாமல் அவர்கள் சிறந்த வருவாயைப் பெறவும் வழி செய்து கொடுத்தார்கள்.

1958ம் ஆண்டில் கூட்டுறவுச் சட்டத்தினூடாக இப் பிரதேசத்தின் கூட்டுறவை வளம்படுத்த வேண்டு மெனக் கருதி பிரதேசத்தின் கூட்டுற வாளர்களோடு கலந்துரையாடி பிரதேசத்தின் வளங்களையும் செயற்பாடுகளையும் முன்னெடுக்க வேண்டுமென்ற அடிப்படையில் வலி. மேற்கு சமாசத்திலிருந்து பிரிந்து 1958ம் ஆண்டு பண்டத்தரிப்பு கோவில்பற்று பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஐக்கிய சங்கங்களின் சமாசத்தினை உருவாக்கினார்கள். இச் சங்கத்தின் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு சங்கத்தின் உறுப்பினர்களாலும் ஏக மனதாக தலைவராகத் தெரிவு செய்யப் பட்டார். இச்சங்கம் உறுப்பினர் களுடான அர்ப்பணிப்பான ஒத்துழைப் போடு செயற்பட்டு சிறப்பான இலாபத்தை அடையமுடிந்தது. இச் சமாசத்தின் வளர்ச்சிப்பாதையில் பல விசேட விற்பனை நிலையங்கள், பாண்சாலை போன்ற கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டது. இவர் மாவட்ட மட்டம், தேசிய மட்டம் கூட்டுறவுக் கட்டமைப்புகளில் அங்கம் வகிப்பதற்காக திரு. நீ. ஜேம்ஸ் இடம் வழங்கி தொடர்ந்தும் உபதலைவராகச்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

செயற்பட்டார். இக்கட்டமைப்பு வளர்ச்சிக்கு நேரடியாகவும் ஆலோசனைகள் மூலமும் உந்துசக்தியாக இருந்தார். இக்கட்டமைப்பானது நுகர்ச்சி, வியாபாரம் சந்தைப்படுத்தும் பகுதி, பாண்சாலை, மின்தறி ஆலை போன்ற கட்டமைப்புக்களோடு 1971ம் ஆண்டிற்கு முன் இயங்கியது.

1971ம் ஆண்டு எமது பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் உருவாக்கப்பட்டது. இச் சங்கம் உருவாக்குவதற்கு சமாசத்தின் கட்டமைப்பு வளர்ச்சியும் மாதகல் கிராமத்தின் நிதிவளமும், கட்டிட வளமும், இப் பிரதேசத்தின் கூட்டுறவாளர்களின் அர்ப்பணிப்பான சேவையும் கூட்டறவாளர் S. கந்தையா, நீ. ஜேம்ஸ் போன்றோரின் முயற்சியும் இச்சங்கம் அமைவதற்கு ஏதுவாக இருந்தது. இச் சங்கத்தின் முதல் தலைவராக 1971ம் ஆண்டு S. கந்தையா அவர்கள் பொறுப்பேற்றார்.

இவரது சிறப்பான செயற்பாட்டின் காரணமாக சிறந்த வருவாயைப் பெற்றுக் கொண்டது. இக்கால கட்டத்தில் இளவாலைப் பகுதியில் இயங்குகின்ற கிளை நிலையங்களுக்கு அப்பகுதி கூட்டறவாளர்களோடு இணைந்து நிலம் கொள்வனவு செய்து கட்டிடங்களை அமைத்தும் சிறப்பாக வியாபாரங்களைச் செய்வதற்கு அடிகோலி வைத்தார். மேலும் மின்தறி ஆலைக்கு இந்தியாவிலிருந்து இயந்திரங்களை இறக்குமதி செய்து மின்தறி ஆலையை வளம்படுத்தினார். மேலும் விவசாயிகளின் நலன்களைப் பேணும் வகையில் தனியாரிடம் போட்டியிட்டு வெங்காயத்தைக் கொள்வனவு செய்து சந்தைப்படுத்தும் வாய்ப்பைப் பெற்றுக் கொடுத்து இக்கூட்டுறவுக் கட்டமைப்புக்களின் செயற்பாடுகளினால் இப் பிரதேசத்தின் விவசாயிகள் வெங்காயத்தை பிரதான பயிராக உற்பத்தி செய்வதற்கு வித்திட்டது. மேலும் இப் பிரதேச மக்கள் கூட்டுறவில் அக்கறையும் ஆர்வமும் கொண்டு விளங்குவதற்கு வித்திட்டவர்களின் முன்னோடியாகத் திகழ்ந்தனர். இச் சங்கத்தின் 1971ம் ஆண்டு தொடக்கம் 1982ம் ஆண்டு வரை தலைவர், உபதலைவர் பதவிகளில் வகித்து வந்தவர் அரசியலைக் கூட்டுறவுக்குள் புகுத்தக் கூடாது என்ற கொள்கையுடையவர். அரசியல் நியமனத்தால் சங்கத்தின் தலைவர் பதவியையே இராஜினாமா செய்து விட்டு விலகியவர். அரசியல்வாதி யான முன்னாள் பராளுமன்ற உறுப்பினர் தியாகராசா எம்.பி தலைவரானார். திரு. S. கந்தையா மாஸ்ரரின் கூட்டுறவுச் சேவையை உணர்ந்துகொண்ட பாராளுமன்ற உறுப்பினர் அவரது வீட்டுக்குச் சென்று சமாதானம் செய்து உபதலைவராகச் செயல்படவைத்தார். பாராளுமன்ற உறுப்பினர் விலகிச் செல்ல திரும்பவும் 1977ம் ஆண்டு தலைவர் பதவியைப் பொறுப்பேற்றார். இவரது சேவையானது சிறந்த கட்டமைப்புக்களைப் பிரதேசத்தில் உருவாக்கியது மட்டுமல்ல சிறந்த அர்ப்பணிப்புள்ள கூட்டுறவு மனப்பாங்குள்ள மக்களையும் பணியாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களையும் உருவாக்கத் துணை நின்றார்.

கிராம மட்டம் பிரதேச மட்டத்தையும் தாண்டியும் மாவட்ட மட்டத்தில் பல்வேறு கூட்டுறவு கட்டமைப்புகளில் அங்கம் வகித்தார். 1960ம் ஆண்டளவில் மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையின் இயக்குநராகத் தெரிவு செய்யப்பட்டார். அத்துடன் 1978ல் தெல்லிப்பளை கூட்டுறவு வைத்தியசாலையின் தலைவராக கூட்டுறவு உதவி ஆணையாளரால் நியமிக்கப்பட்டார். மேலும் 1958ல் ஐக்கிய நாணய சங்கத்தின் பிரதிநிதியாக வடபகுதி ஐக்கிய மேற்பார்வை சபைக்கு நிர்வாகசபை உறுப்பினரானார். தொடர்ந்து கூட்டுறவு பெரியார் வீரசிங்கத்தின் நெறிப்படுத்தலில் மேற்படி சங்கத்தின் கௌரவ செயலாள ராகக் கடமையாற்றினார். மேலும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதி நிதியாகக் கூட்டுறவு மாகாணசபை வங்கியில் நிர்வாகசபை உறுப்பினராகக் கடமையாற்றினார். வடபகுதி கூட்டுறவு விளைபொருள் உற்பத்திச் சங்கத்தின் இயக்குநராகவும் தலைவராகவும் கடமையாற்றினார். 1971ம் ஆண்டில் யாழ் மாவட்ட கூட்டுறவுத்துறைத் தலைவராகவும் இயக்குநராகவும் தலைமையாற்றினார். யாழ் மாவட்டத்தின் பல்வேறு கூட்டமைப்பு கட்டமைப்புக்களில் கடமையாற்றியதோடு மட்டுமன்றி கூட்டுறவுக் கல்வியை முன்னெடுத்துச் செல்லும் நோக்கமாகக் கூட்டுறவுக் கல்லூரியின் பகுதிநேர விரிவுரை யாளராகக் கடமையாற்றியுள்ளார்.

மாவட்ட மட்டத்தைத் தாண்டி தேசிய மட்டத்திலும் பல்வேறு கட்டமைப்புக்களில் செயலாற்றி யுள்ளதை நாம் அறியக் கூடியதாக உள்ளது. 1965 ஆண்டளவுகளில் யாழ் மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதியாகக் கூட்டுறவு மொத்த ஸ்தானத்திற்கு இயக்குநராகத் தெரிவு செய்யப்பட்டார். மேலும் 1972ல் யாழ் மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் பிரதி நிதியாக மக்கள் வங்கியின் இயக்குநர் சபைக்குத் தெரிவு செய்யப்பட்டார். மேலும் வடபகுதி உற்பத்தி சமாசத்தின் பிரதிநிதியாக இலங்கை சந்தைப் படுத்தும் சம்மேளனத்தில் நிர்வாக உத்தியோகத்தராக அங்கம் வகித்தார். 1972ல் இலங்கை கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனத்தின் உப தலைவராகவும் விளங்கினார். இவ்வாறு பல்வேறு கட்டங்களிலும் பல்வேறு கட்டமைப்புக்களில் பதவிகள் வகித்தது மட்டுமன்றி கிராமிய கூட்டுறவுத் துறையின் வளர்ச்சிக்கு வித்திட்டது மட்டுமன்றி கிராம மக்களின் கூட்டுறவு சார் மனப் பாங்கினை உருவாக்கியதன் விளைவாக இன்றும் பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மேல் அர்ப்பணிப்பும் விசுவாசமும் கொண்ட மக்கள் தொகுதியை உருவாக்க அத்திவாரமாக இருந்து 1987ம் ஆண்டில் இறைவனடி சேர்ந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அணையாத சமூக ஜோதி
# அமரர் நீ. யேம்ஸ்

திருமதி. அ. ந. தி. ஜெனிற்றா
முன்னாள் பிரதம எழுதுநர்

சில்லாலைக் கிராமத்தின் சமூக தொண்டனாகவும், சிறந்த கல்விமானாகவும், கூட்டுறவாளனா கவும் விளங்கிய திரு. நீ. ஜேம்ஸ் அவர்கள் சில்லாலையில் பிறந்தார். இவர் தன் ஆரம்பக் கல்வியோடு, உயர் கல்வியைப் பெற்று இந்திய பல்கலையில் B.A. பட்டத்தைப் பெற்றார். இவருடைய சிறந்த கல்விப்புலமையின் காரணமாக யாழ்ப்பாணத் திருச்சபையினர் மாதகல் சென். யோசவ் மகா வித்தியாலயத்தின் அதிபராக நியமித்தார்கள். இவர் பாடசாலைக் கல்வியில் அக்கறையோடும், அர்ப்பணிப்போடும் செயல்பட்டார். பல சிறந்த மாணவர்களை உருவாக்கினார். அக்கால கட்டத்தில் இக்கல்லூரியில் மாதகல், சில்லாலையைச் சேர்ந்த மாணவர்கள் பெருந்தொகையாகக் கல்வி கற்றார்கள். நீ. ஜேம்ஸ் அவர்களின் சிறந்த நிர்வாகத்தினால் அக்காலகட்டத்தில் சிறந்த கல்வியை இப்பாடசாலை வழங்கிய காரணத்தால் சில்லாலையில் இருக்கின்ற மாணவர்கள் அவர் கற்பிக்கின்ற பாடசாலையில் இணைந்து கல்வி கற்றதை அறிய முடிகிறது. மேலும் கல்வித் துறையில் கிராமத்து மாணவர்களுக்கு சிறந்த கல்வியை வழங்கி சமூகத்திற்குத் தன்னாலான பணியை மேற்கொள்ளத் தீர்மானித்தார்.



கல்வித்துறையில் தடம்பதித்து சிறப்பாக செயலாற்றியவர். சமூக முன்னேற்றத்திற்காகவும் தன்னை அர்ப்பணித்துச் செயல்பட்டார்.

கிராம மட்ட கூட்டுறவுத்துறையில் சிறப்பான சேவையாற்றி பிரதேச மட்ட கூட்டுறவுத் துறைக்கும் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். பண்டத்தரிப்பு, கோவில்பற்று விவசாயிகளின் நலன்களைப் பேணும் வகையில் பல செயற்பாடுகளுக்கு உறுதுணையாகின்றார். ஐம்பதுகளின் ஆரம்பத்தில் இப்பிரதேசத்தின் உற்பத்திப் பொருட்களை கொள்வனவு செய்து சந்தைப்படுத்துவதற்காக விளைபொருள் உற்பத்திச் சங்கத்தை மாதகல் சு. கந்தையா மாஸ்டருடன் இணைந்து உருவாக்கினார். இச்சங்கத்தினூடாக விவசாயிகள் பயன் பெறக்கூடிய வகையில் திட்டங்களை முன்னெடுத்தார். உற்பத்திப் பொருட்களை இலகுவான முறையில் சந்தைப்படுத்துவதற்கு முனைந்தார். இச்சங்கம் விவசாயிகளின் நலன்களைப் பேணியது மட்டுமல்லாமல் சங்கமும் இலாபகரமாக இயங்கிச் சிறப்பாக பிரதேசத்தில் செயல்பட்டு வந்த இவ்வமைப்பு 1958ல் மாற்றமடைந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சங்கம் 2012 ம் ஆண்டு மாவட்ட மட்டத்தில் முதலாம் பரிசு பெற்ற நிகழ்வு



பொதுமுகாமையாளர் திரு.க.வைரவநாதன் அவர்கள் கௌரவிக்கப்பட்டபோது



பொதுமுகாமையாளர் திரு.ஆ.நாகராஜா அவர்கள் கௌரவிக்கப்பட்டபோது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவரை காலமும் வலி மேற்கு பகுதியோடு இணைந்திருந்த எங்கள் பகுதி கூட்டறவு அமைப்புக்கள் தனியாக இயங்குவதற்கு முயற்சி எடுத்தவர்களில் ஒருவராக விளங்கினார். எமது பிரதேச மக்களின் பொருளாதாரத்தைக் கூட்டுறவுச் சபையினூடாக வளர்த்தெடுக்க முடியுமென நினைத்தார். இதனடிப்படையில் 1958ல் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் ஐக்கிய சமாசத்தைப் பண்டத்தரிப்பில் நிறுவினார்கள். இதன் உபதலைவராக 1962 வரை செயல்பட்டார். 1962ன் பின் இக்கட்டமைப்பின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டு 1969 வரை செயற்பட்டார். இக்கால கட்டமைப்பில் இவ்வமைப்பின் வளர்ச்சியில் பாரிய பங்காற்றியவராவார். இச்சங்கமானது மாதகல், இளவாலை, பண்டத்தரிப்பில் இருக்கின்ற அங்கத்துவ சங்கங்களுக்கு வியாபார பொருட்களைக் கொள்வனவு செய்து விற்பனை செய்வதற்கு வழங்கும் யூனியன்களாக விளங்கியது. இச்செயற்பாட்டினால் இச்சங்கம் இலாபத்தை நோக்கி செயல்பட்டதை அவதானிக்க முடிகிறது. இச்சங்கம் நுகர்ச்சி வியாபாரத்தை மேற்கொள்வதற்கு அங்கத்துவ சங்கத்தின் வியாபாரங்களை பாதிக்காத வகையில் சிறப்பு விற்பனை நிலையங்களை உருவாக்கியது. மக்களின் தேவைகளைக் கருத்தில் கொண்டு புடவை விற்பனை நிலையம், கட்டடப் பொருட்கள் போன்ற விற்பனை நிலையங்களையும் உருவாக்கியது. அக்காலகட்டத்தில் மக்கள் சங்கத்தினை முழுமையாக நம்பியிருந்தமையால் சங்க செயற்பாடுகள் முன்னேற்றகரமாக விளங்கியது. நுகர்ச்சி வியாபாரத்தினோடு உற்பத்திசார் முயற்சியினடியாக 1961ம் ஆண்டு பாண்சாலை அமைக்கப்பட்டது. இப்பாண்சாலை உற்பத்திகள் இப் பிரதேசமெங்கும் வழங்கியது மட்டுமல்லாமல் பிரதேசத்திற்கு அப்பாலும் விநியோகிக்கப்பட்டு சிறந்த இலாபமடைந்தார்கள். மேலும் பாண்சாலை உற்பத்திகளை யாழ் போதனா வைத்திய சாலைக்கும் வழங்கி வந்தமையை அறிய முடிகிறது. இத்தகைய செயற்பாடுகள் மட்டுமன்றி சோப் உற்பத்தி, அப்பள உற்பத்தியிலும் கவனம் செலுத்தியுள்ளார்கள் என்பதை அவர்களது அறிக்கை மூலம் அறிய முடிகிறது.

மேலும் சங்கத்தின் செயற்பாடுகள் மூலதன வளர்ச்சி காரணமாக சங்கம் மின்தறி ஆலையினை நிர்மாணிக்கத் தீர்மானித்தது. இதன் விளைவாக 1969ம் ஆண்டு மின்தறி ஆலையை உருவாக்கினார்கள். மின்தறி ஆலையின் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக மு. வைரமுத்து *J.P* அவர்களைக் கூட்டுறவுத் திணைக்களம் நியமனத் தலைவராக நியமித்தார்கள். அவர் சங்கங்களால் தெரிவு செய்யப்பட்ட தலைவர் திரு. நீ. ஜேம்ஸ் அவர்களுடன் இணைந்து செயல்பட்டார்கள். இவ்வாறு சங்கங்களின் சமாசம் பல நுகர்ச்சி வியாபாரம் பாண்சாலை, மின்தறி ஆலை போன்ற கட்டமைப்பின் வளர்ச்சியில் பாரிய பங்காற்றியவர் நீ. ஜேம்ஸ் அவர்களாவார். பண்டத்தரிப்பில் 1971ம் ஆண்டு இப் பிரதேசத்தை அங்கத்துவம் பெறுகின்ற சங்கம் பல கட்டமைப்புக்களைக் கொண்டு மக்களுக்கு சேவையாற்றி வருவதற்கு உறுதுணையாக விளங்கியவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவின் தலைவர்கள்
# (1971 தொடக்கம் இன்றுவரை)

**திரு. ஆ. தியாகராசா**



தங்கோடை கரைநகரைச் சேர்ந்த ச. ஆறுமுகம் தம்பதியர்க்கு 17.04.1916ம் திகதி அவதரித்த மகவே தியாகராசா ஆவார்.
இவர் 1945ம் ஆண்டு காரைநகர் இந்துக்கல்லூரியின் அதிபர் பதிவியைப் பொறுப்பேற்று அதன் உயர்வுக்கு பல வழிகளிலும் உழைத்தார் அது மட்டுமன்றி 1970ம் ஆண்டில் வட்டுக்கோட்டை தொகுதி மக்கள் பிரதிநிதியாக பாராளுமன்றுக்குத் தெரிவு செய்யப்பட்ட இவர் தமிழ் மக்களின் உயர்விற்காக பாடுபட்டார். அத்துடன் பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கத்தின் 1975 – 1976 காலப்பகுதிகளில் தலைவராக இருந்து சங்க வளர்ச்சிக்காக தனது அர்ப்பணிப்பான சேவையை வழங்கினார்.

**திரு. சோ. அருணாசலம்**

இவர் வலி மேற்கின் உதவி அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய காலத்தில் மக்களுக்கு பல வழிகளிலும் உதவி புரிந்துள்ளார். அதுமட்டுமன்றி 1977ம் ஆண்டுகளில் எமது சங்கத்தின் தலைவராக இருந்து சங்க வளர்ச்சிக்கு அரும்பணியாற்றியுள்ளார்.

**அமரர் திரு. வேலுப்பிள்ளை பத்மநாதன் (1979 - 1980)**

மாரீசன்கூடலைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் பண்டத்தரிப்பு ப.நோ. கூ. சங்கம் 1971ம் ஆண்டு புனரமைப்புச் செய்யப்படுவதற்கு முன்னர் அதனுடைய எல்லைப் பரப்புக்களில் தனித்தனி



சங்கங்களாக ஏறத்தாழ 1956ம் ஆண்டிற்கு பின்னர் அமைக்கப்பட்டன. அக்காலப் பகுதியில் சங்கமானது அங்கத்தவர்கள் உற்பத்தி செய்கின்ற வெங்காயத் தினைக் கொள்வனவு செய்து புகையிரதம் மூலம் கொழும்பு ச.தொ.ச நிறுவனத்திற்கு (C.W.E) அனுப்பி விற்பனை செய்யும் நடைமுறை கையாளப்பட்டது. இத் தொழிற்பாட்டிற்கு முன்னின்று உழைத்த பெருமை இவரையே சாரும். 1979ம் ஆண்டு காலப்பகுதியில் நடந்த ஜனநாயக முறையிலான தேர்தலில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவு செய்யப்பட்ட 5 பேர் கொண்ட நெறியாளர் குழுவில் தலைவராக திரு. வே. பத்மநாதன் அவர்கள் தெரிவு செய்யப்பட்டார். இதன் மூலம் புனரமைப்புக்கு பின் பண் பரிஷ் ப.நோ.கூ சங்கத்தின் ஜனநாயக ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட முதலாவது (மக்கள்) தலைவர் என்ற பெருமை இவரையே சாரும்.

**திரு. N. கந்தையா**

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் மேற்பார்வைக் கூட்டுறவுப் பரிசோதகராகக் கடமையாற்றினார். தனது ஓய்வின் பின் 1980ம் ஆண்டுகளில் எமது சங்கத் தலைவராக பதவி வகித்தது மட்டுமன்றி சங்க வளர்ச்சிக்கு வேண்டிய ஆலோசனைகளையும் வழங்கினார்.

**திரு.செ.இராசநாயகம்**

இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் ஆசிரியராகக் கடமையாற்றியுள்ளார். தனது ஓய்வின் பின் எனது சங்கத்தில் 1981 – 1982ம் ஆண்டுகளில் தலைவராக பதவி வகித்துள்ளார்.



**திரு. வே. சேனாதிராசா**



மாதகலைப் பிறப்பிடமாகக் கொண்டு பல கஷ்டங்களின் மத்தியிலும் முன்னேறி ஆசிரியராகக் கடமையாற்றியுள்ளார். தனது (ஆசிரியர் பணியின்) ஓய்வின் பின் 1983ம் ஆண்டுகளில் சங்கத்தலைவராக இருந்து கடமை யாற்றி உள்ளார்.

**திரு. ஆசீர்வாதம் யேசுதாசன்**
**(1984 - 1989)**

திரு. ஆசீர்வாதம் யேசுதாசன் அவர்கள் பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகக் கொண்டவர். பண் பரிஷ் ப.நோ. கூ. சங்கத்தில் 83,84 காலப்பகுதியில் உபதலைவராகக் இருந்து பின்பு 84 – 89 வரை தலைவராக கடமை யாற்றினார்.



பண் கிராமத்திலே கிராம அபிவிருத்திச் சங்கம், பயிர்செய்கைக் குழு உறுப்பினர், இணக்கசபை உறுப்பினர், அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திச் சங்க நிர்வாக உறுப்பினர் என கிராம அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டு கிராமத்திற்குப் பல சேவைகளை வழங்கினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அமரர் வீரகத்திப்பிள்ளை நவரத்தினராசா**

**(1989 - 1990)**

மாதகலைப் பிறப்பிடமாக் கொண்ட அமரர் வீ. நவரத்தினராசா அவர்கள் பண் பரிகஷ் கூ. சங்கத்தில் 1989ம் ஆண்டு காலப்பகுதியில் தலைவராகக் காணப்பட்டு பல சேவைகளை வழங்கினார். ஐக்கிய நாணய சங்கம், கூட்டுறவு ஊழியர் சங்கம் போன்றவற்றிலும் தலைமை வகித்து



மக்களுக்கு பல கடன் உதவிகளைப் பெற்றுக்கொடுத்து மக்கள் போற்ற வாழ்ந்தார். ஐக்கிய விளைபொருள் உற்பத்தி விற்பனைச் சங்கத்தின் தலைவராகச் செயற்பட்டுள்ள அன்னார் விவசாயிகளுக்குரிய காணிப்பதிவுகளை உரிய முறையில் மேற்கொண்டு மக்களுக்குப் பாரிய தொண்டாற்றினார்.

**திரு. கணபதிப்பிள்ளை கந்தசாமி**

**(1990- 1991)**

பிரான்பற்றில் பிறந்த அமரர் க. கந்தசாமி அவர்கள் 1969ல் உபதபால் அதிபராகக் கடமையாற்றினார். பண் பரிஷ் ப.நோ.கூ. சங்க இயக்குனர் சபைக்கு 1989ல் உபதலைவராகத் தெரிவு செய்யப்பட்டு செயற்பட்டு வந்தார். அக்காலச் சூழ்நிலையால் தலைவர் தனது பதவியை விட்டு விலகினார். அந்த வேளை திரு. க. கந்தசாமி அவர்கள் தலைவராகப் பொறுப்பேற்று



வழிநடத்தினார். 1991ம் ஆண்டு ஓய்வை விரும்பி பொதுச்சேவையி லிருந்து விலகினார்.

**திரு. மாணிக்கம் புலேந்திரன்**

**(1992 - 1994)**



வடலியடைப்பு, பண்டத்தரிப்பைச் சேர்ந்த திரு. மா. புலேந்திரன் அவர்கள் எமது சங்கத்தில் மிகவும் அக்கறையுடையவர். கிளை 11ன் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டு பின் பண் பரிஷ் ப.நோ. கூ .சங்கத்தின் நெறியாளர் குழுத் தலைவராகச் செயற்பட்டார். கோண்டாவில் புடவை நெசவாளர் சங்க நெறியாளர் குழுத் தலைவராகவும் யாழ் மாவட்ட கூ. சங்க சமாசத்தின் நெறியாளர் குழு உறுப் பினராகவும் செயற்பட்டார். தற்போது சண்டி லிப்பாய் பிரதேச சபை மத்தியஸ்தர் சபை உறுப்பினராகவும் செயற்பட்டு வருகிறார்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**திரு. சதாசிவம் செல்வரத்தினம்**

**(1995 - 2000, 2009 - 2011)**

பண்டத்தரிப்பில் பிறந்த திரு. ச. செல்வரத்தினம் அவர்கள் வடபகுதி விவசாய உற்பத்தி விற்பனைப் பகுதியில் பணி புரிந்தார். பண் பரிஷ் ப.நோ. கூ. சங்கத்தின் உபதலைவராக 1992 - 1995 வரை செயற்பட்டார். அதே காலத்தில்



யா.மா.வி.வி. சமாசத் தலைவராகவும் பணியாற்றினார். 1995 – 2000 காலப் பகுதியில் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். அக்காலத்தில் சி.க.ச. சமாச உபதலைவராகவும் பதவி வடமாகாண ப.நோ.கூ. சங்க பணிப்பாளர் சபையில் தெரிவு செய்யப் பட்டார். இன்று வரை உறுப்பினராக இருந்து வருகிறார். பல பொதுச் சேவைகளில் ஈடுபட்டாலும் கூட்டுறவுக்கே முன்னுரிமை கொடுத்து வருகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கத் தொழிற்பாடுகள்

| | | |
|---|---|---|
| 01. | நுகர்ச்சிப் பொருள் வியாபாரம் | |
| I. | மொத்த நிலையம் | 01 |
| II. | நுகர்ச்சிக் கிளைகள் | 12 |
| III. | புடவை விற்பனை நிலையம் | 01 |
| IV. | மினிகோப்சிற்றி நுகர்ச்சிக்கிளைகள் | 05 |
| 02. | கைத்தொழில் | |
| I. | நல்லெண்ணெய் உற்பத்தி | 01 |
| II. | வெதுப்பக உற்பத்தி | 01 |
| 03. | கூட்டுறவு நகர் | 01 |
| 04. | எரிபொருள் நிரப்பு நிலையம் | 01 |
| 05. | கிராமிய வங்கிப் பகுதி | 03 |
| 06. | வாகனங்கள் | |
| I. | லொறி | 02 |
| II. | வான் | 01 |
| III. | ரக்ரர் | 01 |
| 07. | அரிசி ஆலை | 01 |
| 08. | அரைக்குமாலை | 01 |
| 09. | விவசாயப் பொருள் சந்தைப்படுத்தல் | 01 |
| 10. | ஏனைய முயற்சிகள் | |
| I. | கதிரை வாடகைச் சேவைப்பகுதி | 01 |
| II. | நிழற்பிரதியிடும் சேவை | 01 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணியாளர்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணியாளர்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணியாளர்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணியாளர்கள்



# 25 வருட சேவையை நிறைவு செய்த பணியாளர்கள்



திரு. தி.சண்முகசுந்தரம், திரு. சி.ஞானச்சந்திரன், திரு. பொ.கமலேஸ்வரன், திரு. பொ.சிவஞானசுந்தரம்
திரு. தி.யோகநாதன், திரு. நா.செல்வரட்ணம், திருமதி மா.உருக்குமணிதேவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரவிக்கப்பட்ட கூட்டுறவாளர்கள்



திரு. சி.சபாபதிப்பிள்ளை
( கிளை 01)



திரு. சி.தவராசா
( கிளை 02 )



திரு. ஆ.இம்மனுவல்
( கிளை 03 )



திரு. வி.கற்கண்டு
( கிளை 04)



திரு. க.சாந்தகுமாரன்
( கிளை 05 )



திரு. பொ. சிவராசரத்தினம்
( கிளை 06 )



திரு. நாகரட்ணம்
( கிளை 07 )



திரு. கு.வரதராசா J.P
( கிளை 08)



திரு. . செல்வரத்தினம்
( கிளை 09 )



திரு. அ.நல்லையா
( கிளை 10 )

திரு. மா. கனகசிங்கம்
( கிளை 11)



திரு. ஞா.பேனாட்
( கிளை 12 )



திரு. க. கந்தசாமி J.P
( கிளை 13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்தகால தலைவர், பொதுமுகாமையாளர், கணக்காளர் விபரம்

| காலப்பகுதி | தலைவர் | பொதுமுகாமையாளர் | கணக்காளர் |
|---|---|---|---|
| 1973 - 1974 | நீ. யேம்ஸ் | இ. இராசசுந்தரம் | S. முருகேசு |
| 1975 - 1976 | அ. தியாகராசா | இ. இராசசுந்தரம் | கி. கி. இராசரட்ணம் |
| 1977 | சோ. அருணாசலம் | இ. இராசசுந்தரம் | கி. கி. இராசரட்ணம் |
| 1977 - 1978 | சு. கந்தையா | இ. இராசசுந்தரம் | கி. கி. இராசரட்ணம் |
| 1979 | வே. பத்மநாதன் | பொ. நவரத்தினம் | கி. கி. இராசரட்ணம் |
| 1980 | N. கந்தையா | பொ. நவரத்தினம் | மு.வேலாயுதம்பிள்ளை |
| | சு. கந்தையா | | |
| 1981 - 1982 | செ. இராசநாயகம் | பொ. நவரத்தினம் | மு.வேலாயுதம்பிள்ளை |
| 1983 | வே. சேனாதிராசா | பொ. நவரத்தினம் | மு.வேலாயுதம்பிள்ளை |
| 1984 - 1986 | அ. யேசுதாசன் | ம. யோசேப்பு | மு.வேலாயுதம்பிள்ளை |
| 1987 | அ. யேசுதாசன் | ம. யோசேப்பு | சி. நாகரட்ணம் |
| 1988 | அ. யேசுதாசன் | ம. யோசேப்பு | இ. தங்கராசா |
| 1989 | வீ. நவரத்தினராசா | சு. வைரவநாதன் | இ. தங்கராசா |
| 1990 - 1991 | க. கந்தசாமி | சு. வைரவநாதன் | இ. தங்கராசா |
| 1992 - 1994 | மா. புலேந்திரன் | சு. வைரவநாதன் | இ. தங்கராசா |
| 1995 - 2000 | ச. செல்வரத்தினம் | சு. வைரவநாதன் | இ. தங்கராசா |
| 2001 - 2006 | வி. சுப்பிரமணியம் | சு. வைரவநாதன் | இ. தங்கராசா |
| 2006 | வி. சுப்பிரமணியம் | இ. தங்கராசா | அ. கணேசலிங்கம் |
| 2006 - 2008 | சு. றெ. பி. சேவியர் | அ. நாகராசா | அ. கணேசலிங்கம் |
| 2009 | ச. செல்வரத்தினம் | அ. நாகராசா | அ. கணேசலிங்கம் |
| 2010 - 2011 | ச. செல்வரத்தினம் | அ. நாகராசா | இ. அழகராசா |
| 2012 | வி. சுப்பிரமணியம் | அ. நாகராசா | இ. அழகராசா |
| 2013 | வி. சுப்பிரமணியம் | க. நா. சபாரத்தினம் | அ. கிறிஸ்ரி ஜயந்தன் |
| 2014 | வி. சுப்பிரமணியம் | அ. கிறிஸ்ரி ஜயந்தன் | அ. கிறிஸ்ரி ஜயந்தன் |
| 2015 - இன்றுவரை | வி. சுப்பிரமணியம் | க. ரவிச்சந்திரன் | அ. கிறிஸ்ரி ஜயந்தன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது சங்கப் பணியாளர் விபரம்

| தொ.இல | பணியாளர் பெயர் | வகிக்கும் பதவி |
|---|---|---|
| 01 | திரு. க. ரவிச்சந்திரன் | பதில் பொது முகாமையாளர் |
| 02 | திரு. அ. கிறிஸ்ரி ஜயந்தன் | கணக்காளர் |
| 03 | திரு. பொ. தெய்வேந்திரம் | வங்கிச்சேவை முகாமையாளர் |
| 04 | திரு. செ. செல்வகுமார் | பதில் வர்த்தக முகாமையாளர் |
| 05 | திரு. ம. ஸ்ரீதரன் | பதில் உற்பத்தி முகாமையாளர் |
| 06 | திரு. ம. மரியஸ் றொமியூல்ட் றொஷான் | பதில் கணக்குப்பதிவாளர் |
| 07 | செல்வி ந. மீராதேவி | எழுதுநர் |
| 08 | செல்வி க. கிருஸ்ணரிஜி | எழுதுநர் |
| 09 | திரு. சி. லி. கி. ஜெயராசா | பதிவேடு காப்பாளர் |
| 10 | திரு. இ. குணசீலன் | பதில் காசாளர் |
| 11 | திருமதி க. சோபனா | எழுதுநர் |
| 12 | திருமதி ச. யசோதா | கிராமிய வங்கி முகாமையாளர் |
| 13 | சி. ஞானச்சந்திரன் | பதில் கிளைமேற்பார்வையாளர் |
| 14 | திருமதிச. கலையரசி | கிராமிய வங்கி முகாமையாளர் |
| 15 | திரு. பொ. கந்தசாமி | பதில் பாண்சாலை மூலப்பொருள் முகாமையாளர் |
| 16 | திரு. அ. சந்திரகுமார் | பாண் சுடுநர் |
| 17 | திரு. தா. சிவலிங்கம் | பாண் சுடுநர் |
| 18 | திரு. இ. கௌரிதாஸ் | பதில் களஞ்சியப் பொறுப்பாளர் |
| 19 | திரு. இ. மயூரதன் | கிளை முகாமையாளர் |
| 20 | திரு. தி. யோகநாதன் | கிளை முகாமையாளர் |
| 21 | திரு. கு. கஜரூபன் | பதில் விற்பனை உதவியாளர் |
| 22 | திரு. மு. ஸ்ரீமோகன் | கிளை முகாமையாளர் |
| 23 | திரு. மா. கிருஷ்ணகுமார் | விற்பனை உதவியாளர் |
| 24 | திரு. கி. நமசிவாயபண்டிதன் | பதில் கிளை முகாமையாளர் |
| 25 | திரு. மி. விக்ரர் வில்லியம் | கிளை முகாமையாளர் |
| 26 | திரு. பொ. சிவஞானசுந்தரம் | கிளை முகாமையாளர் |
| 27 | திரு. ம. டினேஸ் | பதில் கிளை முகாமையாளர் |
| 28 | திரு. பொ. கமலேஸ்வரன் | கிளை முகாமையாளர் |
| 29 | திரு. வி. சதீஸ்வரன் | கிளை முகாமையாளர் |
| 30 | திரு. சி. சந்திரகுமார் | கிளை முகாமையாளர் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| தொ.இல | பணியாளர் பெயர் | வகிக்கும் பதவி |
|---|---|---|
| 31 | திரு. பூ. லவக்குமார் | விற்பனை உதவியாளர். |
| 32 | திரு. இ.தயாபரன் | புடவை நிலைய முகாமையாளர் |
| 33 | திரு. வி. கேதீஸ்வரன் | கூட்டுறவு நகர் முகாமையாளர் |
| 34 | திரு. தி. சண்முகசுந்தரம் | சாரதி |
| 35 | திரு. தா. அன்பழகன் | சாரதி |
| 36 | திரு. த. தயாபரம் | வாகனச் சுத்திகரிப்பாளர் |
| 37 | திரு. சி. சிவகுமார் | பதில் காவலாளர் |
| 38 | திரு. ஆ. பத்மராஜ் | காவலாளர் |
| 39 | திரு. சு. குலேந்திரன் | எரிபொருள் நிரப்பு நிலைய முகாமையாளர் |
| 40 | திரு. சி. கஜரூபன் | எரிபொருள் நிரப்புனர் |
| 41 | திரு. து. சுதர்சன் | எரிபொருள் நிரப்புனர் |
| 42 | திரு. மே. சுதர்சன் | தற்காலிக எரிபொருள் நிரப்புனர் |
| 43 | திருமதி ம. லக்சிகா | தற்காலிக அங்.உற. அலுவலர் |
| 44 | செல்வி நா. மதுரா | எழுதுநர் |
| 45 | செல்வி அ. ஜெ. கேமதர்சினி | தற்காலிக எழுதுநர் |
| 46 | செல்வி ச. சுபோதினி | தற்காலிக எழுதுநர் |
| 47 | செல்வி பா.ரேணுகா | தற்காலிக எழுதுநர் |
| 48 | திரு. க. உதயகுமாரன் | எழுதுநர் |
| 49 | திரு. சி. ஞானபண்டிதன் | தற்காலிக எழுதுநர் |
| 50 | திரு. பா. அட்சரமூர்த்தி | தற்காலிக கிராமிய வங்கி முகாமையாளர் |
| 51 | செல்வி சி. கிருஸ்ணவேணி | எழுதுநர் |
| 52 | திருமதி த. மேகலா | தற்காலிக விற்பனை உதவியாளர் |
| 53 | செல்வி த. குஷாயினி | தற்காலிக விற்பனை உதவியாளர் |
| 54 | செ. ரவீந்திரன் | தற்காலிக விற்பனை உதவியாளர் |
| 55 | திரு. க. உலகேந்திரராசா | பதில் கிளை முகாமையாளர் |
| 56 | திரு. சி. மோகனதாஸ் | விற்பனை உதவியாளர் |
| 57 | திரு. த. ஜனார்த்தனன் | தற்காலிக விற்பனை உதவியாளர் |
| 58 | திரு. நே. சுயாகரன் | பதில் கிளை முகாமையாளர் |
| 59 | திரு. பு. பிரதீபன் | தற்காலிக விற்பனை உதவியாளர் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| தொ.இல | பணியாளர் பெயர் | வகிக்கும் பதவி |
|---|---|---|
| 60 | திரு. ப. சதீந்திரன் | பதில் கிளை முகாமையாளர் |
| 61 | திரு. நா. வரதலட்சுமணன் | தற்காலிக விற்பனை உதவியாளர் |
| 62 | திரு. ஜோ. குணசீலன் | தற்காலிக கிளை முகாமையாளர் |
| 63 | திரு. அ.ஜோ. கிளறன்ஸ் | தற்காலிக விற்பனை உதவியாளர் |
| 64 | திரு. கா. இந்திரலிங்கம் | தற்காலிக கிளை முகாமையாளர் |
| 65 | திரு. இ. தனுஜன் | தற்காலிக விற்பனை உதவியாளர் |
| 66 | செல்வி த. குகந்தினி | தற்காலிக விற்பனை உதவியாளர் |
| 67 | திரு. ச. திலகதாஸ் | பதில் கிளை முகாமையாளர் |
| 68 | திரு. ம. வினோதராஜ் | பதில் கிளை முகாமையாளர் |
| 69 | திரு. சி. கிருபாகரன் | விற்பனை உதவியாளர் |
| 70 | செல்வி தி. கஜனி | தற்காலிக விற்பனை உதவியாளர் |
| 71 | திரு. சி. புத்திசிகாமணி | பதில் அரைக்குமாலை முகாமையாளர் |
| 72 | திரு. த. பரந்தாமன் | தற்காலிக அரைக்குமாலை தொழிலாளி |
| 73 | திரு. சி. நவநீதன் | பதில் அரிசி ஆலைத் தொழிலாளி |
| 74 | திரு. சி. உதயசங்கர் | தற்காலிக அரிசி ஆலை முகாமையாளர் |
| 75 | திரு. ந. அரசரத்தினம் | தற்காலிக அரிசி ஆலைத் தொழிலாளி |
| 76 | திரு. க. லிங்கேஸ்வரன் | காவலாளி |
| 77 | திரு. அ. மதனராசன் | காவலாளி |
| 78 | திரு. சி.இராமகிருஸ்ணன் | பதில் காவலாளி |
| 79 | திரு. ம. பேரின்பநாதன் | தற்காலிக காவலாளி |
| 80 | திரு. க. தர்மகுலசிங்கம் | பதில் கிளை முகாமையாளர் |
| 81 | திரு. சு. உமாகாந் | தற்காலிக பாண் சுடுநர் |
| 82 | திரு. பி. யேசுதாசன் | தற்காலிக பாண்சாலை தொழிலாளி |
| 83 | திரு. அ. இரவீந்திரகுமார் | தற்காலிக அரிசி ஆலைத் தொழிலாளி |
| 84 | திரு. கி. மகாலிங்கம் | தொழிலாளர் |
| 85 | திரு. வே. சுப்பிரமணியம் | தொழிலாளர் |
| 86 | திரு. த. மகேந்திரன் | தொழிலாளர் |
| 87 | திரு. சு. விஷ்ணுராசா | தொழிலாளர் |
| 88 | திரு. க. கஜானந்தன் | தொழிலாளர் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# S.P.N. MOTORS

லங்கா LANKA
CEYPETCO
ENERGIZING THE FUTURE

**ஒயில், கிறிஸ், மற்றும் உராய்வு நீக்கிகளின் ஏக விநியோகஸ்தர்**




**கே.கே.எஸ் வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**தொ.இல: 021 222 9484**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நவம் ரெக்ஸ்

# NAVAM TEX

**Whole Sale & Retail Dealers**

*#33, Muneeswaran Road,*
*Jaffna.*
*Tel : 021 222 0895*
*021 222 2514*
*Branch :*
*#10, Jubilee Bazaar,*
*Jaffna.*



கல்யாண பட்டு வேஷ்டி,
சேலைகள், சிறுவர் முதல்
பெரியோர்களுக்கான சேட்,
சூட்வகைகள் அனைத்தும்
மொத்தமாகவும்,
சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளக்கூடிய
ஒரே ஸ்தாபனம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# S.V. MURUGESU

Agent for Unilever Sri Lanka Ltd.
Energizer Lanka Ltd.
Fonterra Brand Lanka (Pvt) Ltd.
Litro Gas Lanka Ltd.
Chevron Lubricants, Lanka Plc.
Cavadi mark Camphor.







No. 154, Hospital Road, Jaffna.
T.P. No : 021 222 8899
021 492 5831







பல்பொருள் வாணிபத்தில்
பல தசாப்தங்களையும்
கடந்து தனித்துவமான
நிறுவனம். (SVM)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறீ சிவராம் ரேடர்ஸ்




மொத்த சில்லறை வாணிபத்தில்
முதற்தர நிறுவனம்




248, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

தொ. இல : 021 222 8629
077 7560760


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பவானி களஞ்சியம்

## CIC ஏக விநியோகஸ்தர்கள்

*இராச வீதி,*

*நீர்வேலி*




**உர வகைகள், கிருமிநாசினிகள்**

**மொத்தமாகவும் சில்லறையாகவும்**

**பெற்றுக் கொள்ளலாம்.**




FRESH NUTRITIOUS & DELICIOUS
CIC AGRI
CIC AGRI FOODS




**தொ. இல : 021 222 2371**

**021 222 2372**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர் வெளியீட்டுக்கான அனுசரணையாளர்கள்

1. குகன் ஸ்ரோர்ஸ் - 180 (380), ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
2. அம்பாள் றேடர்ஸ் - 324, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
3. சிவா நறுமணப் பூங்கா - 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
4. சிறீ சிவராம் றேடேர்ஸ் - 248, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
5. நவம் ரெக்ஸ் ஸ்ரைல்ஸ் - 10, யூபிலி பசார், யாழ்ப்பாணம்.
6. பவானி களஞ்சியம் - இராச வீதி, நீர்வேலி, யாழ்ப்பாணம்.
7. ஏகாம்பரம் புடவை மாளிகை - 74 (7), பெரிய கடை, யாழ்ப்பாணம்.
8. S.V.M. - 154, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
9. கமல் பான்சி ஹவுஸ் - 09, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்.
10. கண்ணன் ஸ்ரோர்ஸ் - 268, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
11. S.P.N. Motors - 171, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
12. சித்தி விநாயகர் ஸ்ரோர்ஸ் - 66, 67, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
13. மதுரா மாளிகை - 221, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
14. றொஷானி தையல் நிலையம் - 263/01, இராஜகாரியார் வீதி, மானிப்பாய்.
15. ரூபா பன்முக வர்த்தகம் - ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
16. கமலேஸ்வரி ஸ்ரோர்ஸ் - 162, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
17. மக்கள் வங்கி - சங்கானை.
18. கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் - யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண் கோப்பின் இதயம் கனிந்த நன்றிகள்

எமது பண் பரிஷ் ப.நோ.கூ.சங்கத்தில் வெளியிடப்படும் இந்நூல் சிறப்பாக அமைய ஆசிச்செய்திகள் வழங்கிய நல்லூர் ஆதீன குரு முதல்வர் சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களுக்கும், யாழ் மறை மாவட்ட ஆயர் அருட்பணி யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களுக்கும், வாழ்த்துச்செய்தி வழங்கிய கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் கௌரவ. பொ. ஐங்கரநேசன் அவர்களுக்கும், யாழ் அரச அதிபர் திரு. நா. வேதநாயகம் அவர்களுக்கும், வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திருமதி. மதுமதி வசந்தகுமார் அவர்களுக்கும், கூட்டுறவு ஆணைக்குழுவின் செயலாளர் திரு. பொ. வாகீசன் அவர்களுக்கும், யாழ் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு.சு.கணேசு அவர்களுக்கும், கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. வி. கே. அருந்தவநாதன் அவர்களுக்கும், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி. யசோதா உதயகுமார் அவர்களுக்கும், சங்கானை மக்கள் வங்கி முகாமையாளர் திரு. மா. கலிஸ்ரஸ் அவர்களுக்கும், ஆக்கங்களை வழங்கிய கல்விமான்களுக்கும் பணியாளர்களுக்கும் மற்றும் இயங்குநர் சபை உறுப்பினர்களுக்கும்.

இந்நூல் சிறப்புற வெளிவர பெரும்பங்காற்றிய அனுசரணை யாளர்களுக்கும் இந்நூலை ஒழுங்கமைத்துத் தந்த செல்வி. கௌசலா சிவகுரு அவர்களுக்கும், அழகாக அச்சுப்பதிப்பு செய்து தந்த றூபன் பிறிண்டர்ஸ் நிறுவனத்திற்கும் எமது இதயம் கனிந்த நன்றிகள்.

நன்றி.

பண் பரிஷ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க

பணிப்பாளர்களும், பணியாளர்களும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





அச்சுப்பதிப்பு:

ரூபன் பிறிண்டேர்ஸ் ஆனைக்கோட்டை. 021 225 5566



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org